
கல்கி
LKI
.1967
காசு






அவனுக்கு ஒவ்வொரு நாளும் இன்க்ரிமின்* கொடுங்கள்

தீவிரமான பசியைத் தூண்டவும், படிப்படியாக எடையை அதிகரிக்கவும்

இன்க்ரிமின்* செரி பழத்தின் மணம் நிறைந்தது. l-லைசின் என்ற இன்றியமையாத பொருள் அடங்கியது. இந்தப் பொருள் உடல் நலத்திற்கு உகந்த பசியைத் தூண்டி, உணவின் முழுப்பயனையும் சிறந்த முறையில் பெற உடலுக்கு உதவுகிறது. இன்க்ரிமின்* சாப்பிட்டு வந்தால் உங்கள் குழந்தை வயிறாரச் சாப்பிடுவான். அவனுடைய எடையும் படிப்படியாக அதிகரிக்கும். ஒவ்வொரு நாளும் அவனுக்கு இன்க்ரிமின்* கொடுங்கள்- அவன் மனமாரச் சாப்பிடுவதையும் வளர்ச்சியடைவதையும் கண்டு மகிழுங்கள்!



இன்க்ரிமின்* வளரும் குழந்தைகளுக்கெனவே உண்டாக்கப்பட்ட ஒரு லெடர்லி தயாரிப்பு.

இன்க்ரிமின்*...
வளர்ச்சிக்கு
மிகவும் சிறந்தது

நாள் ஒன்றுக்கு:
இன்க்ரிமின்* ட்ராப்ஸ்: 10-20 துளிகள்.
இன்க்ரிமின்* ஸிரப்: ஒரு தேக்கரண்டி.

* ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்

Lederle லெடர்லி டிவிஷன். ஸயனமிட் இந்தியா லிமிடெட் CYANAMID

CHCI-34 TAM





அவனுக்கு போர்ஹான்ஸ் கொண்டு பற்களைத் தக்கபடி பாதுகாக்கும் முறையைக் கற்பிக்க வேண்டிய காலம்

உங்கள் குழந்தை தூரத்து இடங்களைப் பற்றி அறிய ஆவலாயிருக்கும் போது உங்களை நாடுகிறான். உங்களிடமிருந்து அவன் கற்கும் முக்கியமான விஷயங்கள் பல. அவற்றில் ஒன்று போர்ஹான்ஸ் பற்பசையினால் பற்களைத் தக்கபடி பராமரித்தல். போர்ஹான்ஸ் ஈறு உபாதைகளையும், பற்சிதைவையும், தடுக்க உதவுகிறது.

பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட போர்ஹான்ஸ் ஈறுகளைப் பாதுகாக்கும் விசேஷப் பொருள் கொண்டது. அது உங்களுக்கு மட்டுமின்றி உங்கள் குழந்தைக்கும் நல்லது. எனவே இன்றும், என்றும் பற்கோளாறுகளைத் தடுப்பது எப்படியென்று அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அவனை இரவிலும், காலையிலும் போர்ஹான்ஸ் உபயோகிக்கச் செய்யுங்கள். இப்பொழுதே அவனுக்கு ஆயுட்கால முழுதும் பற்களைப் பாதுகாக்கும் முறையைக் கற்றுக் கொடுங்கள்.



போர்ஹான்ஸினால்
பற்களைப் பாதுகாக்கும் முறையைக் கற்பிக்க இதுவே சிறந்த சமயம்



இலவசம்! "பற்களையும், ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்ற விவரமான வண்ணப் புத்தகம் 10 மொழிகளில்* கிடைக்கிறது. தபால் செலவுக்கு 10 பைசா தபால் தலைகளை அனுப்பவும்: மானேஜர், டென்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை நம்பர் 10031, பம்பாய்-1.

பெயர் ....

முகவரி ....

* வேண்டிய மொழியைக் கோடிட்டுக் காட்டுக: தமிழ், ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, உருது, வங்காளம், தெலுங்கு, மலையாளம் அல்லது கன்னடம்.
உங்கள் குழந்தை படிக்க வேண்டிய முக்கியமான புத்தகங்களுள் இதுவும் ஒன்று.
K :

போர்ஹான்ஸ் பற்பசை—பல்வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பெற்றது

CHGH-18 B TM

கல்கி

பொருளடக்கம்


பிலவங்க, சித்திரை 31 — மே 14

நினைவுத் திரையில்....

சென்ற வருஷம் டில்லியில் நடந்த ஆசிய மகாநாட்டுக்கு ஆசியாக் கண்டத்திலுள்ள எல்லாத் தேசங்களிலிருந்தும் பல பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

அவர்கள், காந்திஜியும் மேற்படி மகாநாட்டுக்கு வந்து ஏதாவது பேச வேண்டும் என்று விரும்பினார்கள். அவர்களுடைய விருப்பத்துக்கிணங்க காந்திஜியும் மேற்படி மகாநாட்டுக்கு வந்தார்.


காந்திஜி மேடைக்கு வந்ததும், மரியாதைக்கு அறிகுறியாக எல்லாப் பிரதிநிதிகளும் எழுந்து நின்றார்கள்.



ஓர் அமெரிக்கப் பத்திரிகை இதைப்பற்றிக் குறிப்பிடும்போது, "காந்திஜி வந்தார்; ஆசியாவே எழுந்தது!" என்று எழுதியிருந்தது.

"ஆசியா எழுந்தது" - கல்கி ஏப்ரல் 11, 1948.

திருமணம்




மணமகன்: மேஜர் கே. காந்திமோகன் பாரதி

மணமகள்: முத்துலட்சுமி பாரதி

வாழ்க மணமக்கள்!

திரு L. கிருஷ்ணசாமி பாரதி M. A. B. L. அவர்களின் இளைய மகன் செல்வன் மேஜர் K. காந்தி மோகன் பாரதி B. Sc. க்கும், திரு R. சோமசுந்தர பாரதி அவர்களின் மகள் செல்வி முத்துலட்சுமிபாரதிக்கும் சென்னை-31 ஆரிங்டன் சாலை 9, என்னுள்ள பாரதி பங்களாவில் 28-4-67ல் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அன்று நடந்த திருமணத்துக்கும் வரவேற்புக்கும் பிரமுகர்களும் நண்பர்களும் உறவினர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்தனர்.

பிரத்யட்ச தெய்வம்!


பக்தா! கவலே வேண்டாம். உணவுப் பிரச்னே ஒழிந்துவிடும்!
கருச் சிதைவு
அறுவை சிகிச்சை
பாம்பு
சுகாதார மந்திரி
மத்திய அரசு
RK

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 □ இதழ் 41



வயிறு வாழ்த்தும்

'ராணுவம் அதன் கால் மீது நடக்கவில்லை; வயிற்றின் மீதுதான் நடக்கிறது' என்று நெப்போலியன் கூறியது பொருள் பொதிந்ததோர் உண்மை. மக்களுக்கு நிரம்பத் தேசாபிமானம் இருக்கலாம்; உயர்ந்த வாழ்க்கைப் பண்புகளின் மீது பிடிப்பு இருக்கலாம்;. உன்னத இலட்சியங்களில் ஈடுபாடு இருக்கலாம். என்றாலும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத்தவிர மற்றவர்களுக்கு உணவுப் பிரச்னைதான் ஜீவாதாரமாக இருக்கும்.

நிறைந்த வயிறு நன்றி கொண்டு வாழ்த்துவது போல் எதுவும் வாழ்த்தாது. இதனால்தான் அன்னமளிப்பதற்கு நமது பண்பாட்டிலேயே தலையாய முக்கியத்துவம் இருக்கிறது. ஏழைகளுக்கு உணவிடுவதற்கு ஈடாக இன்னொரு தருமமில்லை என்று சாற்றியவர் ஸ்வாமி விவேகாநந்தர்.

இந்தப் புண்ணியப் பணியில் நமது தமிழக அரசு புரிந்துள்ள சாதனை போற்றுதலுக்குரியது. மே 15ந் தேதியிலிருந்து ஏழைகளுக்கு நியாய விலைக் கடைகளில் ஒரு ரூபாய் விலையில் ஒரு படி அரிசி வழங்கத் தி. மு. க. அரசு ஏற்பாடு செய்திருப்பதொன்றே போதும்—அது ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பதற்கு. 'ஒரு ரூபாய்க்காவது, படி அரிசியாவது? இது எங்கேனும் சாத்தியமா? வெறும் தேர்தல் வசியம்தான்' என்று காங்கிரஸார் வாய் ஓயாமல் கூறி வந்தனர். தாங்கள் உணவுத் துறையைக் கையாண்ட இலட்சணத்துக்குப் பின்னர் இந்தத் தமிழ் நாட்டில் எக்காலத்திலும் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கிடைக்கவே முடியாது என்று அவர்கள் அவ்வளவு சர்வ நிச்சயமாகக் கருதி வந்தார்கள். இன்று அவர்களையெல்லாம் வாயடைக்கச் செய்துவிட்டது அரசாங்கம். ரூபாய்க்குப் படி அரிசி என்பது தேர்தல்-வசியமல்ல; நடைமுறை சாத்தியமே என்று நிரூபித்து விட்டது.

சாதனையை வாழ்த்துகிறோம்; சாதித்தவர்களை வாழ்த்துகிறோம். லட்சோப லட்சம் வயிறுகள் நம்முடன் சேர்ந்து வாழ்த்தும். இவர்களில் காங்கிரஸ் அபிமானிகளும் இருப்பார்கள். அவர்கள் வாய்விட்டு வாழ்த்தாமலும் இருக்கலாம். எனினும், அவர்களின் நன்றி நிறைந்த வயிறு, தானே வாழ்த்தும்.

இரண்டு விஷயங்களில் இப்போது கவனம் செலுத்த வேண்டும். முதலாவதாக, ஏழைகளுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசியும், வசதியுள்ளவர்களுக்கு அதிக விலையில் தரமான அரிசியும் வழங்கப்படுமென முதன் மந்திரி கூறியுள்ளார். இதிலிருந்து ரூபாய்க்கு ஒரு படி விதம் வழங்கப்படும் அரிசியின் தரம் எப்படி இருக்குமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. புழுத்தும், மட்கலும், நொய்யும் கல்லும் மண்ணும் நிறைந்ததுமான ரேஷன் அரிசியின் 'தரம்' பிரசித்தி பெற்றது. இந்தத் 'தர'த்திலேயே உயர்ந்தது—தாழ்ந்தது என்று இரண்டு ரகம் இருக்குமாயின், தாழ்ந்த ரகம் எவ்வளவு மோசமாயிருக்குமோ என்று பயம் கொள்ள நியாயம் உண்டு. படி அரிசி ரூபாய்க்குக் கிடைத்ததே என்ற மகிழ்ச்சி ஏழை மக்களுக்கு ஏற்படாத அளவுக்குத் தரக் குறைவாக அது இருந்து விடக்கூடாது. மலிவாகத் தருவதால் மட்டமான சரக்கைத் தந்துவிடக் கூடாது. ஏழை — பணக்காரரிடையே விலையில் வித்தியாசம் வைத்தாலும் கூடச் சரக்கில் வித்தியாசம் இருப்பது வயிற்றின்' சம தருமத்துக்கு உகந்ததல்ல. இதில் ஏழை என்ற வர்க்கம் எந்த ஊதியத்துடன் முடிந்து விடுகிறது என்பதையும் இன்றைய நிலையில் நிச்சயப்படுத்த முடியாது. அதோடு, வருமானத்தை மட்டுமின்றி, அந்த வருமானத்திலும் ஜீவிக்க வேண்டிய குடும்ப அங்கத்தினரின் எண்ணிக்கையையும் கருத்தில் கொண்டே ஏழைமையை நிர்ணயிக்க வேண்டும்.

இரண்டாவதாக, ரூபாய்க்குப் படி அரிசி என்பதால் விவசாயிகளுக்கு அரசாங்கம் தரும் கொள்முதல் விலை பற்றி

யும் யோசிக்க வேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாத அளவுக்குக் கொள்முதல் விலையைக் குறைத்துவிடக் கூடாது. இப்போதே ரசாயன உரத்தின் விலை உயர்வால் அதிக உற்பத்திச் செலவு செய்ய வேண்டியுள்ள விவசாயிக்குக் கொள்முதல் விலையும் குறைக்கப்பட்டால் நெல் பயிர் விளைப்பதே பாதிக்கப்பட்டு, இன்றைவிட உக்கிரமான பஞ்சநிலை ஏற்படும். கொள்முதல் விலையைக் குறைக்காவிடில், மத்திய சர்க்காரிடம் மானியம் பெற்றாக வேண்டும். வங்கத்துக்குக் கைவிரித்து விட்ட தில்லி, தமிழகத்துக்கு மானியம் வழங்குமா என்பது கேள்வி. மானியம் தருவதெனில், அதற்கும் ஒரு வரம்பு உண்டு. எல்லா ராஜ்யங்களுக்கும் மானியம் தருவதெனில் வரிகளை உயர்த்தவே நேரிடும். ரூபாய்க்குப் படி அரிசி என்ற நிலையை விலைக் கட்டுப்பாட்டின் மூலமோ, மானியத்தின் மூலமோ சமாளிப்பது எளிதாக இருக்கலாம். ஏனெனில், அரிசியின் விலை குறைவதற்கு அனுசரணையாக மற்ற பல பண்டங்களின் விலையும் குறைவது இயற்கை. அதற்கிணையக் கொள்முதல் விலையை ஓரளவு குறைப்பதைக் கூட ஒப்புக் கொள்ளலாம். ஆனால் ரூபாய்க்கு மூன்று படி அரிசி தருவதே தங்கள் இறுதிக் குறிக்கோள் என்று முதல்வரவர்கள் கூறியிருப்பது விவசாயிகளுக்கோ, அல்லது வரி தரும் பொதுமக்களுக்கோ வேறுவிதங்களில் ஊறு ஏற்படுத்திவிடக் கூடும். பண வீக்கத்தால் எல்லாப் பண்டங்களின் விலையும் உயர்ந்து வருகையில் அரிசியின் விலையை அளவுக்கு மீறிச் செயற்கையாகக் குறைத்தால், உணவு உற்பத்திக்குக் குந்தகமாகி விடும்.

முதலமைச்சரின் நிதானமும், அடக்கமும், பொறுப்புணர்ச்சியும், எல்லா வர்க்கத்தினருக்கும் தரும நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்ற அவரது ஆர்வமும் நமக்கு நம்பிக்கையூட்டுகின்றன. அவரது அரசு வயிறுகளைக் குளிரச் செய்யுமே அன்றி ஒருகாலும் குமுறச் செய்யாது என்று திண்ணமாகக் கருதுவோம்.

இசைக்கு இருநூறு

தியாகராஜ ஸ்வாமிகள் என்று சொன்ன மாத்திரத்திலேயே கர்நாடக சங்கீத ரசிகர்களின் உள்ளத்தில் ஒரு பக்தியும், பெருமிதமும், நெகிழ்ச்சியும் தோன்றும். உஞ்சவிருத்திப் பிராமணராகத் திருவையாற்றில் ஏதோ ஒரு குடிலில் வாழ்ந்த அவர் தாம் எத்தகைய சாதனையை நிகழ்த்தி விட்டார்! சாதிக்க வேண்டும் என்ற நோக்கமில்லாமல் நாதமுண்டு — தன் ராமனுண்டு — அவனை வணங்க ராகமுண்டு என்றிருந்ததாலேயே அம்மகான் கர்நாடக சங்கீதத்தின் இதய ஸ்தானமாக ஆகிவிட்டார். நமது சங்கீதத்துக்குத் தியாகையர் வடிவம் தந்தது போல் உலகிலேயே எந்தத் தனிமனிதரும் எந்த இசை மரபுக்கும் வடிவம் தந்ததில்லை என்பது திண்ணம்.

நிர்மலமான வாழ்வு, பரிசுத்தமான பக்தி, அற்புதமான ராக பாவம், செறிப்பான சாகித்தியம், இனிப்பான ஒலி நயம் இவ்வைந்தும் பஞ்சாமிர்தமாகக் கலந்தது தியாகையரின் சங்கீதம். அவரது கிருதிகளில் பொங்கும் உணர்ச்சியானது, அதற்கேற்ற இசை வடிவத்துடனும், மொழி யமைப்புடனும் பிரிவறப் பிணைந்ததற்கு உவமை சொல்ல வேண்டுமானால் மலரின் வடிவமும் வண்ணமும் மணமும் ஒன்றாகத் தோன்றுவதைத்தான் சொல்லலாம். நாதப் பிரபஞ்சத்தின் நவமணிகளாகப் பிறந்த தமது பாடல்களினால் ராகரத்தின மாலிகை செய்து ராமனுக்குச் சூட்டிய சங்கீத சத்குரு ஸ்ரீ தியாகையர். அவர் அவதரித்த இருநூறாவது ஆண்டு விழா இம்மாதம் 4ந் தேதியிலிருந்து ஓராண்டுக்கு நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. வானொலியினரும், சங்கீத சபைகளும், கலைஞரும் சங்கீத மஹரிஷிக்கு அஞ்சலி செலுத்துகிறார்கள்.

இசைக் கலைஞர்கள் யாவரும் தியாகையரின் உன்னதப் பாங்குகளைத் தெளிந்து, சங்கீதம் என்பது மோட்ச சாதனம் என்பதை உணர்ந்து, சம்பிரதாய சுத்தத்துடன் நாத உபாசனை செய்தால் அதைவிடத் தியாகையருக்குச் சிறந்த உற்சவம் இருக்க முடியாது. ஐயர்வாளின் இருநூறாவது ஆண்டு விழா இதற்கு ஒரு தூண்டுகோலாக அமையுமென நம்புவோம்.

கல்வித்துறைக் குளறுபடிகள்

இரண்டு வாரங்களுக்குமுன் மும்மொழித் திட்டத்தை மாற்றி இரு மொழித் திட்டம் என்றார்கள். அடுத்து ஒரு சில தினங்களிலேயே 'இல்லை இல்லை; மும்மொழித் திட்டம் தான்' என்றார்கள். 'மும்மொழித் திட்டம் தான்; இருந்தாலும் முன்பு சொன்ன மும்மொழித் திட்டமல்ல' என்று கூறி இன்னமும் குட்டையை ஆழக் குழப்பியிருக்கிறார் மத்திய கல்வி மந்திரி ஸ்ரீ திரிகுண சென் அவர்கள்.

முன்பு சொன்ன மும்மொழித் திட்டத்தில் தாய்மொழி — ஆங்கிலம் — மற்றொரு இந்திய மொழி ஆகியன இடம் பெற்றிருந்தன. இப்போதோ கல்வி மந்திரி, தாய்மொழி-ஆட்சி மொழி ('ஹிந்திதான் ஆட்சி மொழியாக இருக்க முடியும்' என்று ஒரு ஷரத்தையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்)—மூன்றாவதாக மாணவர்கள் இஷ்டப்பட்டால், ஆங்கிலமோ வேறு இந்திய மொழியோ கற்பதே தமது மும்மொழித் திட்டம் என்கிறார். ஆங்கிலத்தை அகற்றி ஹிந்தி ஆதிக்கத்தை ஏற்படுத்துவதே இத்திட்டம் என்று சந்தேகமறத் தெரிகிறது. ஹிந்தியர்களின்

தாய்மொழியும் ஆட்சி மொழியும் ஒன்றேயானதால் அவர்கள் இரண்டு மொழிகள் கற்றால் போதும் என்ற நிலை ஏற்படும். மற்றவர்களுக்கு மும்மொழி என்ற பட்சபாத நிலைமை அமையும்.

இஷ்டப்பட்டால் மூன்றாம் மொழியாக ஆங்கிலம் படிக்கலாம் என்பது கல்விமந்திரியின் சிந்தனைக் குறைவைத்தான் குறிக்கிறது. பல்லாண்டுகள் கல்வித் துறையில் பெரும் பொறுப்புக்கள் வகித்த ஒருவர் இவ்வளவு அலட்சியமாக ஆங்கிலத்தை அப்புறப்படுத்த நினைப்பதை என்னவென்பது? 'ஐந்தே ஆண்டுகளில் எல்லாப் பகுதிகளிலும், அந்தந்தப் பிரதேச மொழியைக் கல்லூரி போதனை மொழியாகி விட்டால் எல்லாப் பிரச்னையும் தானே தீர்ந்துவிடும்; அப்புறம் ஆங்கிலம் எதற்கு?'' என்பது ஸ்ரீ சென் அவர்களின் நினைப்பு எனத் தெரிகிறது. ஐந்தாண்டுகளில் எல்லாப் பிரதேச மொழிகளும் கல்லூரி போதனைக்குகந்ததாகும் என முன்னாள் உப அத்தியட்சகர் ஒருவர் கூறுவது அதிசயம்! கல்விக் கமிஷனே இதற்குப் பத்தாண்டுகளாவது ஆகும் என்று கருத்து கொண்டிருந்தது. ''உலகத் தொடர்புக்கு ஒரு சாளரமாக ஆங்கிலம் இருப்பது நல்லது'' என்று அனைவரும் ஒப்புக் கொள்ளும்போது அது போதனை மொழியாக நீடிப்பதில் ஒரு குற்றமும் இல்லையே!

ஹிந்தி பேசாத மாநிலங்கள் மிகவும் உன்னிப்புடன் கவனிக்க வேண்டிய பிரச்னை இது. 'பிரதேச மொழிக்கு முக்கியத்துவம் தந்தால் அவர்கள் திருப்தி அடைந்துவிடுவார்கள்; அதைச் செய்து கையோடு கையாக ஹிந்தியைக் கட்டாயமாக்கி, ஆங்கிலத்தை மெல்ல விரட்டி விடலாம்' என்று ஹிந்தியர்கள் எண்ணுகிறார்கள் போலும். நாம் அவ்வளவு ஏமாளிகளல்ல என்பதை நிரூபிக்க வேண்டும். தாய்மொழியின் சிறப்பை நாம் உணர்ந்திருப்பது போலவே ஆங்கிலத்தின் உபயோகத்தையும் உணர்ந்திருக்கிறோம் என்று ஐயம் திரிபற எடுத்துக் காட்ட வேண்டும். சமீபத்தில் ஒரு விழாவில் பேசிய முதன்மந்திரி திரு அண்ணாதுரை அவர்கள், 'தமிழ் அழிந்தால் நாம் இல்லை; ஆங்கிலம் அழிந்து போனால் நம்முடைய உலகத் தொடர்பு அற்றுப் போகும்' என்று இரண்டின் அவசியத்தையும் எடுத்துக்காட்டியிருப்பது நமக்கு நம்பிக்கையூட்டுகிறது.

மந்திரியும் நிர்வாகமும்

மேதினவிழாவை யொட்டி வங்கத் தொழிலாளர் நல மந்திரி திரு கபோத் பானர்ஜி கல்கத்தா ரேடியோ நிலையத்தில் நிகழ்த்த இருந்த உரையில் இரண்டு அம்சங்கள் ஆட்சேபகரமானவை என்று எடுத்துக் கூறி நிலைய டைரக்டர் மாற்றச் சொல்லியிருக்கிறார். அதனை மந்திரி மாற்ற மறுத்துப் பெரும் பூசலைக் கிளப்பி யிருக்கிறார்.

மந்திரி தமது உரையில் காங்கிரஸின் பெயரைக் குறிப்பிட்டுத் தாக்கிப் பேசியிருப்பதை நிலைய டைரக்டர் ஆட்சேபித்திருக்கிறார். இதை மந்திரி நியாயமான விஷயம் என்று ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

வேறெதேனுமொரு ரேடியோ நிலையத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைக் குறிப்பிட்டுத் தாக்கிப் பேசினால் அந்த மந்திரி சும்மா இருப்பாரா? இதை உணராத அவர் ரகளை கட்டத் தொடங்கியது பரிதாபம்!

டைரக்டரின் மற்றோர் ஆட்சேபம், ''வோட்டுப் பெட்டியின் மூலம் ஒருபோதும் புரட்சி ஏற்பட்டதில்லை'' என்று மந்திரி தமது உரையின் ஓர் இடத்தில் குறிப்பிட்டிருந்ததே!

வோட்டுப் பெட்டியின் மூலம் காங்கிரஸைத் தோல்வியுறச் செய்துவிட்டு, மந்திரியாகியுள்ள ஒருவரே இப்படிப் பேசுகிறார்!

நமது அரசியல் சாஸனத்தின் மீது நம்பிக்கை இருப்பதாகப் பிரமாணம் செய்து கொண்டுவிட்டுப் பதவிக்கு வந்துள்ள மந்திரி, அதற்கு விரோதமாகப் பேசுதல் அழகா?

தவறுகளைச் சுட்டிக் காட்டியவருக்கு மந்திரி நன்றி தெரிவிக்க வேண்டும். மாறாக, ''ஒரு மந்திரியின் உரையை உருக்குலைக்க ரேடியோ டைரக்டருக்கு யார் அதிகாரம் கொடுத்தது? இந்த அவமானத்தை நான் சகிக்க முடியாது'' என்று கூறினாராம்!

நிலைய டைரக்டருக்குக் கொடுக்கப்பட்டுள்ள விதி முறைகளும், அவரது மனச்சாட்சியும் அவருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்தன! மந்திரியின் உரை அப்படியே ஒலிபரப்பு ஆகியிருந்தால்தான் அவமானம்!

பல கட்சிகளும் பண்புடன் ஒத்துவாழ வேண்டிய நிலை தேர்தலுக்குப் பின் அவசியமாகியுள்ளது. இதை மந்திரிமார் அனைவரும் மறவாதிருப்பாராக!

இரண்டு வெற்றிகள்

தமிழ் நாட்டில் திருமங்கலம் தொகுதியில் வோட்டுக்களைச் சிதற அடித்து, காங்கிரஸை ஜயிக்க வைத்து விட்டனர். எனினும், ஸ்ரீகாகுளம் தொகுதியில் காங்கிரஸுடன் நேரடிப் போட்டியில் ஆசார்ய ரங்கா பெருவாரியான வோட்டுக்கள் பெற்று வெற்றிவாகை சூடியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். மகிழ்ச்சியூட்டும் மற்றொரு வெற்றி ஆசாரிய கிருபளானியுடையது. சுயேச்சை அபேட்சகராக நின்றாலும் சுதந்திரக் கட்சியின் நட்சத்திரச் சின்னத்தின் மூலம்தான் வெற்றி பெற்றிருக்கிறார். இவ்விரு அங்கத்தினர்கள் மக்கட் சபையில் இடம் பெறுவது இருநூறு அரசியல் நிபுணர்கள் அங்கம் வகிப்பதற்குச் சமமாகும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

மத்திய சர்க்காரும், ராஜ்ய சர்க்கார்களும் அமைந்துள்ள புதிய ரீதியில் அரசியல் சாஸனத்தின் காப்பாளராக ராஷ்டிரபதி விளங்க வேண்டும் என்று சுதந்திரக்கட்சித் தலைவர்கள் கூறியிருப்பதைக் கண்டு பல வழக்கறிஞர்கள் பீதியடைந்திருக்கிறார்கள். மத்திய சர்க்காருக்கு வெறும் 'ரப்பர் ஸ்டாம்'பாக மட்டும் இல்லாத ராஷ்டிரபதியால் சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டுவிடும் என்று இவர்கள் பயப்படுவதாகத் தோன்றுகிறது. மத்திய சர்க்காருக்குத் துணையாயிருப்பதோடு ராஷ்டிரபதியவர்கள் ஒவ்வொரு ராஜ்யத்தின் கௌரவத்தையும் அந்தஸ்தையும் அரசியல் - பொருளாதாரத் தேவைகளையும் பரிபாலிப்பதால் ஏதோ வன்முறையான போக்கு ஏற்பட்டுவிடும் என ஏன் எண்ண வேண்டும்? சமஷ்டி அரசியலின் ஓர் அவசியமான சமரஸ அமைப்புக்கே இத்தகைய ராஷ்டிரபதி உதவுவார். மத்திய சர்க்காருக்கு மட்டும் அவர் ராஷ்டிரபதி அல்ல; இந்திய யூனியனில் உள்ள எல்லா ராஜ்யங்களுக்கும் அவரே ராஷ்டிரபதி என்பதை உணர்ந்தால் இதன் நியாயம் புரியும்.

ஃஃஃ

ஸ்டாலினின் மகள் ஸ்வெட்லேனா பற்றி உபயோகமற்ற சமாசாரங்கள் நிறையப் பிரசுரிக்கப்படுகின்றன. 'நியூயார்க் டைம்'ஸின் வாராந்தர விமரிசனம் கூறுவதைப் பிரசுரிப்பது உபயோகமாயிருக்குமெனக் கருதுகிறேன் :

> ஒரு காலத்தில் க்ரெம்லின் குட்டி ராஜகுமாரியாயிருந்த ஸ்வெட்லேனா அல்லிலுயேவா சுயவிருப்பத்தின் மீது அமெரிக்கா வந்திருக்கிறார் - தமது நாட்டில் காண முடியாத ஆன்ம சுதந்திரமும் சிந்தனைச் சுதந்திரமும் இங்கு பெறலாம் என்பதால்.
>
> புன்சிரிப்பும், தன்னம்பிக்கையும், ஜீவத்துடிப்பும் பொருந்திய 42 வயது ஸ்வெட்லேனாவிடம் அவரது தந்தை தாய் இருவரது சக்தி வாய்ந்த அம்சங்களிலும் ஓரளவைக் காண முடிந்தது.
>
> ஜோஸப் ஸ்டாலினைக் கண்டவர்களுக்கு, ஸ்ரீமதி ஸ்வெட்லேனாவின் சீரான, அழுத்தமான தோற்றத்திலும் பரவிய தோள்களிலும், தன்னம்பிக்கையைக் காட்டும் முகவாயின் முற்போக்கிலும், நேரான பேச்சிலும் தந்தையின் சாயலை உடலுக்குடன் காண முடிந்தது. அஞ்சாத்தக்க நேர்மையும், ஆதரிசமான கருணை உணர்வும், அநியாயத்தைக் கண்டு பொங்கும் ஆத்திரமும் படைத்தவர் ஸ்ரீமதி ஸ்வெட்லேனாவின் தாய் என்பதை அறிந்தவர்கள், அவரது மகள் தாயகத்திலிருந்து உத்வேகத்துடன் புறப்பட்டு வந்ததற்கான காரணங்களை விளக்கிய போது, அன்னையின் எதிரொலியையே — எதிரொலிக்கும் அதிகமாகவே — கண்டனர்.

ஃஃஃ

ஸ்வெட்லேனாவின் அன்னை அநியாயத்தைக் கண்டு பொங்கி ஆத்திரம் அடைவாரெனில், இந்தியாவின் மக்கட் தொகை அனைத்துக்கும் இழைக்கப்படும் அநியாயத்தைக் காண்போருக்கு எவ்வளவு ஆத்திரம் எழ வேண்டும்? தங்களது திறமையற்ற அதிகாரத்தின் கீழ் எல்லாத் துறைகளையும் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற தீர்க்க முடியாத வேட்கை கொண்ட திறமையற்ற ஒரு கும்பலின் திறமையற்ற அரசாங்கத்தை விட அறியா மக்களுக்கு எதனாலும் அதிக அநீதி இழைக்க முடியாது. 'எங்கும் பரவலான தகுதியின்மை' காணப்படுவதாகவும், 'தமது வள — வசதிகளைத் தாறுமாறாகத் துஷ்பிரயோஜனம் செய்வதாகவும்' விலகவிருக்கும் ராஷ்டிரபதி மறக்கவொண்ணாத வார்த்தைகளில் கூறிய தீர்ப்புத்தான் இன்றைய சூழ்நிலையில் மீண்டும் மீண்டும் மனத்தின் முன் வந்து உண்மை நிலையைக் காட்டுகிறது. பரவலான தகுதியின்மையாலும், வள — வசதிகளைத் துஷ்பிரயோஜனம் செய்ததாலும் பொருளாதார நிபுணர்களுக்கு குழப்பாடு ஏற்பட்டிருப்பது மட்டுமின்றி, பிரத்தியட்சமாக ஐம்பது கோடி மக்கள் துயரம் அநுபவிக்கிறார்கள். இதற்குக் காரணமானவர்களை மன்னிப்பதற்கில்லை.

கடுமையான பிரச்னைகளைத் தீர்ப்பதில் சர்க்காருக்கு உதவியும் உபதேசமும் தரக் கூடிய திறமையுள்ள ஒரு ராஷ்டிரபதியைத் தேர்ந்தெடுக்கும் முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கப்படுகிறது. 'தலைமை பீடத்திலிருந்து மாற்றுக் கருத்து எதுவும் வரக் கூடாது; தன் செய்கைகளுக்கே தலைமைப் பதவியும் தலை ஆட்ட வேண்டும்' என்று குறுகிய நோக்கு கொண்ட ஆளும் கட்சி விரும்புவதே குந்தகத்துக்குக் காரணம்.

காமகோடியின் கருணைமொழி



சிவன் வெளுப்பு; விஷ்ணு கறுப்பு. கறுப்பும் வெளுப்பும் ஒன்றுதான். இரண்டையும் வர்ணம் என்று சொல்வதில்லை. VIBGYOR என்று ஏழு வர்ணங்களைச் சொல்கிறார்களே, இவற்றில் கறுப்பு வெளுப்பு இரண்டும் இல்லை. இவ்விரண்டும் ஒன்றே. அதனால்தான் கரியும் வைரமும் ஒன்று என்கிறோம். பெயர்தான் வேறு. 'அரன் — நாரணன் நாமம்' என்றார் ஆழ்வார். பெயரை வைத்துக் கொண்டு சச்சரவு செய்ய வேண்டாம். இரண்டும் ஒரே வஸ்துதான்.



கைதேர்ந்த ஐரோப்பியக்
கலைநுட்பத்தைப்
பின்பலமாகக் கொண்டது
ஹெஸ் அலாரம் கடிகாரம்
— கணக்குநுட்பத்தோடு
நம்பிக்கைக்கு
உத்தரவாதம்
HES
கணக்குநுட்பமான அமைப்பு...
காலமெல்லாம் உழைப்பு.
செக்கோஸ்லோவேக்கிய நாட்டு
க்ரோனோடெக்னாவின் ஒத்து-
ழைப்போடு சர்வதேசத் தர
விதிப்புகளுக்கேற்பத் தயாரிக்
கப்பட்டது ஹெஸ்.
சுயமான விசைகளிலே
சகலவித மாடல்கள்.
11 12 1 2 3 4 5 6 7 8 9 10
புதிய 'ஸ்லாவியா'
மாடல்
முழுத் தகவல்பெற எழுதவும்: ஹிந்துஸ்தான் எக்விப்மெண்ட் ஸப்ளையர்ஸ்
லிட்., பம்பாய் 60.
வின்டாஸ்-HES. 13-77 TM



சங்கத் தமிழ்

திரு வி. வா. ஐ. குத்துவிளக்கு ஏற்றி இலக்கிய விழாவைத் தொடங்கி வைக்கிறார்.

[நமது நிருபர்]



[தமிழகத்துக்கு வெளியே தமிழ் பரப்பி வரும் எந்த இலக்கிய சங்கமும் காணாத தனி மகத்துவம் பம்பாய் தமிழ்ச் சங்கத்துக்கு உண்டு!

1967ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ந் தேதி ஞாயிற்றுக் கிழமை. பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழாவை யொட்டிய இலக்கிய நிகழ்ச் சிகள் அன்று ஆரம்பமாகின்றன என்று அறிந்து, தமிழ் அறிஞர் களின் இலக்கியச் சொற்பொழி வைக் காது குளிரக் கேட்டு விட்டு வரலாம் என்று ஸயா னுக்குச் சென்றேன்.

ஸயான் ஆஸ்பத்திரி வாச லில் உள்ள பஸ் நிறுத்தத்தில் இறங்கி, எதிரே உள்ள தமிழ்ச் சங்க மணிமண்டபத்தைநோக்கி நடந்தபோது அங்கிருந்து நாத கர ஒலி வருவதைக் கேட்டு ஒரு கணம் திடுக்கிட்டேன். என் அதிர்ச்சியை அதிகமாக்க, அப்பொழுது தமிழ்ச் சங்க வாசலில் இரண்டு மூன்று கார்கள் வந்து நின்றன. சம் பந்திகளைப் போல் உடை அணிந்த சிலர் அதிலிருந்து இறங்கினர். அவர்களைச் சங்க வாசலில் நிறுத்தித் தமிழ்ப் பெண்மணி ஒருத்தி ஆரத்தி சுற்றினாள். ஆண்கள் பலர் அவர்களை, "வர வேண்டும்; சம்பந்திகள் அனைவரும் வர வேண்டும்" என்று வரவேற்ற னர். வாசலின் இரு புறங்களி லும் இரண்டு மேஜைகள் மீது பன்னீர்ச் செம்பு, சந்தனம், கற்கண்டு, பூச்செண்டு முதலி யன வைக்கப்பட்டிருந்தன. ஒரு பக்கம் சில பெண்களும், மற்றொரு பக்கம் சில இளைஞர் களும் நின்று வந்தவர்களுக்குப் பன்னீர் தெளித்து, சந்தனம் பூசி, கற்கண்டும் பூச்செண்டும் வழங்கி உள்ளே அனுப்பி வைத்தனர்.

தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் திருமணங்கள் நடப்பதுண்டு. இந்தக் காட்சிகளைப் பார்த்த தும், "அடடா! இங்கே ஏதோ திருமணம் அல்லவா நடக்கிறது போல் இருக்கிறது!" என எண்ணிய நான், என் சந்தே கத்தைத் தெளிவு செய்து கொள்ள, அருகில் நின்ற ஒருவரிடம், "ஏன், ஸார்! இங்கே கல்யாணமா நடக்கி றது?" என்று கேட்டேன்.

"ஆமாம்; பார்த்தால் தெரியவில்லையா?"


"அப்படியானால் தமிழ்ச் சங்க வெள்ளி விழா எங்கே நடைபெறுகிறது?"

"அதுவும் இங்கேதான்."

"என்ன ஸார், ஆச்சரிய மாக இருக்கிறது? தங்கள்

திரு மகாதேவ சாஸ்திரி ஜோஷி அவர்களுக்கு திரு கே. எம். முன்ஷி அவர்கள் வெள்ளிக் குத்துவிளக்கு வழங்குகிறார்.





வெள்ளி விழாவுக்கு வருகை தந்த தமிழ்ப் பேரறிஞர்கள்—சங்கத்தின் அன்பளிப்பான வெள்ளிக் குத்துவிளக்குகளுடன்.

வெள்ளிவிழாவை நடத்தும் நாளில் கூடத் தமிழ்ச் சங்கத்தார், மணிமண்டபத்தைக் கல்யாணத்துக்கு வாடகைக்கு விட்டிருக்கிறார்களா?"

"வாடகைக்கு ஒன்றும் விடவில்லையே!" என்றார் அந்த அன்பர்.

"பின் இங்கே கல்யாணம் நடப்பதாகச் சொன்னீர்கள்!"

"ஆமாம்; சொன்னேன். ஆனால் இது தமிழ்ச் சங்கத்தின் கல்யாணந்தான்!"

"தமிழ்ச் சங்கத்தின் கல்யாணமா?"

"ஆமாம்; அதன் இருபத்தைந்தாம் ஆண்டுக் கல்யாணம்! அதாவது அதன் வெள்ளிவிழா வைபவம்!"

"வெள்ளிவிழா வைபவத்தையா இப்படிக் கல்யாண வைபவம் போல் நடத்துகிறார்கள்?"

"ஏன்? நடத்தக் கூடாதா என்ன? நடத்துவது யார் தெரியுமோ, இல்லையோ? பம்பாய்த் தமிழ்ச் சங்கம்!"

அந்த அன்பர் கூறியது முற்றும் உண்மை. ஏனென்றால், பம்பாய்த் தமிழ்ச் சங்கம், எப்பொழுது, எந்த விழாவை நடத்தினாலும், அதில் ஒரு தனித் தன்மை, ஒரு மகத்துவம் இருக்கும். ஏன்? இந்த வெள்ளிவிழாவே ஒரு தனித்துவம் பெற்றதுதானே? தமிழ் நாட்டுக்கு வெளியே தமிழ் பரப்பி வரும் எந்த இலக்கிய சங்கமும் கொண்டாடிராத ஒரு விசேஷம்தானே?

இரண்டு நாட்களுக்குமுன், இதே பம்பாய்த் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவை ஒட்டி நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளுள் முதல் நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய மகாராஷ்டிர மாநில மதுவிலக்கு அமைச்சர் திரு யாக்னிக் கூறிய சொற்கள், அப்பொழுது நினைவுக்கு வந்தன. அமைச்சர் யாக்னிக் சொன்னார்: "தமிழர்கள் ஊக்கம் மிக்கவர்கள்; உழைப்பாளிகள். அவர்கள் எதைச் செய்தாலும் அது ஒரு தனித் தன்மை பெற்றதாக இருக்கும்..."

ஆம்; அந்தத் தனித் தன்மைதான், பிழைப்புத் தேடி பம்பாய்க்கு வந்த தமிழ் மக்களின் இலக்கிய ஆர்வத்தைத் தூண்டிவிட்டு, இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் பம்பாயிலே, பம்பாய்த் தமிழ்ச் சங்கம் என்ற இந்த இலக்கியச் சங்கத்தைத் தோற்றுவிக்கச் செய்தது.

பம்பாய்வாழ் தமிழ் மக்கள்தாம், தங்கள் மாநிலத்துக்கு வெளியே தமிழ் இலக்கியமும், கலாசாரமும் பரவுவதற்கான நடவடிக்கைகளை முதலாவதாக மேற்கொண்டவர்கள். தமிழ் நாட்டிலிருந்து இசை வல்லுநர்களை வரவழைத்துக் கச்சேரிகள் நிகழ்த்தச் செய்யும் சபாக்களை வடநாட்டில் முதன் முதலாக நிறுவியவர்கள் பம்பாய்த் தமிழர்கள் தாம். தமிழ் நாடகங்களை நடத்துவதற்கென அமெச்சூர் சபாக்களை நிறுவியவர்களும் பம்பாய்த் தமிழ் மக்களே!

தமிழ் நாட்டிலிருந்து அறிஞர்களை வரவழைத்து இலக்கிய விழாக்களை நடத்தத் தொடங்கிய இலக்கிய சங்கம், பம்பாய்த் தமிழ்ச் சங்கம்தான். முதன் முதலாகத் தனக்கென ஒரு கட்டடத்தை எழுப்பிக் கொண்ட பெருமையும் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்துக்கே உரியது. அவ்வாறே, இசை, நடனம், நாடகம் ஆகிய துறைகளிலும் ஓர் இலக்கிய சங்கம் தொண்டாற்றி முத்தமிழையும் வளர்க்க முடியும் என்பதை முதன் முதலாகச் செய்து காட்டியதும் பம்பாய்த் தமிழ்ச் சங்கமே. தமிழகத்திலிருந்து இசை வல்லுநர்களையும் நாட்டியக் கலைஞர்களையும் நாடகக் குழுக்களையும் பம்பாய்க்கு வரவழைத்து அக்கலைகளை பம்பாய்வாழ் தமிழரும் மற்ற வடநாட்டாரும் கண்டு களிக்கப் பல சந்தர்ப்பங்களில் ஏற்பாடு செய்துள்ளது.

இவை மட்டுமா? முற்றும் தன் பெண் அங்கத்தினர்களையே கொண்டு நாடகம் நடத்தி வரும் தனிச் சிறப்பும் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்துக்கு உண்டு.

இப்படி எடுத்த காரியத்திலெல்லாம் ஒரு தனித் தன்மையும், வடநாட்டிலுள்ள பிற தமிழ்ச் சங்கங்களுக்கு வழிகாட்டும் தன்மையும் கொண்டு இருபத்தைந்து ஆண்டுகளாக இயங்கி வரும் பம்பாய்த் தமிழ்ச் சங்கம், தன் வெள்ளி விழாவைக் கொண்டாடித்

றென்றால், அந்த விழா நிகழ்ச்சிகள் சாதாரணமானவையாகவா இருந்து விடும்?

வெள்ளிவிழாவுக்கான முன்னேற்பாடுகள் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்குமுன்பே தொடங்கப்பட்டு விட்டன. மூன்று லட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டு, பம்பாயில் தமிழுக்கு ஓர் ஆலயம் எனக் கூறத்தக்க வகையில் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் மணிமண்டபம், முற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலம் சேகரித்த நிதியிலிருந்தே கட்டப்பட்டது. அதிலும் குறிப்பாக நாடக நிகழ்ச்சிகளே அதற்குப் பெருந்தொகை சேர்த்துத் தந்தவை. எனவே சங்க வெள்ளிவிழாவில் தமிழ் நாடகக் கலையை ஊக்குவிக்கும் வகையில் நாடகப் போட்டி ஒன்று நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. தமிழ்கூறும் நல்லுலகம் எங்கிலுமிருந்தும், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்தும் எழுத்தாளர்கள் இதில் கலந்து கொண்டனர். சுமார் நானூறு மேடை நாடகங்கள் இப்போட்டிக்கு வந்தன. நாடகத் துறையில் பல காலம் அநுபவம் பெற்ற திரு டி. கே. ஷண்முகம், திரு பி. எஸ். ராமையா, திரு எஸ். வெராமகிருஷ்ணன் ஆகியோர் இப்போட்டிக்கு நீதிபதிகளாக இருந்து நாடகங்களைத் தேர்ந்தெடுத்தனர். குமாரி சூடாமணி எழுதிய ''அருணோதயம்'' என்ற நாடகம் முதற் பரிசான ரூ. 1500ம் இலங்கையைச் சேர்ந்த திரு பரமசாமி எழுதிய ''எல்லாம் நிறைந்தவன்'' என்ற நாடகம் இரண்டாம் பரிசான 1000 ரூபாயும், சென்னை திரு அருணகிரி எழுதிய, ''காகிதப் பூ'' என்ற நாடகம் மூன்றாம் பரிசான 500 ரூபாயும் மற்றும் மூன்று நாடகங்கள் பரிவுப் பரிசான 200 ரூபாய் வீதமும் பெறுவதற்குரியன என்று நீதிபதிகள் தேர்ந்தெடுத்தனர். வெள்ளி விழா நாடகப் போட்டி முடிவுகளை அறிவிக்கச் சங்கம் சென்னை உட்லண்ட்ஸ் ஹோட்டலில் ஒரு விசேஷ நிகழ்ச்சியை நடத்தியது. இது தமிழ்நாட்டுக்கு வெளியேயுள்ள சங்கங்கள் எவையும் செய்திராத மற்றொரு தனித்தன்மை பெற்ற நிகழ்ச்சியாகும்.

வெள்ளி விழா ஏப்ரல் மாதம் 20ம் தேதியிலிருந்து 27ம் தேதி வரையில் நடைபெற்றது. முதல் மூன்று நாட்கள், கலை நிகழ்ச்சிகள். அவை பம்பாய் ஷண்முகானந்த சபா கலை அரங்கில் நடைபெற்றன. முதல்நாள் ''ஊழியன்'' என்ற நாடகம். இது முற்றும் சங்கத்தின் பெண் அங்கத்தினர்களே நடித்தது.

குடியாத்தம் திரு ஈ. நாகராஜ் என்பவர் எழுதிய இந்த நாடகத்தைச் சங்க உறுப்பினர் 'வேணு' டைரக்ட் செய்தார். கிராமாந்திர நிகழ்ச்சிகளைக் கொண்டு பின்னப்பட்டிருந்த இந்த நாடகத்தில் நூற்றுக்கு நூறு மார்க்குப் பெற்ற அம்சம் வேஷப் பொருத்தம். குறிப்பாக ஆண் வேடம் தாங்கிய வித்துவான் அ. கி. ஜெயலட்சுமி, கல்யாணி நரஸிம்மன், பத்மா கிருஷ்ணசாமி, காந்தாமணி ஆகியோரைக் கூறலாம். இந்த நாடகத்தைப் பற்றி அபிப்பிராயம் கூறிய ரசிகர் ஒருவர், ''குரல் மட்டும் பெண் குரலாக இல்லாவிட்டால், பெண்கள் ஆண் வேடம் தாங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்...'' என்றார்.

இந்த நாடகத்துக்குத்தான் மகாராஷ்டிர மாநிலத்து மதுவிலக்கு அமைச்சர் திரு யாக்னிக் தலைமை தாங்கினார். மொழி தெரியாததாலும், நாடகத்தில் ஒருசில காட்சிகளையே பார்த்ததாலும், அவர் நாடகத்தைப் பற்றிய தம் கருத்தை வெளியிடவில்லை. ஆனால் நான் கூறுகிறேன் — இது பம்பாய்த் தமிழ்ச் சங்கப் பெண் அங்கத்தினர்களுக்கு மற்றொரு வெற்றி !


நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்ற குமாரி சூடாமணியின் ''அருணோதயம்''— நாடகம் இரண்டாவது நாள் சங்கத்தின் ஆண்–பெண் உறுப்பினர்களால் நடிக்கப்பட்டது. ''ரமேஷ்'' என்பவரால் டைரக்ட் செய்யப்பட்ட, உணர்ச்சிமிக்க இந்த நாடகத்தில் கல்யாணியாக நடித்த திருமதி கல்யாணி நரஸிம்மனும், வித்யாவாக நடித்த திருமதி காந்தாமணியும், சங்கராக நடித்த பானுவும் ரசிகர்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தனர். நாடகத்தைப் பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ஒருவரிடம், ''நாடகம் எப்படி சார், இருந்தது?'' என்று கேட்டேன்.

''சே! சே! ரொம்ப மோசம்!'' என்றார்.

''என்ன சார், இப்படிச் சொல்லிவிட்டீர்கள் ?''

''பின் என்ன ? இதைப் போய் அமெச்சூர் நாடகம் என்று விளம்பரம் செய்திருக்கும் தமிழ்ச் சங்கத்தார் மோசமானவர்கள் இல்லையா ?'' என்றார் அந்த ரசிகர்.

''அருணோதயம்'' நாடகத்துக்கு பம்பாய் மேயர் டாக்டர் வியோன் டிஸௌஸா தலைமை தாங்கி நாடகப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கினார். இரண்டாவது பரிசு பெற்ற திரு பரமசாமியைக் கொழும்பிலிருந்தும் மூன்றாம் பரிசு பெற்ற திரு அருணகிரியைச் சென்னையிலிருந்தும் இதற்கெனவே வரவழைத்துச் சங்கம் பரிசு வழங்கிற்று. முதற் பரிசு பெற்ற குமாரி சூடாமணி நேரில் வர இயலவில்லை. நாடகப் போட்டி நீதிபதிகளையும் சங்கம் இந்த நாடகத்தின்போது கௌரவித்தது.



''அருணோதயம்'' நாடகத்தில் ஒரு காட்சி. இடமிருந்து வலம்: பானு, காந்தாமணி, சுபி

''அருணோதயம்'' நாடகத்தை பம்பாய்த் தமிழ்ச் சங்கம் புத்தகமாகவும் வெளியிட்டுள்ளது. அதனை அது அரங்கேற்றப் பெற்ற அன்றே பிரபல எழுத்தாளரும், சங்கத்தின் சென்னைப் பிரதிநிதியுமான ''மாயாவி'' வெளியிட்டார்.

மூன்றாம் நாள் கலை நிகழ்ச்சி ஸ்ரீமதி பத்மினி குழுவினர் அளித்த ராமாயண நாட்டிய நாடகம்.

நாட்டிய நாடக நிகழ்ச்சிக்கு முதுபெரும் குஜராத்தி எழுத்தாளர், திரு கே. எம். முன்ஷி அவர்கள் தலைமை தாங்கினார்கள். பம்பாய்த் தமிழ்ச் சங்கத்துக்கே உரிய மற்றொரு தனிச் சிறப்பாக, இந்த நாடகத்தின் போது பிரபல மராட்டிய அறிஞர் திரு மகாதேவ சாஸ்திரி ஜோஷி அவர்களுக்குத் திரு முன்ஷி, சங்கத்தின் அன்பளிப்பாக வெள்ளிக் குத்துவிளக்கு வழங்கினார்.

முன்ஷி அவர்கள் தம் தலைமை உரையில் சங்கத்தின் கலை, இலக்கியத் தொண்டுகளைப் பெரிதும் பாராட்டியதுடன், மராட்டி எழுத்தாளர் ஒருவருக்குக் குஜராத்தி எழுத்தாளர் ஒருவரைப் பரிசு வழங்கச் செய்த தமிழ்ச் சங்கத்தின் ஒருமைப்பாட்டு உணர்வைப் போற்றினார்.

மகாதேவ சாஸ்திரி ஜோஷி அவர்கள் மராட்டியில் நன்றியுரை நிகழ்த்தினார். தமிழின் தொன்மையையும், தமிழரின் பண்பாட்டு மேன்மையையும், திருக்குறள், கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற அற்புத நூல்களை அது பெற்றுள்ள பேற்றையும் அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

வெள்ளி விழாவின் இலக்கிய நிகழ்ச்சிகள் 23ம் தேதி காலையில் சங்க மணிமண்டபத்தில் ஆரம்பமாயின. இந்த இலக்கிய விழாவில் மற்றொரு புதுமையைச் செய்து, தனித்தன்மை பெற்றது பம்பாய்த் தமிழ்ச் சங்கம். ஆம்; தமிழ் நாட்டிலிருந்து எட்டு இலக்கிய அறிஞர்களை ஒருசேர வரவழைத்து இவ்விழாவிலே கலந்து கொள்ளச் செய்ததைத் தான் குறிப்பிடுகிறேன். டாக்டர் மு. வரதராசன், திரு கி. வா. ஜகந்நாதன், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், பேராசிரியர் ஆர். ராதாகிருஷ்ணன், பேராசிரியர் எஸ். ராமகிருஷ்ணன், பேராசிரியர் வி. சிவசுப்பிரமணியன், திரு எஸ். கே. ராமராஜன், திரு கே. கே. கோதண்டராமன் ஆகிய எண்மர் இவ்விழாவைச் சிறப்பித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை 9–30 மணிக்கு மலரலங்காரப் பின்னணி தாங்கிய மணி மண்டப மேடையிலே டாக்டர் மு. வ. தலைமை தாங்க, திரு கி. வா. ஜ. குத்து விளக்கு ஏற்றி இலக்கிய விழாவைத் தொடங்கி வைத்தார். சங்கத் தலைவர் டாக்டர் எஸ். எஸ். கிருஷ்ணன் அவர்கள் விழாவைச் சிறப்பிக்க வந்த தமிழ் அறிஞர்களை வரவேற்றார். அழகிய கலை வேலைப்பாடுகள் கொண்ட தங்க நிறச் சட்டத்தில், தங்க நிற எழுத்துக்களில் அச்சடிக்கப்பட்டிருந்த வரவேற்புப் பத்திரத்தைச் சங்கத்தின் சென்ற ஆண்டு உபதலைவர் ஆதிலட்சுமணன் அவர்கள் தமக்கே உரிய அழகான பாணியில் நயம்பட வாசித்தளித்தார். பின்னர் இலக்கியவிழா நிகழ்ச்சிகளிலே மற்றொரு புதுமையாக, ''நினைவு அலைகள்'' என்ற பொதுத் தலைப்பில் தமிழகத்திலிருந்து வந்திருந்த அறிஞர்கள் பேசினர். தங்கள் நினைவு அலைகளால் பம்பாய்த் தமிழரை மூழ்கடித்தனர்.

இலக்கிய விழா 23ம் தேதியிலிருந்து 28ம் தேதி வரையில் நடந்தது. இந்த ஐந்து நாள் விழாவுக்குச் சிகரம் போல் அமைந்த 'பட்டி மண்டபம்' தொடக்க தினத்தன்று மாலையில் நடைபெற்றது. பட்டி மண்டப நிகழ்ச்சி பம்பாய்க்குப் புதிதன்று. ஆனால் தமிழ்நாட்டு இலக்கிய அறிஞர்கள், அதிலும், காரைக்குடி போன்ற இடங்களில் நடத்தப்படும் பிரபல பட்டி மண்டபங்களில் கலந்து கொண்டவர் இந்தப் பட்டி மண்டபத்திலும் கலந்து கொண்டது பம்பாய்க்கு ஒரு புதுமை. பட்டி மண்டபத்தைப் போல் பம்பாய்வாசிகளைக் கவரும் இலக்கிய நிகழ்ச்சி வேறு கிடையாது. அது தெரிந்துதானோ சங்கம் தொடங்கிய நாளிலிருந்து அதைப் பின்னின்று நடத்தி வரும் சூத்திரதாரியான திரு எஸ். கந்தசாமி அவர்களும், அவருடைய சகாக்களும் 'காரைக்குடி பாணி'யிலேயே இப்படி ஒரு பட்டி மண்டபத்துக்கு ஏற்பாடு செய்தனர். இவர்கள் நோக்கம் வீண் போகவில்லை. நாற்பது மைல்களுக்கு அப்பால் உள்ள கல்யாணிலிருந்தும், அதற்கு அப்பாலுள்ள அம்பர்நாத் போன்ற இடங்களிலிருந்துங்கூட தமிழ் இலக்கிய ரசிகர்கள் இந்தப் பட்டி மண்டபச் சொற்போராட்டத்தைக் காணக் குழுமியிருந்தனர். சுமார் ஆயிரம் பேர்களுக்கு இடமளிக்கக்கூடிய பம்பாய்த் தமிழ்ச் சங்க மணிமண்டபம் அன்று மூவாயிரத்துக்கும் அதிகமான மக்களுக்கு இடமளிக்க வேண்டியதாயிற்று.

டாக்டர் மு. வ. நடுவராக இருந்து நடத்தி வைத்த இந்தப் பட்டி மண்டபத்தில் விவாதிக்கப்பட்ட பொருள், ''சிறந்த தம்பி பரதனா, இலக்குவனா?'' என்பதாகும். திரு கி. வா. ஜ. அவர்கள் தலைமையில் திரு சிவசுப்பிரமணியம், திரு ஆர். ராதாகிருஷ்ணன், உள்ளூர் அறிஞர் திரு எஸ். நாராயணசாமி ஆகியோர் பரதன் கட்சி; திரு எஸ். ராமகிருஷ்ணன் தலைமையில், திரு எஸ். கே. ராமராஜன், திரு கே. கே. கோதண்டராமன் உள்ளூர் இலக்கிய அறிஞர் ஸ்ரீமதி கமலா சங்கர் ஆகியோர் லட்சுமணன் கட்சி.

கட்சித் தலைவர்கள் இருவரும் முதலில் பேசினர். கம்பராமாயணத்திலிருந்து பல நுணுக்கமான மேற்கோள்களை எடுத்துக் காட்டிக் குணங்களால் சிறந்தவன் பரதனே என்று நிலைநாட்டினார் திரு கி. வா. ஜ., திரு எஸ். ராமகிருஷ்ணன், சிறந்த தம்பியாவதற்குக் குணச் சிறப்பு மட்டும் போதாது என்று எதிர்வாதம் செய்து, ''தன்னேரில்லாத தம்பி'' என்று கம்பனே இலக்குவனைப் புகழ்ந்துரைத்திருப்பதால் அவனே சிறந்த தம்பி என்று தம் கட்சியை ஸ்தாபித்தார்.

அடுத்துப் பேசிய மயிலம் சிவசுப்பிரமணியன், லட்சுமணன் எப்பொழுதும் ராமனோடு இருந்தும், ராமனின் உள்ளப் போக்கை அறிந்து கொள்ளாமல், அவன் நினைவுக்கு மாறாக நடந்து கொண்ட நிகழ்ச்சிகள் பலவற்றை மேற்கோள் காட்டி,

உங்களுக்குத் தெரியுமா?

அமெரிக்கர்கள் தங்கள் குழந்தைகளின் வளர்ப்புக்கென்று ஆண்டுதோறும் 27 கோடி டாலர்கள் செலவழிக்கிறார்கள் என்றால் ஆச்சரியப்பட வேண்டாம்.

அவர்கள் தங்கள் வளர்ப்புப் பிராணிகளின் நலனுக்கென்று செலவு செய்யும் பணம் எவ்வளவு தெரியுமா?

ஆண்டுக்கு 50 கோடி டாலர்கள்!

பாபு - ஆதாரம்: "பேஜண்டு"

அப்படிப்பட்ட லட்சுமணன் எப்படிச் சிறந்த தம்பியாக முடியும் என்று வாதிட்டார்.

இவர் கூற்றை மறுத்துப் பேசிய திருமதி கமலாசங்கர், லட்சுமணன் பிரும்மாஸ்திரத்தால் கட்டுண்டு கிடந்த போது, "இவன் போனபின் யார் இருக்கிறார்கள் எனக்கு?" என்று ராமன் புலம்பி அழுததைக் குறிப்பிட்டு, ஆதலால் லட்சுமணனே ராமனுக்குச் சிறந்த தம்பி என்று வலியுறுத்தினார்.

கோசலை ராமனிடம், "பரதன் உன்னைவிட மும்மடங்கு உயர்ந்தவன்" என்று கூறியிருப்பதையும், "ஆயிரம் ராமனும் ஆவரோ இவனுக்கு இணை" என்ற கம்பன் கூற்றையும், மீண்டும் கோசலையே பரதன் நந்திக் கிராமத்தில் தீக்குளிக்க முயன்ற போது, "கோடி ராமனும் உனக்கு இணை ஆவரோ?" என்று கூறியிருப்பதையும் திரு நாராயணசாமி கலைபட எடுத்துரைத்தார்.

ராமனே லட்சுமணனை, "என் ஆருயிர்" என்றும், "குற்றமற்ற தம்பி" என்றும், "நான் மற்றொரு பிறப்பு எடுப்பேனாகில் அவன் முன்னவனாகப் பிறந்து நான் அவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும்" என்றும் கூறியிருப்பதை அடுத்துப் பேசிய திரு ராமராஜன் விளக்கி, "இவ்வளவுக்குப் பிறகும் லட்சுமணனே சிறந்த தம்பி என்பதில் ஐயமும் உண்டோ?" என்று கேட்டார்.

திரு ராதாகிருஷ்ணன், திரு கோதண்டராமன் ஆகிய இருவரும் பேசிய பின்னர் இறுதியாகக் கட்சித் தலைவர்கள் தங்கள் கட்சியினர் பேசிய வாதங்களைத் தொகுத்து உரைத்தனர். நடுவர் தீர்ப்பு வழங்கினார். ஆனால் தீர்ப்பு வழங்குமுன் சங்கம் அவர்களுடைய அந்த மகத்தான சொற்போருக்கு ஒரு சிறந்த பரிசாக, சுமார் ஒன்றரை அடி உயரமுள்ள வெள்ளிக் குத்துவிளக்குகளை, தமிழ்ப் பேரறிஞர்கள் எட்டுப் பேர்களுக்கும் தன் அன்புக் காணிக்கையாக வழங்கியது.

நடுவர் திரு மு. வ., தம்பியர் இருவரின் தன்மைகளையும் பகுதி பகுதியாகப் பிரித்து மார்க் வழங்கி, யார் சிறந்த தம்பி என்பதை முடிவு செய்து கொள்ளும் பொறுப்பை பம்பாய் இலக்கிய ரசிகர்களுக்கே விட்டுவிட்டார். ராமனுக்குத் துணை நின்று உதவிய தன்மையில் லட்சுமணனுக்கு 100 மார்க்குகள்; பரதனுக்கு ஒன்றும் இல்லை. ராமனின் இன்ப—துன்பங்களில் பங்கு கொண்ட தன்மையில் லட்சுமணனுக்கு 100 மார்க்குகள்; பரதனுக்கு 50 மார்க்குகள். பணிவுத் தன்மையில் பரதன் 100 மார்க்குகள்; லட்சுமணனுக்கு 50 மார்க்குகளே; ஒத்த பண்பிலும், அறிவிலும் பரதன் 95 மார்க்குகளும் லட்சுமணன் 5 மார்க்குகளும் பெற்றனர்.

நடுவர் தம் முடிவைத் தெளிவான முறையில் வெளியிடாததால் பம்பாய்வாசிகள் ஒவ்வொருவரும் யாருக்கு வெற்றி என்பதைக் கணக்குப் பண்ணிக் கொண்டே இரவு பதினொரு மணிக்கு, என்றும் மறக்க முடியாத ஓர் அற்புத இலக்கிய விவாதத்தைக் கேட்டு, அருபவித்த நிறைவுடன் வீடு திரும்பினர்.

மறுநாள் இந்தத் தமிழ்நாட்டு இலக்கிய மேதைகள் இரவு எட்டேகால் மணிக்குச் சங்க மணிமண்டபத்தில் சொற்பொழிவு நிகழ்த்தினர். ஒவ்வொரு நாளும் இரண்டு பேச்சு என்று வரையறுத்திருந்ததால், பேச்சாளர் எல்லோரும் தாங்கள் எடுத்துக்கொண்ட பொருளைச் சவிஸ்தாரமாகப் பேச முடிந்தது. 24ஆம் தேதி இரவு டாக்டர் மு. வ. "மாயா உடம்பு" என்னும் பொருள் பற்றியும், மயிலம் சிவசுப்பிரமணியன் "சைவமும் தமிழும்" என்னும் பொருள் பற்றியும் சொற்பெருக்காற்றினர்.

25ஆம் தேதி திரு கி. வா. ஜ., "புறநானூற்றின் பொற்பு" என்பது பற்றிப் பேசினார்; திரு ராமராஜன், "பின்னைப் பெருமா"னைக் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார்.

மறு நாள் திரு அ. மு. ப., "அமைதி வேண்டுமா?" என்று வினவ, திரு ராதாகிருஷ்ணன் ரயிலுக்குப் போகும் அவசரத்தையும் மறந்துவிட்டு, "கண்ணனையும், கர்ணனையும்" மோதவிட்டு வேடிக்கை பார்த்தார்.

இவருக்குப் போட்டியாகக் கடைசி நாளான 27ஆம் தேதி திரு ராமகிருஷ்ணன் உலக மகாகவிகளான, "கம்பரையும் ஷேக்ஸ்பியரையும்" தம் இலக்கியத் தராசிலே எடை போட்டுக் காட்டினார். அன்றே மற்றொரு போட்டியும் நடந்தது. அது திரு கோதண்டராமன் நிகழ்த்திய "தியாகப் போட்டி!"

பம்பாயில் இப்பொழுது கோடைகாலம். எனவே, பகலெல்லாம் வெயில் பொரிந்தது; வேர்வை வழிந்தது. ஆனால் இந்த எட்டு நாட்களும் இரவில் சொல்லி வைத்தாற் போல் மழை பொழிந்தது. அது வான் பொழிந்த மழை அல்ல; கலை மழை; இலக்கிய மழை; இயல், இசை, நாடகம், இம்மூன்றையும் தன்னகத்தே தாங்கிய சங்கத் தமிழ் மழை. இத்தகைய சங்கத் தமிழ் மழையை பம்பாய்த் தமிழ்ச் சங்கம் பொழிவதற்கு மூலமாக விளங்கிய இருவாளர்கள் கந்தசாமி, ஆதிலட்சுமணன், 'அம்பி' என்று அன்பாக அழைக்கப்படும் ஆர். சங்கர், செயலாளர்கள் திரு எஸ். வி. ரமணி, திரு சுப்பராயலு போன்றோரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். வெள்ளிவிழாக் கண்ட தமிழ்ச் சங்கம் இவ்வாறே தமிழ் வளர்த்து, பொன் விழா, வைரவிழா எல்லாம் காண வேண்டுமென்று பம்பாய்த் தமிழர்களோடு தமிழ்கூறும் நல்லுலகத்தின் பிற பகுதிகளிலுள்ள நாமும் சேர்ந்து வாழ்த்துவோமாக.



ASP/LT-1D/67 TAM

ஜெர்மன் அரசியலின் முதுபெரும் தலைவர்

“ஜெர்மன் அரசியலின் முதுபெரும் தலைவர்” என்று அன்புடன் அழைக்கப்படும் அடினார், கடந்த நூற்றாண்டுகளில் பிஸ்மார்க் நீங்கலாக நீண்ட காலம் ஜெர்மனியின் பிரதமராகப் பதவி வகித்து வந்திருக்கிறார். அடுத்தடுத்து நான்கு பொதுத் தேர்தல்களில் அவரது அரசியல் கொள்கைகளை மக்கள் ஆதரித்து வாக்களித்து இருக்கின்றனர். எல்லாத் தரப்பினரும் ஏக மனதாகப் புகழ் மாலைகள் சொரிய, டாக்டர் அடினார் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.



தொண்ணூற்று ஒராவது வயதில் மரணமடைந்த அடினாருக்கு இருபத்தி ஒன்பதாவது வயதில் நுரையீரல் பலவீனமாக இருப்பதாகச் சொல்லி ஆயுள் இன்ஷியூரன்ஸ் பாலிஸி கொடுக்க மறுத்தது அவர் வாழ்வில் ஒரு விந்தையான நிகழ்ச்சி!

நீதிமன்ற குமாஸ்தாவின் மகனாக, 1876ம் ஆண்டு ஜனவரி 5ந் தேதி அடினார் பிறந்தார். சட்டப் படிப்புப் படித்து வழக்கறிஞராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கினார். கோலோன் நகரில் பொது வாழ்க்கையில் இறங்கினார். விரைவிலேயே கோலோன் நகர மேயரானார். ஹிட்லர் ஆட்சிக்கு முன்னர் 1919 முதல் 1933 வரை வெய்மார் குடியரசின்போது அடினாரின் செல்வாக்கு படிப்படியாக அதிகரித்துக் கொண்டு போயிற்று. இறுதியில் பிரஷ்யன் மாநிலக் குழுவின் தலைவரானார். ரைன்லாந்தின் முக்கிய அரசியல் தலைவராக அவர் மதிக்கப்பட்டார். மதப் பற்று மிக்க அடினார் (கிறிஸ்துவ கத்தோலிக்கர்) கோலோன் நகருக்கு ஹிட்லர் வரும்போது நாஜிக் கொடிகளைப் பறக்க விட நாஜி ஊழியர்களை அனுமதிக்க மறுத்தார். இதனால் ஆளும் கட்சியின் கோபத்துக்குள்ளான அடினார் எல்லாப் பதவிகளிலிருந்தும் “டிஸ்மிஸ்” செய்யப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டார். போருக்குப் பின்னர் அமெரிக்க அதிகாரிகள் இவரை விடுவித்து மீண்டும் கோலோன் நகர மேயராக்கினார்கள். ஆனால் பிரிட்டிஷ் தளபதியின் முறையற்ற உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்ததால் டாக்டர் அடினார் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

1945ம் ஆண்டில் டாக்டர் அடினார், கிறிஸ்துவ ஜனநாயக யூனியன் (சி.டி.யூ.) என்ற புதிய ஜனநாயகக் கட்சியினை வேறு சிலருடன் சேர்ந்து தோற்றுவித்தார். 1964-ம் ஆண்டுவரையிலும் இவரே கட்சியின் தலைவராக இருந்து வந்தார். அதன்பின், அவர் கௌரவத் தலைவரானார். 1948ல் ஜெர்மன் சமஷ்டி குடியரசின் அரசியல் சட்டத்தை வகுத்த பாராளு

1945ல் போரில் அழிந்த டஸ்ஸல்டார்ப் நகரம்.





போர் அழிவுக்குப்பின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட
டஸ்ஸல்டார்ப் நகரம்

மன்றக் குழுவின் தலைவராக, இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1949 செப்டம்பர் 7ந் தேதி டாக்டர் அடினுர், மேற்கு ஜெர்மனியின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1951 முதல் 1955 வரை இவரே வெளிநாட்டுத் துறையை வகித்து வந்தார். மேற்கு ஜெர்மன் அரசின் தலைவராகப் பதினன்கு ஆண்டு ஒரு மாதம் இருந்த பின்னர், 1963 அக்டோபர் 15ந் தேதி தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ருர். சர்வாதிகாரியின் ஆட்சியின் கோரப் பிடிகளிலும், போரிலும் சிக்கி, அலங்கோல நிலைக்கு ஆளான ஜெர்மனிக்கு மீண்டும் புத்துயிர் கொடுத்தவர் அடினுர். 120 லட்சம் அகதிகளுக்குப் புனர் வாழ்வு அளித்தார். பொருளாதார, தொழில் வளத்தைப் பெருக்கிஞர். போரின் காரணமாக நாட்டைப் பற்றியிருந்த மாசைப் போக்கி உலக மக்களுக்கும், ஜெர்மானியர்களுக்குமிடையே நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் தோற்றுவிக்க வழி செய்தார். அடினுர் தலைமை அமைச்சராக இருந்த காலம், ''அடினுர் சகாப்தம்'' என்று பெருமையுடன் அழைக்கப்படுகிறது. இவ்வளவு கடினமான பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டபோது இவருக்கு வயது 73! 1949ம் வருஷத்திய ஜெர்மனியுடன் பதினன்கு ஆண்டுகளுக்குப் பிந்திய ஜெர்மனியை ஒப்பிட்டால், இவர் தலைமையில் ஜெர்மனி அடைந்துள்ள மகத்தான முன்னேற்றத்தைக் காணலாம்.

- யூ. பி. எஸ்.

பேர்லின் சுவர்



''ஜெர்மனி நிகழ்த்திய அற்புதம்'' என்னும் போது பொருளாதார ரீதியில் யுத்தத்துக்குப் பின் அந்நாடு அடைந்துள்ள மகத்தான முன்னேற்றத்துடன் லட்சோப லட்சம் அகதிகளுக்குப் புனர் வாழ்வு அளித்ததையும் சேர்த்துக் கூற வேண்டும். யுத்தத்துக்குப்பின் வீடு வாசல் இழந்து வந்த ஒரு கோடி அகதிகளுக்கு இருப்பிடமும் தொழிலும் தரும் பிரச்னையை ஜெர்மனி வெற்றிகரமாகச் சமாளித்தது. இதை மதித்து, கிழக்கு ஜெர்மனியின் சர்வாதிகார ஆட்சி பிடிக்காமல் ஆண்டுதோறும் மேற்குப் பேர்லினுக்குத் தப்பி வந்த பல லட்சக்கணக்கானவர்களைச் சமாளிக்கும் பிரச்னை எழுந்தது. (தப்பி ஓடுபவரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த ருஷ்ய ஆதிக்கத்தின் கீழுள்ள கிழக்கு ஜெர்மன் ஆட்சியாளர் நெடுஞ்சுவர் எழுப்ப வேண்டியிருந்தது. ஜெர்மானியரை ஜெர்மானியரிடமிருந்து பிரித்து வைக்கும் சுவரையும் முள் கம்பி வேலியையும் 14,000 கிழக்குப் பேர்லின் காவலாளிகள் இரவு பகலாகக் காக்கின்றனர். சுதந்திர வாழ்வை விரும்பிச் சுவரைக் கடந்து மேற்குப் பேர்லினுக்குத் தப்ப முயன்ற 58 பேர்கள் இதுவரை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்; 2000 பேர்கள் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கின்றனர்.)

இரண்டு விதமான அகதிகள் பிரச்னையையும் வெற்றிகரமாகச் சமாளித்ததுடன் ருஷ்யாவில் யுத்தக் கைதிகளாக இருந்த பல்லாயிரக்கணக்கான ஜெர்மானியரை விடுவித்துத் தாய்நாட்டுக்கு அழைத்து வந்து அவர்களுக்குப் புனர்வாழ்வு அளித்த பெருமையும் அடினுருக்கே உரியது.



அபாயகரமான வித்தைகளையும் அநாயாசமாகச் செய்யும் இந்தப் பெண்களுக்குத்தான் எத்தனை துணிச்சல்! 'மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுத்தர வேண்டுமா?' என்று கேட்டு வியப்பில் ஆழ்த்தும் ஜெமினி சர்க்கஸைச் சேர்ந்த ஒருசில பெண்களைப் பற்றி ஓர் அறிமுகம்! ✲



மெல்லியவர்கள் என்று அழைக்கப்படும் இந்தப் பெண்கள் சர்க்கஸ் துறையிலே என்ன என்னவெல்லாம் அரும் பெரும் சாதனைகளைப் புரிந்து காட்டுகிறார்கள்! அபாயகரமான விளையாட்டுகளை விளையாடி மகிழ்விக்கிறார்கள்! நமது தென்னகத்தைச் சேர்ந்த பெண்கள் — அதுவும் கேரள நாட்டு மாதர்கள் துணிகரமான இத்துறையில் உலகத்திலேயே சிறந்து விளங்குகிறார்கள் என்றால் அது பெருமையை அளிக்கிறது அல்லவா?

இத்துறையில் ஈடுபட்டிருக்கும் ஒரு சிலரையாவது சந்தித்து அவரது தொழில் அநுபவங்களை அறிந்து வரலாம் என்று போனால், முதல் நாள் அவர்கள் வந்திறங்கிய ஸ்பெஷல் ரயிலை வரவேற்கும் வாய்ப்புத்தான் எங்களுக்குக் கிட்டியது. அந்த ரயிலையும் அதில் வந்த சர்க்கஸ்காரர்களையும், தளவாடச் சாமான்களையும் கண்ட பொழுது, யானை, குதிரை, சிங்கம், புலி, நீர் யானை போன்ற வன விலங்குகளையும் பார்த்தபோது அயர்ந்தே போனோம்! ஒரு நகரமே இடம் பெயர்ந்து வந்து விட்டதாகத் தோன்றியது.

பழைய காலத்தில் வேண்டியவர்களையும் வேண்டாதவர்களையும் ஒரே சொல்லால் வாழ்த்துவார்களாம், 'உன் வீட்டு வாசலில் யானை கட்ட' என்று! வேண்டியவர்களாயிருந்தால், அப்படிச் செலவு செய்யுமளவுக்குச் செல்வம் பெருகட்டும் என்று பொருள். வேண்டாதவர்களாயிருந்தால், இருக்கிற செல்வம் செலவழிந்து திண்டாடட்டும் என்று பொருள். 'வீடு நின்று இன்னும், யானை அசைந்து தின்னும்' என்னும் பழமொழியை ஒட்டி ஒருவன் ஒட்டாண்டியாவதற்கு இதைக் காட்டிலும் நல்ல வாழ்த்து முறை எது இருக்க முடியும்?

ஒரு யானை கட்டினாலே இந்தப் பாடு என்றால், ஒரு டஜன் என்ன, ஒன்றரை டஜன் யானைகளைக் கட்டிக் கொண்டு 'சர்க்கஸ்' புரியும் இவர்களது நிலை...?

இவ்வளவு பொருள்களையும் ரயிலிலிருந்து இறக்கிப் பங்கீடு செய்யவே இரண்டு மூன்று நாட்கள் பிடிக்கும் போலிருக்கிறதே! நாளை நீக்கி 'மகத்தான ஆரம்பம்' என்று விளம்பரம் செய்திருக்கும் இவர்கள் என்ன செய்வார்கள்? கூடாரம் அடிக்கவே பொழுது இல்லையே!



குமாரி இந்திரா

இந்தக் கவலை சர்க்கஸ்காரர்களுக்கு ஏற்பட்டதோ இல்லையோ, எங்களுக்கு ஏற்பட்டது. இந்த வேளையில்தான், இங்கும் அங்கும் ஓடியாடிக் கொண்டிருந்த ஸ்ரீ சகாதேவன் எங்களை நாடி வந்து, ''மன்னிக்க வேணும். ரயில் மிகவும் தாமதமாக வந்திருக்கிறது. அதனால் சொன்னபடி உங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்க இயலவில்லை. நாளை வாருங்கள், கட்டாயம் ஏற்பாடு செய்து விடுகிறேன்!'' என்றார். இவர் இப் பெரும் சர்க்கஸ் கம்பெனியின் நிர்வாகிகளில் முக்கியமான ஒருவர்.

அவர் நிலைமையைப் புரிந்து கொண்டு, மறுநாள் அவர் குறிப்பிட்ட நேரத்துக்குப் போனால், மயனைக் காட்டினும் விரைவாக மாபெரும் சர்க்கஸ் கூடாரம் உருவாக்கப்பட்டிருந்தது.

அன்று ஆட்டத்தைக் கண்டு ரசித்ததோடு ஓரிரு ஆட்டக்காரப் பெண்மணிகளைக் கண்டு பேசவும் முடிந்தது.

''இதோ, இவர்தான் இந்திரா. சைக்கிள் விளையாட்டில் பல விசித்திரங்களை நிகழ்த்திப் பாராட்டுப் பெற்றாரே.....!''

''அவரேயா இவர்? ரொம்பப் பிரமாதம்! — ஆமாம், உங்களுக்கு இந்தச் சர்க்கஸ் தொழிலில் எப்படி நாட்டம் போயிற்று?''

''மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுத் தருவது உண்டா?''

இந்தப் புதிர்க் கேள்வியோடு பக்கத்தில் பார்வையைத் திருப்பினார் இந்திரா. விதூஷக வேஷம் போட்ட ஸ்ரீ அப்புக்குட்டி அருகில் நின்று கொண்டிருந்தார். அவருக்குத் துணையாக ஜப்பானிய முகத் தோற்றத்தோடு ஒரு பெண்மணி நின்று கொண்டிருந்தார்.

''இவர்கள் இருவருக்கும் இந்தச் சர்க்கஸ் வேலை தண்ணீர்பட்ட பாடு. இவர்கள் என் பெற்றோர்கள். சர்க்கஸ் தொழிலையே தங்கள் வாழ்க்கையாகக் கொண்டவர்கள். எனவே, இது எங்கள் குடும்பக் கலை, பரம்பரைக் கலை!'' என்றார் இந்திரா.

''ஆமாங்க. பிள்ளைப் பிராயத்திலிருந்தே எனக்கு இதுதான் தொழிலுங்க. இதோ நிற்கும் இவ அம்மாவுக்கும் இதுவேதான் தொழில். ஜப்பான் நாட்டைச் சேர்ந்த இவள் பெற்றோர் இந்தியாவில் குடியேறி ஒரு தலைமுறையாகி விட்டது. இவள் பிறந்தது மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த பண்டரிபுரத்தில். என் வாழ்க்கைத் துணைவியாகி விட்ட இவளுக்கு மாதுரி என்று பெயர். இப்பொழுது இவள் சர்க்கஸ் வேலைகள் செய்வதில்லை. எங்களுக்கு நான்கு பெண் குழந்தைகள். எல்லாரும் இதே ஜெமினி சர்க்கஸில்தான் பணியாற்றி வருகிறோம்!'' என்றார் அப்புக்குட்டி.



கனகம்

''இந்தச் சர்க்கஸ் வித்தைகளில் உங்களுக்குப் பிடித்தமானது.....''

''அறுசுவை உண்டியில் சுவையற்றது என்று ஒன்று இருக்க முடியுமா? நானே விதூஷக வேஷம் போடுபவன். எல்லாம் கற்றுத் தேர்ந்திருக்க வேண்டும். அதோடு கோணங்கித்தனமாகவும் நடந்து கொள்ளப் பயின்றிருக்க வேண்டும். அதனால் எதுவுமே எனக்கு வரும். எனக்கு மட்டும் என்ன, எங்கள் குழுவிலுள்ள எவருமே பல வித்தைகளும் கற்று வைத்திருப்பவர்கள் தான். எதையும் செய்யத் தயாராயிருப்பார்கள்!''



கனகம், சௌமினி, ராதா, நாராயணி

''இந்தச் சர்க்கஸ் வித்தைகளை நீங்கள் யாரிடம் பயின்றீர்கள்?''

''இங்கே, எங்கள் குழுவில் ஸ்ரீதரன், அனந்தன் போன்று நான்கு சிறந்த பயிற்சியாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் எங்களைப் பயிற்றுவிப்பது!'' என்றாள் இந்திரா.

''எப்படிப் பயிற்றுவிப்பார்கள்? ஓர் உதாரணம் கூற முடியுமா ?''

''வித்தை ! வித்தை! வித்தை! வித்தை!''

அப்புக்குட்டி இப்படிக் கூறவே, ''என்ன வேடிக்கை பண்ணுகிறீர்கள்?'' என்று சிறிது ரோஷத்தோடு கேட்டேன்.

''வேடிக்கையா இது? நான் நிஜத்தைச் சொன்னாலும்கூட அது வேடிக்கையாகப்படுகிறது. நான் வந்த வழி அப்படி. ஆனால் சிறிது யோசித்துப் பாருங்கள். சின்னக் குழந்தை ஒன்று, எழுந்து நிற்க முயல்கிறது. பல முறை கீழே விழுகிறது. நாம் 'வித்தை, வித்தை' என்று கூறி அதை நிற்க வைக்கிறோம்; நடக்கவும் வைக்கிறோம். இதே முறைதான் இந்தச் சர்க்கஸ் வித்தைகளைக் கற்றுத் தருவதிலும் கையாளப்படுகிறது. ஆனால் ஒன்று. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. அதனால் சிறு பிராயத்திலிருந்தே........!''

'அப்பப்பா! ஜூடோக்களுக்கும் மேலாக அந்தப் பெண்தான் எப்படியெல்லாம் தன் உடலை வளைத்துச் சுருட்டி ஒரு பொட்டலமாக ஆக்கிக் காட்டி விட்டாள்!'

இப்படி எண்ணிய என் மனம் சட்டென்று தாவிக் கம்பியில் நடந்த பெண்களைப் பிடித்துக் கொண்டது! இந்த மனமும் 'பார்' வேலை செய்து பழகியதுதானே?

கம்பியில் ஒருவருக்குப் பின் ஒருவராக இரண்டு பெண்கள் நிற்கிறார்கள். இருவரும் 'பாலன்'சுக்காகக் கைகளில் மூங்கில் கம்பு ஏந்தியிருந்தார்கள். முதலில் நின்றவளின் தோளிலே இருந்த மூன்றுவது கம்பைப் பின்னவளின் மார்புப்புறம் தாங்கி நின்றது. அந்தக் கம்பின் மேலேயும் ஒரு பெண். இப்படியாக ஒருத்தி தாங்க, இன்னொருத்தி முட்டுக் கொடுத்து நிற்க, மூன்றுமவளோடு ஒற்றைக் கம்பியில் உயரே போய்த் திரும்பி வந்தார்கள்! அந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

''மூன்றுமவளைக் கீழே தள்ளாமல் அவர்கள் எப்படிக் கம்பியின் மீது மேலே கீழே போய் வர முடிந்தது?'' என்று கேட்டேன்.

''இது உங்களுக்கு வியப்பாயிருக்கலாம். ஆனால் எங்களுக்கு ஒரு கணக்கு. காலப் பிரமாணம். அதோடு பாலன்ஸ். துளி தவறினாலும் 'கரணம் தப்பினால் மரணம்' என்ற கதைதான். இருந்தாலும் பழக்கம் கைகொடுத்து உதவுகிறது.''

இப்படிக் கூறியவாறே அடுத்த கூடாரத்துக்கு அழைத்துச் சென்றவர், ''இவர்தான் கனகம்! ஒன்பது ஆண்டுகளாக இந்தச் சர்க்கஸ் கம்பெனியில் பணியாற்றி வருகிறார். எந்த வித்தையும் இவருக்கு அனாயாசமாக வரும்!'' என்றார்.

'' அப்படியா ?'' — 'பார்' விளையாடும் பொழுது நாற்புறமிருந்தும் வீசி ஆடுகிறீர்கள், ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்குக் குறுக்கும் நெடுக்குமாகத் தாவுகிறீர்கள். தாவுகிறவர்கள் ஒன்று இரண்டு மூன்று என்று பல குட்டிக் கரணங்கள் போட்டுவிட்டு வருகிறார். அவரும் உங்களைப் பிடித்துக் கொள்ளுகிறார்; நீங்களும் பிடி விடுவதில்லை. இது எப்படிச் சாத்தியம்?''

''இதற்கும் காலப் பிரமாணம்தான் முக்கியம். எந்த நேரத்தில் எப்படி வருவார் என்பதற்கு ஒரு கணக்கு இருக்கிறது. ஆடும் பொழுதே நாங்கள் இந்தக் கணக்கைக் கவனித்துக் கொள்ளுகிறோம். எங்கள் காலத்தை எங்களுக்கு நினைவூட்டப் பின்னணி இசையும் உதவுகிறது. இசை தரும் காலப் பிரமாணம் மிக முக்கியமானது. தாளம் தவறக்கூடாது என்கிறோமே, எதற்காக? காலப்பிரமாணத்தைக் கணக்கிடத்தானே ?'' என்றார் கனகம்.

''நீங்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்?''

''தலைச்சேரி. பெரும்பாலும் நாங்கள் அந்தப் பக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான்!''

''இந்தத் தொழில் உங்களுக்கு நல்ல வருமானத்தைத் தருகிறதா?''

''மாளிகை கட்டிக் கொண்டு வாழக்கூடிய அளவுக்கு இந்தத் தொழிலில் எதுவும் எதிர் பார்க்க முடியாது. காரணம், நிஜமாகவே இது யானையைக் கட்டித் தீனி போடும் தொழில். ஆயினும் வாய்க்கும் கைக்கும் வஞ்சனை செய்யாமல் வயிற்றுக்கு வேண்டியதைத் தருகிறது!''

''ஆபத்தான இந்தத் தொழிலில் உங்களைப் போன்ற பெண்கள் ஈடுபடுவது.....!''

''ஆணுக்குப் பெண் சளைத்தவளில்லை என்பதை நிரூபிக்கத்தான்!''

''இன்னுமொன்றையும் சேர்த்துக் கொள்ளுங்கள். இதைக் காட்டிலும் அற்புதமான தாய்மைப் பேற்றை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளும் இவர்களுக்கு சர்க்கஸ் வித்தைகள் ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. பெண்களால் ஆகாத காரியம் எதுவுமே இல்லை'' என்றார் கூட வந்தவர். அதை ஆமோதிப்பதுபோல், அடுத்த ஆட்டத்துக்கு மணி அடித்தது.-ரா.வீ

பொம்மைக் காட்சி

குழந்தை உணவு

கர்ப்பூர நாடக வெள்ளி விழா

அன்னையாவினும் புண்ணியம்....

கலைஞர்களுக்கு விருது



'நேர மிருக்கிறது. பொதுநல சேவை செய்ய வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. பொழுதை நல்ல முறையில் செலவிட வேண்டும் என்ற எண்ணமிருக்கிறது. அப்படியானால் இவர்களுக்கு வழிகாட்ட மயிலாப்பூரில் உள்ள 'வித்யாபாரதி மாதர் சங்க'த்தினர் முன்வருகிறார்கள். பொம்மை செய்தல், தையல் கலை, பழரச பானங்கள் தயாரிப்பு, நாட்டியம் என்று இப்படிப் பல துறைகளிலும் பயிற்சியளிப்பதற்கான வகுப்புக்களை நடத்துகிறார்கள். இம்மன்றத்தினைச் சர்தாரிணி உத்ஜல்சிங் அவர்கள் கடந்த மாதம் தொடங்கி வைத்தார்கள். ராஜ்ய சமூக க்ஷேமநல போர்டுத் தலைவர் சரோஜினி வரதப்பன் தலைமை வகித்துப் பேசும்போது நாட்டின் நல்வாழ்வுக்கான நிர்மாணப் பணியில் மாதர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தைச் செலவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இம்மன்றத்தினர் பொம்மைகள் கண்காட்சியொன்றை நடத்தினார்கள். இந்திய நாட்டுப் பல்வேறு மக்களின் உடை அலங்காரங்களையும் வேறு பல நாட்டு ஆடை வழக்கையும் இப்பொம்மைகளில் கண்டுகளிக்க முடிந்தது. அந்தக் காட்சியைப் பார்த்த போது குமரக் கடவுள் பிரமனைச் சிறையில் அடைத்துத் தானே சிருஷ்டித் தொழிலை ஏற்று நடத்திய கதை நினைவுக்கு வந்தது. அங்கிருந்த அத்தனை பொம்மைகளின் முகச் சாயலும் ஒரே மாதிரியாக ஒரே நபர் பல வேஷங்களில் காட்சியளிப்பதாக இருந்தது. இதுவும்கூட ஓர் அழகுதானே ?

புட்டிப் பால் உணவுக்கு அலையாய் அலைந்து அதிக விலைக்கு வாங்கி வருகிறவர்கள் சென்னைவாசிகள். யார் கண்ணிலாவது பட்டால் 'எங்கே கிடைத்தது' என்று தொணதொணத்து விடுவார்கள் என்பதற்காக டப்பாவை ஒளித்து ஒளித்து எடுத்து வருவார்கள்.

சென்னை மக்கள் இனி புட்டிப் பால் உணவுக்குக் கஷ்டப்பட வேண்டியதில்லை. ஹிந்துஸ்தான் லீவர் ஸ்தாபனத்தினர் உத்தரப் பிரதேசத்தில் உள்ள எட்டாவில் தங்கள் தொழிற்சாலையில் இனி வருஷத்துக்கு ஆயிரம் டன் அளவுக்குக் குழந்தைகளுக்கான பால் உணவைத் தயாரித்தளிக்கப் போகிறார்கள்! சென்னை நகரத்துக்கு வாரத்துக்கு ஒன்றரை டன் குழந்தை பால் டின்களை வழங்கவிருக்கிறார்கள். கறுப்புச் சந்தையில் இனி அதிக விலைக்குக் குழந்தை உணவு வாங்க வேண்டிய அவசியமிராது. சென்னை நகரத்துக்கு எவ்வளவு தேவையானாலும் அதை விநியோகிக்க ஹிந்துஸ்தான் லீவர் ஸ்தாபனத்தினர் தயாராக இருக்கிறார்கள். குழந்தை உணவுப் பொருள் கறுப்பு மார்க்கெட் ஒழிவதற்கு வழி ஏற்படலாம்.

சென்னை விநியோகத்தைத் தொடங்கி வைப்பதை முன்னிட்டுப் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு அதன் அருமை பெருமைகளை விளக்கினார் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் பானர்ஜி. ஹிந்துஸ்தான் லீவர் ஸ்தாபனத்தின் சென்னை மானேஜர் திரு மேனன் பத்திரிகைப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினார்.

■ கர்ப்பூரம் தன்னை அழித்துக் கொண்டு மணத்தைப் பரப்பி மகிழ்விக்கிறது. இந்த ஏழைக் குடும்பத்தில் தனம் தன்னை அழித்துக்கொண்டு குடும்பத்துக்கு மறு வாழ்வு ஏற்பட வழி வகுக்கிறாள். டாக்ஸி டிரைவர் மாணிக்கமாக வரும் திரைப்பட நடிகர் எஸ். எம். ராஜன் டாக்ஸி டிரைவராகவே மாறி, இயற்கை நடிப்பினாலும், உருக்கமான கட்டங்களில் மனத்தை உருக்கியும் நாடகத்

ஊர் வம்பு

துக்கு உயிரூட்டுகிறார். புஷ்பலதா இந்த நாடகத்தில் இரட்டை வேடம் தாங்கி நடிக்கிறார். தனமாக வரும்போது, உணர்ச்சிகளை அடக்கிக் குடும்பத் தலைவியாகவும், சுந்தரத்தின் தங்கையாக நடிக்கும்போது வெடிப்பான பேச்சுடனும் மன நிறைவைத் தருகிறார். தனவந்தராக வந்து நடிப்பதுடன் இந்த நாடகத்தின் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார் திரு சேஷாத்திரி. இந்த நாடகத்துக்குத் தலைமை வகித்துக் கலைஞர்





ராஜஸ்தான் இளைஞர்கள் நடத்தும் புத்தக பாங்கி

ளைப் பாராட்டினார் கோத்தமங்கலம் திரு சுப்பு. ஸ்ரீ திருவேட்டீசுவரர் சபாவில் வெள்ளி விழாக் கொண்டாடிய 'கர்ப்பூரம்' நன்கு மணம் பரப்பியது. அதன் காரணமாக நாடக மேடையிலிருந்து இறங்கி ஸ்டுடியோ நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்று அறிகிறோம்!

புத்தகங்கள் வாங்க முடியாமையால் கல்லூரியில் சேர்ந்து பயில முடியவில்லை என்ற கவலை ஏழை மாணவர்களுக்கு இருக்கக் கூடாது என்பதற்காகவே ஒரு சங்கம் நகரில் செயல்படுகிறது. ராஜஸ்தான் இளைஞர் கழகம் என்பது அதன் பெயர். புகுமுக வகுப்பு மற்றும் பட்டப் படிப்பு பயிலும் தகுதியுள்ள சென்னை மாணவ மாணவியர்களுக்குத் தேவையான புத்தகங்கள் அனைத்தையும் (செட்) இலவசமாக (நீண்ட காலக்கடனாக) அளிக்கிறது. படிப்பு முடிந்ததும் இந்தப் புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் - வேறு மாணவர்களுக்குப் பயன்படும் வகையில்.

1964ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தப் பாங்க் மூன்று வருடங்களில் கணிசமான வளர்ச்சி அடைந்திருக்கிறது. இதனால் பயன்பெறும் மாணவர் தொகை கூடி விருக்கிறது. இது வரை பட்டப் படிப்புக்கான புத்தகங்கள் 230 செட் வழங்கப்பட்டுள்ளன. இப்படி இலவசமாகப் புத்தகங்களை அளிப்பதில் ஜாதி, மத வேறுபாடு எதுவும் பார்ப்பதில்லை இந்த ராஜஸ்தான் இளைஞர் கழகம். பார்க்கப் போனால் இந்தச் சங்கத்தினால் அதிகப் பயன்பெறுபவர்கள் தமிழர்கள் தான். இந்தப் புத்தக பாங்கி ஏழை மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்தான். ராஜஸ்தான் இளைஞர் கழகத்தின் இச்சீரிய செயலைப் பார்த்துப் பல ஊர்களில் இது போலவே புத்தகங்கள் விநியோகிக்கும் முறையை ஆரம்பித்திருக்கிறார்களாம். 'நாங்கள்தான் இதற்கு வழிகாட்டி' என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள் இவர்கள்.

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கப் பரிசளிப்பு விழா



தமிழ் நாடு சங்கீத நாடக சங்கம் ஆண்டுதோறும் கலைஞர்களுக்கு விருதுகள் அளித்துப் பாராட்டிக் கௌரவிப்பதன் மூலம் தன்னையே கௌரவித்துக் கொண்டு வருகிறது. பத்து ஆண்டுகளாக இந்தக் கௌரவப் பணியை மேற்படி சங்கம் தொடர்ந்து பாராட்டும் விதத்தில் நடத்தி வருகிறது.

இவ்வாண்டின் சிறந்த திரைப்பட நடிகர்கள் என்ற முறையில் ஜெமினி கணேசனுக்கும், சாவித்திரிக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. சிறந்த வசன கர்த்தா என்ற முறையில் அமைச்சர் மு. கருணாநிதி அவர்களுக்குக் கிடைத்த விருதைக் கண்டு சபையோர் கரகோஷம் செய்தனர்.


ஹரிகதா காலட்சேபத் துறைக்குக் கும்பகோணம் வாதிராஜ பாகவதருக்கும், நாடகத் துறைக்கு என். எஸ். நடராஜனுக்கும், வயலினுக்குப் பாப்பா வெங்கட்ராமையாவுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இதே மாதிரி இன்னும் இருபத்துநாலு கலைஞர்களுக்கும் பரிசுகள் கிடைத்தன.

இவ்விழாவுக்குத் தலைமை தாங்கியவர் முதல் அமைச்சர் திரு அண்ணாதுரை அவர்கள். பாராட்டுரை வழங்கியவர் கல்வி அமைச்சர், நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள்.

'ராஜாஜி ஹாலில், இரவு ஏழரை மணிக்கு ஆரம்பமாக இருந்த கூட்டத்துக்கு மக்கள் முன்னதாகவே வந்து கூடிவிட்டார்கள். பரிசு பெறும் கலைஞர்களும் வந்து விட்டனர். சுமார் எட்டே முக்கால் மணிக்கு முதல் அமைச்சரும், கல்வி அமைச்சரும் வந்தனர். அவ்வளவு தாமதமாக அவர்கள் வந்தும் மக்கள் ஒருவர்கூடக் கலையாமல் காத்திருந்த பண்பைப் பாராட்டி அவர்களுக்கெல்லாம் கூட விருதுகள் வழங்கியிருக்கலாம். கூட்டம் ஒரு மணி நேரம் தாமதமாகத் தொடங்கியதிலும் ஒரு நன்மை இருக்கத்தான் செய்தது. கலைஞர்களைப் பற்றிய விவரங்கள் சுருக்கப்பட்டு மின்னல் வேகத்தில் படிக்கப்பட்டன!

இத்தனைக்கும் முத்தாய்ப்பு வைத்தாற்போல், பரிசுபெற்ற கலைஞர்கள் சார்பில், கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அழகாகப் பேசி நன்றி மொழிகள் நவின்றார். முதல் அமைச்சரின் முடிவுரையோடு கூட்டம் முடிவடைந்தது.


சூரன் பீட்டர் 5 வால்ட் டிஸ்னி




காப்டன் ஹூக்கின் எண்ணமெல்லாம் வீரன் பீட்டரை எப்படியாவது வகையாக வளைத்துப் பிடித்து தன் கையைச் சீவிய அவனிடம் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்பதே. இதற்காக அவன் எத்தனையோ திட்டங்களையெல்லாம் தீட்டினான். ஆனால் ஒன்றும் வெற்றிதரவில்லை. அதனால் அவன் மனம் தளரவுமில்லை. வலி மீசை முறுக்க அவன் உலாவினான். கடைசியில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாகத் தன் உதவியாளுடன் ஒரு படகில் கப்பலை விட்டுக் கிளம்பினான்.

காப்டன் ஹூக்கின் நடவடிக்கை தெரியாத பீட்டரும் அவன் சகாக்களும் கானகத்தில் சுற்றித் திரிந்து கொண்டிருந்தார்கள். வெண்டியைக் காட்டுக் கன்னிகளுக்கு அறிமுகப்படுத்துவதில் பீட்டர் முனைந்திருந்தான்.

ஜானியோ, தன் சகாக்களுடன் செவ்விந்தியர்களைத் தேடிப் போய்க் கொண்டிருந்தான்.





கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



*ஆனேனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் கிரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை அழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

கால்கேட்டின் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்!


நீங்கள் பற்பொடியை விரும்பினால் இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம்.
ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல்துலக்குங்கள்

...உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டெண்டல் கிரீமையே வாங்குகிறார்கள்.

ஜூ 8



சினிமா

ஷேக்ஸ்பியர்வாலா (ஆங்கிலம்)

ஷேக்ஸ்பியர் நாடகங்கள் உலகப் புகழ் வாய்ந்தன. அந்த நாடகங்களை நடிக்கும் குழு இந்தியாவில் மிகவும் செல்வாக்குடன் சுற்றுப்பயணம் செய்து வந்தது. குழுவின் தலைவர், அவர் மனைவி, அவர் மகள் மற்றும் ஒருசில இந்திய நடிகர்களைக் கொண்டிருந்தது அக்குழு. மக்களின் ருசி, சினிமாவிலும், கிரிக்கெட் விளையாட்டிலும் செல்லத் தொடங்கவே, இந்நாடகக் குழுவின் செல்வாக்கு மங்கி வருமானம் குறைந்து வந்தது. இந்நிலையில் குழுவின் தலைவர் தமது மகளை இங்கிலாந்துக்குப் போகும்படி வற்புறுத்துகிறார். அவளைப் போன்ற நடிகைக்கு இனி அங்குதான் எதிர்காலம் இருக்கும் என்று எடுத்துரைக்கிறார்.

ஆனால் அவளோ, ஒரு பணக்கார இந்திய வாலிப ரசிகனிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டாளே!

அந்த இளைஞனிடம் மற்றொரு சினிமா நடிகையும் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டிருக்கிறாள்!

ஆனால் அவன் உண்மையில் காதலிப்பது லிஸ்ஸி என்னும் அந்த ஆங்கில நடிகையாயினும், அவனுடைய குல கௌரவம் அவளை மணக்க விடாமல் செய்கிறது!

இந்நிலையில் லிஸ்ஸி என்ன செய்ய முடியும்? பெற்றோர் சொன்னபடி இங்கிலாந்துக்குத் திரும்புகிறாள்.

இதுதான் இந்தப் படத்தின் அடிப்படைக் கதை!

ஆனால் படம் பார்க்கும்போது, ஓர் உன்னதமான லலிதமான கவிதையை ரசிப்பது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது.

ஷேக்ஸ்பியரிலிருந்து ஒருசில நாடகக் காட்சிகளைக் காண முடிகிறது.

போலிச் சினிமா பகட்டும் ஆடம்பரமும் உண்மைக் கலையை எப்படி நசுக்கிவிட முடியும் என்பதைக் காண முடிகிறது. இன்னும் பல ரமைமான வெளிப்புறக் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன.

சினிமாவுக்குப் போய்விட்டு வந்தாற் போன்ற உணர்ச்சியின்றி, பண்புள்ள மக்களோடு உறவாடிவிட்டு வந்த மனநிறைவு ஏற்படுகிறது!

இத்திரைக் கதையில் இந்தியர்களும், பிரிட்டிஷாரும் கலந்து நடிக்கின்றனர்.

ஷேக்ஸ்பியர் நாடகங்களை நடிப்பதில் புகழ்பெற்ற கெண்டல் குழுவினர்தான் இதிலும் நடிக்கின்றனர்.

லிஸ்ஸியாக — பெலிஸிடி கெண்டலும்; லிஸ்ஸியைக் காதலிக்கும் இந்திய இளைஞனாக சசிகபூரும், இந்திய இளைஞனிடம் உள்ளம் பறிகொடுத்த இந்தியச் சினிமா நடிகையாக மதுர் ஜாப்ரேயும் நன்றாக நடித்து சபாஷ் பெறுகின்றனர்.



மூன்றாவது பரிசு நாவல்

மணக் கோலம்

பி.வி.ஆர்



அத்தியாயம் 6

பாகீரதியின் மௌனத்தையும் அவள் முகத்தில் பிரதிபலித்த சங்கடத்தையும் உணர்ந்து புரிந்து கொண்ட அலமேலு, ''என்ன பாகீரதி, கலியாணப் பேச்சுப் பேச வந்தவள் சாவைப்பத்தி யெல்லாம் பேசறேனேன்னு இப்படி வாய் அடைச்சுப் போயிட்டியா? நல்லது கெட்டதை யெல்லாம் கலந்து கலந்து பேசினாத்தான் நல்லது மிஞ்சியிருக்கும்'' என்றாள்.

''அதுக்கு இல்லே, மாமி! இந்த வீட்டு ராசியை நினைச்சுப் பார்த்தபோது நம்ம சீதாவுக்கு ஏதும்...?''

''அடி அசடே!'' என்று சிரித்த அலமேலு, ''நான் சொல்ல மறந்துட்டேன், பார்த்தியா! ஏதோ தோஷம் இருக்குன்னு இந்த மூர்த்தி ஜோசியர் சொன்னார்னு இரண்டு மாசம் முன்னாலே பிராயச்சித்தம் 'ரெஹசாந்தி' நவக்கிரகஹோமம் எல்லாம் பண்ணினான் ரகு. நீ அதைப்பத்தியொண்ணும் பயப்படாதே!'' என்று கூறி முடித்தாள்.

'' அப்படியா! அப்போ சரி'' என்று ஒரு விநாடியில் பாகீரதியின் கலங்கிய மனம் தெளிவடைந்தது. நாலும் தெரிந்தவள் அலமேலு. அவள் சொல்லுவதில் தப்பு எப்படி இருக்க முடியும்?

பாகீரதி சமாதான மடைந்து விட்டாள் என்பதைக் கண்ட அலமேலு, ஒரு நிமிட மௌனத்துக்குப் பிறகு, ''இப்போதைக்கு ரகுவுக்கு அறுநூறு ரூபாய் வர்றது. ஊரிலே ஒரு வீடும், நெல்லும் தேங்காயும் இருக்கு. அப்பா பிக்ஸெட் டெபாஸிட்டிலே போட்டு வைச்சுட்டுப் போன பணம் இருபதினாயிரம் இப்போ பேரன் பேத்தி எடுத்து முப்பத்தையாயிரம் ஆயிடுத்து. இதெல்லாம் போதாததற்கு ஆபீஸிலே பிராவிடண்டு பண்டுலே பணம், மயிலாப்பூர் பண்டாபீஸிலே டெபாஸிட்டு எல்லாம் வேறே.. மொத்தத்திலே இரண்டு லட்சத்துக்கு ஏதோ கொஞ்சம் கொறையலாம்'' என்றாள்.

பாகீரதி அசந்து போனாள். சீதா லட்சாதிபதியின் மனைவியாகவா போகிறாள்.....?

''ரொம்பப் பெரிய இடமா இருக்கே மாமி? வரதட்சிணை, நகை, சீர் செனத்தி இதுக்கெல்லாம் நான் எங்கே போவேன்?''

''வரதட்சிணை காலணா கொடுக்க வேண்டாம். நகை ஏதோ இருக்கிறதை ஒப்பேத்தி வை. ரகுவின் அம்மா கொஞ்சமாவா நகை வைச்சுட்டுப் போயிருக்கா? வங்கியும், ஒட்டியாணமும், காசுமாலையும் தொண்ணூறு பவுனுக்கு இருக்கு. எல்லாத்தையும் அழிச்சு இந்தக் காலத்துப் பாஷனுக்கு அவனே நானைக்குச் செஞ்சு போட்டுக்குவான், சீதாவுக்கு!''

பாகீரதி மலைத்தாள். ஆனால் வெகுளியாக, ''இவ்வளவெல்லாம் இருக்கிறவனுக்கு ஏன் பெரிய இடத்திலிருந்து வரவில்லே, மாமி?'' என்று கேட்டாள்.

கேட்டபின், ஏன் கேட்டோம் என்று நாக்கையும் கடித்துக் கொண்டாள்.

''அப்படிக் கேளு!'' என்று அலமேலு. கேள்வியை இதற்கு முன்னேயே எதிர்பார்த்தவளைப் போல் பாகீரதியைப் பார்த்தாள்.

பிறகு, ''பாகீரதி, புத்தம் புதுசா ரேடியோ நானூறு ரூபாய்க்கு இன்னிக்கு வாங்கி, நாளைக்கே விக்கப் போனாலும் என்ன கிடைக்கிறது? இருநூறு அதிகம் போனா இருநூற்றைம்பது..... மாப்பிள்ளையும் அப்படித் தான்டி. செகண்டு ஹாண்டு ரேடியோ மாதிரித்தான், ஒரு தடவை கலியாணமான பிள்ளையும். பெண்டாட்டி சுகம்னு என்னன்னு அவனுக்குத் தெரியாதுன்னு எனக்குத் தெரியும். நான் சொல்லி உனக்குத் தெரியும். ஆனால் ஊர் உலகத்துக்குத் தெரியுமோ? தெரியாது. முதல் தாரம் செத்துப் போயிட்டான்னு, ஒரு முழ நீளத்துக்கு இழுக்கத் தான் தெரியும்!'' என்றாள்.

''நீங்கள் சொல்றது. நூத்துக்கு நூறு உண்மை மாமி!''

''ஏதோ உன் மனசிலேயும் சீதாவைக் கலியாணம் பண்ணிக் கொடுக்கணும்னு தோணித்து. அதே சமயத்திலே எங்க ரகுவும் மனசு மாறி வந்தான். எனக்கு நீங்க ரெண்டு பேருமே வேண்டியவர்கள். ஒரு பக்கம் சொந்தம். இன்னொரு பக்கம் சிநேகம். நீ பட்ட கஷ்டத்துக்கும், விட்ட கண்ணீருக்கும் ஒரு நாள் இல்லாட்டா ஒரு நாள் விடிய வேண்டாமோ? ஏதோ பகவானுக்கு இப்பவாவது கண் திறந்திருக்கிறதே!''

''எல்லாம் நீங்க செய்யற உபகாரம் மாமி!''

''நானாக எதையும் செய்யலே, பாகீரதி! எல்லாம் ஈசுவரன் செய்ய வைக்கிறான். அதனாலே இன்னமே அதிகமாகக் காலதாமசம் செய்யாம நடக்க வேண்டியதைப் பாரு. உள்ளூரிலேயே வைக்க அவனுக்கு இஷ்டமில்லே.... பழநியோ, திருத்தணியோ இல்லே சுவாமி மலையோ ஏதோ ஓர் ஊரிலே வைச்சுக்கலாம். கலியாணத் தேதி நிச்சயமானால் அவனுடைய காரும் வந்து விடும், நீங்கள் கடைகண்ணிகளுக்குப் போக.''

''கார் வைச்சுண்டு இருக்கிறாரா?''



''அது தெரியாதா? சந்தானம் அதைச் சொல்ல வில்லையா? இப்போ நிப்போரிலே இருக்கு. அதான் தெரியலே போலிருக்கு.''

''ஹாம்!''

''நல்ல உசத்தி கார். பியட்!''

''அப்படியா ?''

''இந்த அலமேலு தன் அண்ணு பிள்ளைங்கிற ஒரு காரணத்துக்காக, உன்னோடு சம்பந்தம் செய்ய வரலே, பாகீரதி! நன்னு சம்பாதிக்கிற பிள்ளை. சீதாவின் மனசு போல அவளை வைச்சுப் பான் என்கிற ஒரே நெனைப்பிலே தான் வந்தேன்.''

பாகீரதிக்குக் கண்களில் நீர் தளும்பியது. அலமேலுவுக்குத்தான் என்ன அபிமானம், ஆசை, பரிவு எல்லாம்! இந்தக் கல்யாணம் நடந்தால் சீதா அதிருஷ்டசாலிதான்.

''நான் என்னதான் கைம்மாறு உங்களுக்குச் செய்யப் போறேனே!'' என்று பாகீரதி தழுதழுத்தாள். பிறகு ''உங்களை ஹரிகதையிலும் கோவிலி லும் பார்த்துப் பார்த்துப் பழகியவள் நான். என்னையும் பொருட்டா நெனைச்சு நீங்கள் இவ்வளவு தூரத்துக்கு உப காரம் செய்ய வீடு தேடியே வந்து விட்டேள். கற்பகம்பா தேவிதான் நேரிலே வந்த மாதிரி இருக்கு எனக்கு!'' என்று கண்ணீர் விட்டாள்.

''சீச்சீ! அசடு மாதிரிப் பேசாதே! இந்த லோகமே பரஸ்பர உபகாரத்தினு லும் சிநேகத்தாலும்தான் ஓடறது. அவனவன் தன் தன் காரியத்தையே பார்த்துண்டிருந்தால் அப்புறம் அகல மான பூமி எதுக்கு? குகை குகையா அடைஞ்சு கிடக்கலாமே. அப்போ சரி. நான் புறப்படறேன். இப் போதே எல்லார்கிட்டேயும் சொல்லி ஊர் கூட்டம் கூட்டாதே. முக்கியமா, அந்தப் பிள்ளை, அதான் சந்தானம் அவன்கிட்டே இதைப் பத்தி அதிகம் பேசாதே. எதையாவது சொல்லி உன் மனசைக் கலைக்கப் பார்ப்பான். இந்தக் காலத்திலே யாரையும் நம்பற துக்கில்லே. அப்படியாயிடுத்து உலகம். என்ன தெரிஞ்சுதா ?''

''சரி, மாமி! சந்தானத்துக்கிட்டே நிச்சயமான பிறகுதான் சொல்லு வேன், போதுமா ?''

''அதுதான் விவேகம். நான் வரட் டுமா ? குங்குமம் எங்கே இருக்கு? ஸ்வாமி படத்துக்குக் கீழேதானே?''

கூடத்திலிருந்து அலமேலு பின் கட்டை நோக்கி நடந்தாள். பின் தொடர்ந்த பாகீரதிக்குத் திடீரென்று ஒரு பலம் உண்டாயிற்று. ரகுபதியைச் சீதா பார்த்ததில்லே. சீதாவை அவனும் பார்த்ததில்லே. சந்தானமும், அலமேலு வும் மட்டும் பார்த்தால் எப்படிப் போதும் ?

''மாமி! நான் கேட்கிறேனேன்னு வித்தியாசமா நினைச்சுக்காதேங்கோ! சீதா பிள்ளையைப் பார்த்தால் தேவ லைன்னு எனக்குத் தோணறது!'' என்றாள்.

அவள் மனக்கண் முன் சந்தானம் விவரித்த உருவம் நின்றது; குள்ள மும், குண்டுமாய், தொந்தியுடன்!

குங்குமத்தை இட்டுக் கொண்டே, அலமேலு தாழ்ந்த குரலில், ''பாகீரதி! அதைப் பற்றி நீ கவலைப்படாதே. இங்கே வந்து பார்த்தால், அக்கம் பக்கம் வேடிக்கை பார்க்கிறதுதான் மிச்சமாகும். உனக்கும் நெய்யையும் சர்க்கரையையும் கலந்து ஏதாவது செய்ய வேண்டி வரும். நான் மூணும் மனுஷனுக்குத் தெரியாமல் ஏற்பாடு பண்ணறேன். எப்படின்னு எல்லாம் இப்போ கேட்காதே..... என்ன?'' என்று கூறினாள்.

பாகீரதியின் மனம் சமாதானத்தில் நிரம்பியது.

அலமேலுவின் தலை மறைந்ததும், பாகீரதி, வாசல் வரை வழியனுப்பச் சென்றிருந்தவள் மெதுவாகத் திரும்பி னாள். ரேழியில் நடக்கும்போது, திடீ ரென்று கமலா சந்தானத்தின் அறையி லிருந்து வெளி வந்தாள்.

''ஏன் அம்மா, அலமேலு மாமி, ரகசியம் பேசினாளா? இல்லே, ரகசியத் தொடர்கதை வாசித்தாளா? கோட்டை மாதிரி வீடு, ஊரிலே வேறே வீடு, நெல், தேங்காய், ஃபியட்கார், அப் பப்பா, அக்கா காத்திருந்ததற்குப் பெரிய இடமாகத்தான் பிடிக்கிறு!''

கமலாவின் கலகலப்பைப் பாகீரதி யால் ரசிக்க முடியவில்லை.

''ஏண்டி, ஒட்டுக் கேட்டுண்டிருந் தயா ?''

''இந்த வீட்டிலே பின்னே எங்கே தான் கால் கடுக்க நிற்கிறதாம் ? சந்தானம் ரூம்லே உட்கார்ந்திருந் தேன்......!''

''ஓகோ !''

''கையிலே பஞ்சு இருந்தா காதிலே அடைச்சுண்டிருந்திருப்பேன்......!''

''இந்த வாய்ச்சாலகம் ஒண்ணு தான் இருக்கு, உன்கிட்டே! அது சரி, இது விஷயமா இப்போதைக்கு நீ வாய் திறக்கப்படாது....!''

''எப்போ திறக்கலாம்?''

''கல்யாணம் நிச்சயமானப்புறம்!''

''அது எப்போ ?''

''ஆனாலும் சொல்றேன். அதுக்கு முன்னே ஏதாவது உன் தொண்டையி லிருந்து கிளம்பித்தோ நான் பொல் லாதவளாகி விடுவேன்.''

'' சந்தானத்துக்கிட்டே சொல்ல லாம், இல்லியா?''

''அவன்கிட்டேதான் சொல்லவே படாது..... !''

''ஏன் அம்மா ?''

''அவனுக்கு இந்த வரன்லே இஷ்டம் இருக்கிறதாகத் தெரியலே!''

''உன்கிட்டே அப்படிச் சொன்னானா?''

''ஏண்டி, கேள்வி மேலே கேள்வியா போட்டு உசிரை வாங்கறே? பேசா தென்னு, பேசாம இரு....!''

''சரி, அம்மா !''

''சீதா எங்கே?''

''தெரியாது. நான் நின்னேக்கு வந்த போது, அவனும் நின்னுண் டிருந்தா.... அப்புறம் எங்கே எந்தப் பக்கம் போனானோ தெரியாது. ஒரு வேளை முதலியார் வீட்டுப் பெண் ணைப் பார்க்கப் போயிருப்பான்.''

''ஜானு ?''

''ரிஸ்டு வாட்சைக் கட்டிக்கொண்டு கையை வீசி வீசி நடந்து போனான் அவன். திருப்பதி குடை போற மாதிரி இன்னிக்கு அவ எத்தனை தெருவிலே அந்தக் கடிகாரத்தைக் காட்டப் போயிருக்கானோ !''

''சரி, சரி! ஏதாவது காரியம் செய். மணி பத்து ஆகப் போறது. அல மேலு மாமி வந்ததிலே சமையலே ஆகலே. இனிமேதான் சாம்பாருக்குப் புளியைக் கரைக்கணும்....!''

''எனக்கு இப்பவே பசிக்க ஆரம்பிச் சுடுத்து !''

''இன்னிக்குக் கொஞ்சம் பொறு. கோஸ் ஒரு துண்டு இருக்கு; அதை நறுக்கி வை. கறி பண்ணலாம்!''

''போம்மா, எனக்குப் படிக்கணும்!''

''சரி, நீ போய்ப் படி. நானே நறுக்கிக்கறேன். ஒரு காரியம் சொல் றப்போதான் உனக்கு ஆயிரம் காரி யங்கள் இருக்கும். என்னிக்குத்தான் உடம்பு வணங்கிச் செய்வியோ !''

பாகீரதி அலுத்துக் கொண்டே உள்ளே போக, கமலா சிலோன் சங்கீதத்தைக் கேட்க ரேடியோ பக்கம் சென்றாள்.

ஃ ஃ ஃ

சமையலறையில் கைவேலையில் ஈடு பட்டாலும், பாகீரதியின் மனம் அலைந்து கொண்டிருந்தது. அலமேலு அவளைப் பேச முடியாமல் அடித்து விட்டாள், அவளுடைய தாராள



குணத்தினாலும் இரக்கத்தினாலும். சீதா அலமேலுவுக்கு வாழ்நாள் முழுதும் கடமைப்பட்டவளாக இருக்க வேண்டும்! சீதா கல்யாணமாகிப் புக்ககம் சென்று விட்டால், இந்தச் சம்பந்தத்தின் மூலமே ஜானு, கமலாவின் கல்யாணங்கள் நடந்துவிடும். நாற்பது வயசிலே தாம்பத்தியத்தில் இறங்குகிறவன் கண்டிப்பாக, பெண்டாட்டிப் பேச்சைக் கேட்கிறவனாகத்தான் இருப்பான். என்னதான் சீதா சாதுவானாலும், தங்கைகளின் க்ஷேமம் என்றால் சும்மா யிருக்க மாட்டாள். புருஷனிடம் கெஞ்சியும் அழுதும் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விடுவாள். இந்த ஒரு கல்யாணத்தால் பாகீரதியின் கவலைகளெல்லாம் தீர்ந்துவிடும். இராத் தூக்கம் பகல் தூக்கம் இல்லாமல் பெற்ற பெண்களின் கதியையே எண்ணி எண்ணித் தேசலாகிக் கிடந்த அவளுக்கு இனி மேல் நிச்சயமாக நல்ல தூக்கம் கிடைக்கும். மூன்று பெண்களும் மூன்று வீடுகளுக்கு விளக்கேற்றப் போய்விட்டால், அப்புறம் பாகீரதிக்கு வேறு என்ன நிறைவு வேண்டும்? அவள் நிம்மதியாகக் கஞ்சியோ கூழோ குடித்துக் கொண்டு, ராமாயணத்தையும் கீதையையும் கேட்டுக் கொண்டு காலத்தைத் தள்ளி விடுவாள்.

ரகுபதியின் உருவம், அது சந்தானம் விவரித்த உருவமேயாயினும்—அடிக்கடி சஞ்சலத்தை உண்டாக்கியது. உயரமில்லை ; தொந்தி இருக்கிறது! கற்பனையில் அந்த உருவம் அடங்கின போது சஞ்சலமும் அதிருப்தியும் அதிகமாகத்தான் வளர்ந்தன. சீதா பிரமாத அழகி இல்லைதான். இருபத்தேழு வயதில், அவளுடைய இளமை குறைய ஆரம்பித்திருக்கிறது உண்மைதான். ஆனாலும், அவளுக்கு ஏற்ற கணவனாக ரகுபதி இருக்க மாட்டானோ என்ற பயம் அவள் மனத்தில் உதித்தது.

அடுத்த கணமே, அவனுடைய உருவத்தை மறந்து, மற்ற லௌகிக உடைமைகளில் மனத்தைச் செலுத்தினாள். வீடும் வாசலும், சாப்பிட நெல், வெளியே செல்லக் கார், கைநிறைய சம்பளம்! இதெல்லாம்தான் உலகத்தில் மானமாக வாழத் தேவையானவை. இதையெல்லாம் பெறத்தானே ஒவ்வொருவனும் மாய்ந்து மாய்ந்து உழைக்கிறான்? அல்லது பேராசைப் பட்டு, நாலு பேரை ஏமாற்ற முற்படுகிறான்? உண்மையாக உழைப்பவனிலிருந்து கள்ளமார்க்கெட்காரன் வரை எல்லாருமே தத்தம் மனைவி மக்களுக்காக, சமூகத்தில் பெறக் கூடிய பெருமைக்காக, அந்தஸ்துக்காக வீட்டையும் வாசலையும் சம்பாதிக்கத்தான் பாடுபடுகிறார்கள்! ரகுபதிக்கு இதெல்லாம் ஏற்கனவே இருக்கின்றன! நாற்பது வயது ஆனால் என்ன? நல்ல திடகாத்திரமுள்ள மனிதர்களுக்கு ஐம்பது வயது வரை, ஏன் இன்னும் சில ஆண்டுகளுக்கு மேலே கூடத்தான், சரீரக் கட்டு இருக்கும். பெண்களுக்குத்தான் முப்பது ஆனால், அதுவும் ஒன்று இரண்டு பெற்றுவிட்டால் கிழடு தட்டி விடுகிறது! சீதாவுக்கு இப்போது கலியாணமானால் மறையும் இளமை திரும்பி வரலாம். ஆனால் அதுவும் இன்னும் நாலைந்து வருடங்களுக்கு மேல் தங்காதே?

பாகீரதி தனக்குள்ளேயே கேள்வி கேட்டு, மனத் திருப்திக்கு ஏற்பப் பதில்களையும் தேடினாள். ஒரு விதத்தில் அவள் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறாள் என்பதை மட்டும் உணரவில்லை. அவளுடைய தாய்ப்பாசமும், பெண்கள் வாழ வேண்டும் என்ற ஒரு தாயின் இயற்கையான துடிப்பும்தான் அவளை அம்மாதிரி உணராமல் அடித்துவிட்டனவோ?

சுமார் பதினொரு மணிக்குச் சீதா களைப்புடன் திரும்பினாள். கலியாண விஷயத்தையும் பிரஸ்தாபித்தால், — அவள் ஏதாவது ஏமாற்றமாகப் பதில் சொல்லி விடுவாளோ என்கிற பயம் பாகீரதியைக் கவ்விக் கொள்ளவே, அன்று முழுதும் அதைப் பற்றிய பேச்சையே அவள் எடுக்க வில்லை.

கமலாகூடத் தாயாருக்கு அளித்த வாக்குறுதியை மீறவில்லை.

எட்டு வருடங்களாக எந்த விஷயமானாலும் கூடப் பிறந்த சகோதரனிடம் பேசுவதுபோல மனம் விட்டுப் பேசிய பாகீரதி, இடீரென்று மாறி விட்டதை அன்று சாப்பிடும்போதே சந்தானம் உணர்ந்து கொண்டான். அப்போதுதான் இதுவரை அவன் எண்ணிப் பார்த்திராத ஓர் உண்மையும் விளங்கியது. இத்தனை காலமும் அவன் பாகீரதியின் நொந்த மனத்துக்கு இதமாகப் பேசி, அவளுடைய போக்கின் திசையிலேயே சென்றிருக்கிறான். எந்த விஷயத்திலாவது அவனுக்கும் அவளுக்கும் முரண்பாடு இருந்திருந்தால் அது இதுவரையில் சிறிய விஷயமாகத்தான் இருந்திருக்கிறது.

சீதாவின் கல்யாணம் தினசரி நிகழ்ச்சி அல்லவே? அது அவளுடைய வாழ்க்கையில் மகத்தானதொரு சம்பவம்! அந்தச் சம்பவத்தை நல்ல முறையில் நிறைவேற்றிவிட வேண்டும் என்பது பாகீரதி


KTR
ஸர்பத் (நன்னாரி, ரோஸ், தாழம்பூ, குங்குமப்பூ)
குல்கந்து · ஊறுகாய்கள்
STUDIO: KRIBS
K.T.R. வாசனாதி திரவியசாலை
விஜயபுரம் - திருவாரூர் - தமிழ்நாடு

தினம் தினம் காணும் கனவு! இந்தக் கனவு நனவாகும் தருணத்தில் பாகீரதி மனத்தில் வரித்துவிட்ட மாப்பிள்ளை திருப்தியில்லை என்று தன்னுடைய உண்மையான அபிப்பிராயத்தைக் குடும்பத்தின் நலனை உத்தேசித்துச் சந்தானம் வெளியிட்டான். இது அவனுடைய சாதுரியக் குறைவு என்றால், பாகீரதியின் மனத்துக்கு ஏற்பப் பேசியிருக்க வேண்டும். அப்படியானால் இத்தனை ஆண்டுகளாக நெருங்கிப் பழகிய குடும்பத்துக்கு அவன் துரோகம் செய்தவனாகி விடுவானே?

இந்தக் காலத்தில் மனத்தில் பட்டதை, குற்றங் குறைகளைச் சொன்னால் யாருமே மன்னிப்பதில்லை. இல்லாததொரு பெருமையைச் சொன்னாலோ, முகஸ்துதி செய்தாலோ அதை அப்படியே கேட்கிறவன் நம்பி, புகழுகிறவனையும் நல்லவன் கூட்டத்தில் சேர்த்து விடுகிறான். சீதாவின் வரனைப் பொறுத்த மட்டில் சந்தானம் பாகீரதியின் கண்களுக்குக் குற்றம் செய்தவன்தான். அதோடு மட்டும் இருந்திருந்தால் அவன் வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை.

பாகீரதியின் மனம் எல்லா விஷயங்களைப் பற்றியுமே மாறிவிட்டது போல் அல்லவா இருக்கிறது? இதற்கு அவ மேலு போட்டு விட்டுப் போன தாபமும் ஒரு காரணமாக இருக்குமோ? சந்தானத்துக்கு ஒன்றும் புரியவில்லை.

பதினொன்றரை மணிக்கு அவன் வீடு திரும்பிக் கைகால்களைக் கழுவி விட்டு அறையில் வந்து உட்கார்ந்ததும் பாகீரதி வந்தாள். சாதாரணமாக, இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் 'சந்தானம்! இலை போட்டாச்சு... சாப்பிட வறியா? இல்லை இன்னும் நேரம் ஆகணுமா?' என்று கேட்கிறவள் அன்று ''சாப்பிடறதுக்கு ரெடியானு வந்து சாப்பிட்டுவிட்டுப் போ!'' என்று அவனுடைய முகத்தைக் கூட ஏறிட்டுப் பார்க்காமல் சொல்லிவிட்டுப் போனாள்.

அவளுடைய குரலில் தோய்ந்திருந்த வெறுப்பைச் சந்தானம் உணர்ந்து கொண்டான் என்றாலும், வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

''இதோ வரேன் மாமி!'' என்று தன் இயல்பில் சொல்லிவிட்டு எழுந்தான் அவன்.

அம்மாவின் அலட்சியத்தையும் அதற்கு முன்னால் அவள் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகளின் கடுமையையும் கூடத்தில் இருந்தபடியே உணர்ந்த சீதா, அவள் சமையல்கட்டை நோக்கிச் சென்ற பிறகு சந்தானத்தின் அறை வாசலுக்கு வந்தாள்.

''சந்தானம், அம்மா ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாள்? இதுமாதிரி உங்ககிட்டே பேச மாட்டாளே?'' என்றாள்.

பதில் சொல்லாமல் சந்தானம் அவளைப் பார்த்துச் சிரித்தான். அதே கணத்தில் சீதாவைப் பற்றி ஒரு வேதனையும் உள்ளத்தில் எழுந்தது. சீதா அடக்க ஒடுக்கமான பெண். வீட்டுக்காக, தங்கைகளுக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவள். அவள் ரகுபதியின் மனைவியா? ஏதோ பொருளாதாரப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டிய அவசியமும், பெண் என்றால் யாராவது ஒருவரை மணம்செய்துதான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தமும் அவளை ரகுபதியின் மனைவியாக்கப் போகின்றனவா?

(தொடரும்)

என்ன ஆச்சரியம்!



ஆதாரம்: ''காரனெட்''

தகவல்: விஜயம்

பிரான்ஸ் நாட்டை ஜெர்மனி ஆக்கிரமித்துக் கொண்டிருந்த காலம். ரயிலில் நான்கு பேர் — ஒரு பிரஞ்சு வாலிபன், ஓர் இளம் பெண், ஒரு ஜெர்மன் அதிகாரி, ஒரு கிழவி — பிரயாணம் செய்து கொண்டிருந்தனர்.

இருண்ட குகைப் பாதையில் ரயில் நுழைந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் யாரோ முத்தமிடும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து 'பளார்' என்று அறை விழும் சத்தமும் கேட்டது.

கிழவி நினைத்தாள்: நல்ல தேச பக்தியுள்ள பெண்; ஒரு ஜெர்மானியன் தன்னை முத்தமிட்டதும் விட்டாள் ஓர் அறை!

இளநங்கை நினைத்தாள்: ஜெர்மானியன் கன்னத்தில் இந்த அறை விழ வேண்டியதுதான். ஆனால் அவன் ஏன் என்னை விட்டுவிட்டு அந்தக் கிழவியை முத்தமிட்டான்?

ஜெர்மன் அதிகாரி நினைத்தான்: நல்ல தமாஷ் இது. இந்தப் பெண்ணைப் பிரஞ்சு வாலிபன் முத்தமிடப் போக அவன் என்னை வந்து அறைகிறானே!

பிரஞ்சு வாலிபன் நினைத்தான்: விஷயம் எப்படி! என் கையை நானே முத்தமிட்டுக் கொண்டேன். பிறகு விட்டேன் நாஜியின் முகத்தில் ஓர் அறை!



கல்லுக்குள் ஈரம்

ர. சு. நல்லபெருமாள்

வெள்ளிவிழா இரண்டாவது பரிசு நாவல்

அத்தியாயம் பதினெட்டு

தீயும் தென்றலும்

"பொய்யாக நூறு வருஷங்கள் வாழ்வதை விட உண்மையாக ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும் அம்மா. அதில் தான் ஆத்ம திருப்தி கிடைக்கும்."— இப்படி அப்பா பல முறை சொல்லிக் கேட்டிருக்கிறாள். இன்று அவள், பொய் வாழ்க்கைதானே நடத்துகிறாள். சிவானந்தத்தோடு இன்பமாக இருப்பது போல் இருக்கிறாள். ஆனால் இது பொய்யில்லையா? அவள் இன்பம் பூரணமானது தானா? அவள் இதயத்தில் தகிக்கும் நினைவு வெளியே சொல்லி ஆறுதல் அடைய முடியாமல் உள்ளேயே குமுறி அவளைப் பைத்தியமாக்குகிறதே.

"....உண்மையாக ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும் அம்மா...."

இனி எந்த நாள் அவள் உண்மையாக வாழப் போகிறாள்? உண்மையாக வாழ வேண்டிய சந்தர்ப்பத்தை உதறிப் பொய்யாக வாழ அவள்தான் முடிவு செய்தாள். ஐயய்யோ... இல்லை, இல்லை, அவளை முடிவு செய்ய வைத்து விட்டது சூழ்நிலை. அது செய்த சதிக்கு அவளை நோவானேன் பாவம், அவளே அந்தச் சதிக்குத் தன்னைக் கொடுத்து விட்டு இன்று தவிக்கிறாளே.

கிடைத்த வாழ்வில் வெறுப்பும் இல்லை, விருப்பும் இல்லை. ஆனால் இழந்த வாழ்வின் ஏமாற்றந்தான் அவளைத் தகித்தது. அந்த ஏமாற்றத்தின் அதிர்ச்சியிலிருந்து விடுபடத்தான் புது வாழ்வைத் தேடிக்கொண்டாள். புது வாழ்க்கையில் கடமைதான் கழிகிறதே தவிர இதில் உண்மை இல்லை. இதை விட அவள் தனி மரமாகவே இருந்திருக்கலாம். இவ்வளவு மன உளைச்சலும் ஏற்பட்டிராது. என்னதான் மனத்தில் பதிந்த நினைவுகளைத் துடைத்தாலும், மாறாத தழும்பு மாதிரி ஒட்டிக் கொண்டு அலைக்கழிக்கிறதே. இந்தத் தவிப்புத்தான் அவள் இதயத்திலிருந்து மென்மையைக் களைந்து விட்டு இரத்த வெறி கொள்ளச் செய்து விட்டது.

அவள் அப்பா சொன்னது எவ்வளவு உண்மை!

"பொய்யாக நூறு வருஷங்கள் வாழ்வதை விட....."

கமலாவின் கன்னத்தில் கண்ணீர்த் துளி உருண்டோடியது. அப்பாவின் படத்தை மீண்டும் ஒரு முறை உற்றுப் பார்த்தாள்.

"எதிலும் அவசர முடிவுக்கு வரக் கூடாது. ஒரு முடிவுக்கு வந்த பிறகு, மனம் உளையக் கூடாது...."

அடிக்கடி அப்பா இதைச் சொல்லுவார். அவளைப் பொறுத்த வரையில் இது பலிக்கவில்லை. ஒரு முடிவுக்கு அவளாகத்தான் வந்தாள். பிறகு அவள் கண்டதெல்லாம் மன உளைச்சல்தான்.

அவளுடைய வாழ்க்கையில் கண்ணீருக்கே இடமிருக்கக் கூடாது என்ற ஒரே நோக்கத்துடன்தான் அப்பா அவளை வளர்த்தார்.

"கண்ணீர் முந்தின ஜென்மத்தில் செய்த பாவத்தின் அளவுகோல். நாம் முந்திய ஜென்மத்தில் பாவிகளல்ல என்பதை இந்த ஜென்மத்தில் நிரூபித்துவிட வேண்டும்" என அவர் கூறியது இப்போதும் அவள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.


கமலா சோபாவிலிருந்தவாறே அந்தப் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.. நினைவு கடந்த காலத்தில் திரியத் தொடங்கியது.

ஜமீந்தார் சர் டி. முத்தையாபிள்ளை பார் — அட் - லா, ஜஸ்டிஸ் கட்சியின் தூண்களில் ஒருவர். ஜஸ்டிஸ் கட்சி என்றால், வெள்ளைக்காரத் துரைகளின் பாட்டுக்குத் தருந்த தாளம் போட்டு, சுயநலத்தைப் பூர்த்தி செய்து கொள்ளும் கட்சி என்றுதான் மற்றவர்கள் வியாக்கியானம் செய்தார்கள். ஆனால் சர் டி. முத்தையாபிள்ளையின் வியாக்கியானம் வேறு. வெள்ளைக்காரன் தலையில் வெண்ணெயை வைத்து அவனைப் பிடிக்கும் முறைதான் ஜஸ்டிஸ் கட்சியின் மூலக் கொள்கை; நாட்டின் நலனை, நயத்தால் பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து பெறுவதுதான் அந்தக் கட்சியின் நோக்கம் என்பார்.

ஊத்துப்பட்டியின் ஜமீந்தார் இந்த சர் டி. முத்தையாபிள்ளை. ஜமீன் பதவி, பரம்பரையாக வந்ததல்ல. ஊத்துப்பட்டியின் பழைய ஜமீந்தார், மைனர் விளையாட்டில் உலகத்தை மறந்து கிடந்த போது, அப்படிக் கிடக்க முத்தையாபிள்ளையின் பணம் உதவவே, அந்தப் பணத்துக்கு ஜமீன் ஈடாகி விட்டது. அப்படி ஜமீந்தாரானவர் தான், சர் டி. முத்தையாபிள்ளை, பார்–அட்–லா. மேன்மை தங்கிய பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் விசுவாசமாக இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காகப் பிரிட்டிஷ் சக்கரவர்த்தியான ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் பிரான், உவகையுடன் அளித்த பட்டந்தான் பெயருக்கு முன்னால் துருத்திக் கொண்டிருக்கும் "சர்" என்பது. ஆனால் உண்மையில் பிள்ளைக்கு ஜார்ஜ் மன்னர் நினைத்தபடி அப்படி ஒரு விசுவாசமும் கிடையாது.

பிரிட்டிஷ்காரன் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்கவே மாட்டான் என்று நம்பிய முத்தையாபிள்ளை, வெள்ளைக்காரத் துரைகளோடு நட்பாயிருந்து ! நாட்டுக்கு வேண்டியதைச் சாதித்துக் கொள்ளலாம் என்ற அபிமானத்தில்தான் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்தார். முத்தையாபிள்ளையின் ஆதரவில் ஜஸ்டிஸ் கட்சியும் அந்த வட்டாரத்தில் கொழுந்து விட்டது. முத்தையாபிள்ளையின் செல்வாக்கும் கொடி கட்டிப் பறந்தது.

அவருடைய ஒரே மகள் தான் கமலவாசகி. கமலவாசகிக்கு ஆறு வயது ஆன போது தாயை இழந்து விட்டாள். முத்தையாபிள்ளை தாயாகவும் இருந்து அவளை வளர்த்தார். பெண்களைப் பெற்ற பலர், முத்தையாபிள்ளையின் மாமனார் என்ற



பட்டத்தைப் பெறத் துடித்தார்கள். ஆனால் பண்புமிக்க பிள்ளை, வைராக்கியமாக இருந்து விட்டார். கமலவாசகி பெண்ணாகப் பிறந்தாலும், தனக்கு ஆண் வாரிசு இல்லை என்பதை உணராதபடி அவளை ஆண் பிள்ளையைப்போல் வளர்த்தார்.

கமலவாசகி மீது அவருக்கு அளவுமீறிய பாசம் இருந்தாலும் அது உள்ளடங்கியே இருந்தது. மேலோட்டமாகப் பார்க்கும் போது முத்தையாபிள்ளை கரடு முரடாக இருந்தாலும் இதயத்துக்குள் கனிவு இருந்தது. தன்னுடைய மன உணர்ச்சிகளை வெளியே காட்டிக் கொள்ள மாட்டார்.

அவருடைய அன்பிலும், பண்பிலும் கமலவாசகி வளர்ந்தாள்.

ஜமீந்தார் முத்தையாபிள்ளை, லண்டனுக்குப் போய், பார்–அட்–லா பட்டம் பெற்றாரே தவிர, ஒரு நாள் கூட நீதிமன்றத்தில் ஆஜரானது கிடையாது. அவர் லண்டனுக்குப் போனது, சட்டம் படித்ததெல்லாம் அவருடைய தந்தையின் விருப்பத்துக்காகத் தான். சட்டப் படிப்பே அவருக்கு வெறுப்பைக் கொடுத்தது. ஆனால் முத்தையா

பிள்ளையுடைய தந்தையின் விருப்பமெல்லாம் தன் மகன், லண்டனில் சட்டம் படித்துப் பிராபல்ய வழக்கறிஞராக வரவேண்டும் என்பதுதான்.


ஒரு நாள் கமலவாசலி கேட்டாள்: "பார் — அட்—லா படித்துவிட்டு ஏன் வக்கீல் தொழிலே பார்க்கவில்லே அப்பா?"

"நான் சட்டம் படித்ததெல்லாம் என்னுடைய அப்பாவுக்காக. நான் இலக்கியத்தில், எம். ஏ. படிக்க ஆசை கொண்டிருந்தேன். அப்பாவுக்கு அதில்விருப்பமில்லே. சட்டம் படித்துவிட்டேன். தொழில் பார்த்துத்தான் என்ன பயன்? மனசுக்குப் பிடித்தமில்லாத தொழிலைப் பார்ப்பதில் ஆத்ம திருப்தியே இருக்காதம்மா. அப்பா ''பிரியப்பட்டதற்காக நான் வக்கீல் தொழில் பார்த்தால் பசி இல்லாத போது விருந்து சாப்பிட உட்காருவது மாதிரிதான். அப்பாவுக்காக நான் ஒரு பொய் வாழ்க்கையை வாழ வேண்டியிருக்கும். பொய்யாக நூறு வருஷங்கள் வாழ்வதைவிட உண்மையாக ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும் அம்மா. அதில்தான் ஆத்ம திருப்தி கிடைக்கும்.''

''அப்படியென்றால் என்னை ஏன் படிக்க வைக்கிறீர்கள்?''

''நான் உன்னைக் கட்டாயப்படுத்த வில்லையே, கமலா. விருப்பம் இல்லாவிட்டால் நிறுத்திவிடு. உன்னுடைய மனநிறைவை, உன் போக்கில் தான் நீ பெற்றுக்கொள்ள வேண்டும். நான் சொன்னேன் என்பதற்காக நீ எதையும் செய்ய வேண்டாமே. நான் உன்னை எந்த விஷயத்திலாவது கட்டாயப்படுத்தியிருக்கிறேனா அம்மா? அதில் எனக்கு நம்பிக்கையும்கிடையாதே!''

''கம்மா சொன்னேன். இஷ்டத்தோடுதான் கல்லூரியில் சேர்ந்திருக்கிறேன்'' என்று கூறிக்கொண்டே ஒரு குழந்தையைப் போல் தந்தையின்



கழுத்தைக் கட்டிக் கொண்டாள் கமலவாசகி. அவள் முதுகை வாஞ்சையுடன் தட்டிக் கொடுத்தார் முத்தையாபிள்ளை.

'எவ்வளவு பாசம் வைத்திருக்கிறார்! எவ்வளவு நம்புகிறார்! இவரிடமிருந்துகூட ஒரு ரகசியத்தை ஒளித்து வைத்திருக்கிறோமே' என்ற நினைவில் கமலவாசகி, மனம் புழுங்கினாள். மனத்தைத் திறந்து உண்மையைக் கூறினாலும் முத்தையாபிள்ளை தடுத்துச் சொல்லப் போவதில்லை. ஆனால் ஏன் இந்தத் தயக்கம்? அவரே ஒரு சமயம் சொல்லியிருக்கிறார்:

''கமலா! உன்னுடைய கலியாணத்தைப் பற்றி எனக்குக் கவலையே கிடையாது. அது உன்னுடைய பொறுப்புத்தான். நீ படித்திருக்கிறாய். அறிவு இருக்கிறது; சிந்திக்கும் சக்தியும் இருக்கிறது. உனக்கு வேண்டியவனை நீதான் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அவன் எப்படி இருந்தாலும் சரிதான். எனக்குக் கவலை இல்லை. உன் மீது எனக்கு நம்பிக்கை உண்டு, பொறுப்பில்லாதவனை நீ தேர்ந்தெடுக்க மாட்டாய் என்று.''

இவ்வளவு சுதந்திரம் கொடுத்திருக்கும் தந்தையிடம் அந்த இரகசியத்தைச் சொல்லவில்லையே? சொல்ல முடியவில்லையே?

என்ன இருந்தாலும் தந்தை, தந்தைதான். அவரால் தாயாக முடியுமா? தந்தையாக இருக்கப் போய்த்தானே, அந்த இரகசியத்தை அவளால் இன்னும் சொல்ல முடியவில்லை. சொல்லா விட்டால்தான் என்ன? அவரே ஊகித்து அறிந்திருப்பார். இருந்தாலும், அவள் வாய்விட்டு அந்த இரகசியத்தை இன்னும் அவரிடம் சொல்லவில்லையே! ஆனால் அதை வெளியே சொல்ல வேண்டிய அவசியமே இல்லாமல் அல்லவா போய் விட்டது!

ஒரு நாள் திடீரென்று பெட்டி படுக்கையுடன் கமலவாசகி சென்னையிலிருந்து வீட்டுக்கு வந்தபோது முத்தையாபிள்ளை திகைத்து விட்டார். அவர் எவ்வளவோ துருவித் துருவிக் கேட்டார். ஆனால் கமலவாசகி, ''எனக்குப் படிப்பே பிடிக்கவில்லை. வந்து விட்டேன்!'' என்ற ஒரே பதிலைத்தான் திருப்பித் திருப்பிச் சொன்னாள்.

இதை முத்தையாபிள்ளை நம்பவே இல்லை. மூலகாரணம் ஏதோ ஒன்று இருக்கிறது; அதை மறைக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டார். அவள் தலையை வாஞ்சையுடன் வருடிக் கொண்டே கேட்டார்: ''திடீரென்று படிப்பு பிடிக்காமல் போவானேன்? என்னிடம் ஏதோ மறைக்கிறாய்.''

''இல்லை, அப்பா இல்லை. உண்மையிலேயே படிப்பு பிடிக்காமல்தான் வந்து விட்டேன்'' என்றாள். முத்தையாபிள்ளையின் கண்கள் கலங்கி விட்டன. அப்போதுதான் தம் மனைவியை நினைத்துக்கொண்டார்.

''கடைசியில் எனக்குத் தோல்விதான். தாயில்லாத குறையை நான் இருந்து தீர்த்து விட்டதாகக் கர்வம் கொண்டிருந்தேன். அதை ஒரு நொடியில் மட்டம் தட்டி விட்டாய். என்னதான் வளர்த்தாலும் நான் உன் அம்மாவாக முடியுமா?'' என்று அவர் சொன்னபோது மூக்குக் கண்ணாடிக்குள் தெரிந்த அவர் கண்களில் நீர் முட்டி நின்றது. கமலவாசகி அவர் கழுத்தை ஒரு குழந்தையைப் போல் கட்டிக் கொண்டாள்.

''என்னப்பா இதெல்லாம்? ஏதேதோ பேசுகிறீர்களே? நான் வந்தது படிப்பு பிடிக்காமல்தான். வேறு ஒரு காரணமும் இல்லை'' என்று அழுத்தமாகச் சொன்னாள்.

''ஏன் பிடிக்காமல் போய் விட்டது? வேறு ஏதாவது பிடிக்கப் போய், படிப்பு பிடிக்காமல் போய் விட்டதா?'' என்று குறும்புச் சிரிப்புடன் கேட்டார்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை, அப்பா! ஏதோ பிடிக்கவில்லை. வந்து விட்டேன். நீங்கள் போகச் சொன்னால் மீண்டும் போய்ப் படிக்கிறேன்.''

''வேண்டாம், வேண்டாம். உனக்குப் பிடித்தமில்லாத போது படித்துத்தான் என்ன பயன்? சரி, இனி மேலாவது என்னை விட்டுப் பிரியாமல் இருப்பாயல்லவா? அது போதும்!'' என்றார். பிறகு எதையோ நினைத்துக் கொண்டு சிரித்தார்.

''என்னப்பா சிரிக்கிறீர்கள்?''

''இல்லை.... பெண்ணைப் பெற்றுவிட்டு, அவள் என்னோடேயே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேனே, அதை நினைத்துத் தான். எல்லாம் உனக்குக் கல்யாணம் நடக்கும் வரைதான் இப்படி ஆசைப்பட முடியும்.''

''எனக்குக் கல்யாணமே வேண்டாம்!'' என்றாள் எரிச்சலுடன்.

''அது சரி, எந்த ராஜாவைத் தேர்ந்தெடுக்கிறாய்? அதை முதலில் சொல்லு!''

''நான் ராணியுமில்லை, எனக்கு ராஜாவும் தேவையில்லை'' என்றாள் வெடுக்கென்று.


''பெண்களுக்குக் கோபம் வந்தாலே இப்படித்தான் திடீரென்று வரும். அப்போது சொல்லும் வார்த்தைகளுக்கு அர்த்தம் இருக்காது!'' என்றார் முத்தையாபிள்ளை சிரித்துக் கொண்டே.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ ஒரு மனக் குழப்பத்தில் படிப்பை விட்டு விட்டாள்; இரண்டு மூன்று நாட்கள் கழிந்தால் தானாக விஷயத்தைச் சொல்லுவாள் என்று நினைத்தார். திடீரென்று ஒரு சந்தேகம் எழுந்தது.

அந்தப் பையனுக்கும் இவளுக்கும் தகராறு ஏற்பட்டுச் சண்டை போட்டுக் கொண்டு வந்து விட்டாளோ? அவன் போக்குக்கும், இவளுக்கும் ஒரு நாளும் ஒத்து வராது. அவன் ஊழித் தீ மாதிரி. இவளோ அலங்கார அறைக்குள் எரியும் வண்ண விளக்கு. அவனுடைய தீவிரமும், படபடப்பும், கொண்டிருக்கும் கொள்கையும் எந்த விதத்திலும் இவளோடு ஒட்டவே முடியாதுதான்.

அந்த இளைஞனைப் பற்றிய நினைவு வந்தபோது முத்தையாபிள்ளையின் மனம் குறுகுறுத்தது. அவனுடைய துடுக்கான பேச்சும், எதையும் லட்சியம் செய்யாத குணமும் அவர் நினைவில் பசுமையாக இருந்தன.

ஒரு நாள் சென்னைக் கடற்கரையில் அவரும் கமலவாசகியும் உலவிக் கொண்டிருந்தபோதுதான் முதன் முதலாக அந்த இளைஞனைச் சந்தித்தார். வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்தவனைக் கமலவாசகிதான் கண்டு கூப்பிட்டாள்.





நல் வசந்தக் கனியமுத நய விருந்தாம்
நாவினிக்க ஜிலுஜிலுக்கும் ரெக்ஸ் ஜெல்லி!
களஞ்சியம் போன்ற கனிச் சுவை! அதுதான் ரெக்ஸ் ஜெல்லி குடும்பத்தின் அபிமான இனிப்புப் பண்டமாக விளங்கக் காரணம். ஆவல்தூண்டும் 6 சுவை வகைகளில் உள்ளது: ஆரஞ்சு, லெமன், அன்னாசி, ஸ்ட்ராபெர்ரி, ராஸ்ப்பெர்ரி, செர்ரி.
இலேசானது, ஊட்டமளிப்பது, தயாரிக்க இலகுவானது. தனிப்பட உண்பதற்கும் இனியது ரெக்ஸ் ஜெல்லி—அதன் படிகங்களை வெந்நீரில் கரையவைத்துக் குளிர விட்டு உறையவைத்தால் ஆயிற்று. டப்பியிலுள்ள அல்லது ஸ்டூவ்டு பழங்களோ, ஸ்பாஞ்ச் கேக்குகளோ அத்துடன் சேர்த்து அணி செய்து, கஸ்டர்டு அல்லது க்ரீமை மேலிட்டுப் பரிமாறவும் செய்யலாம்.
கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
REX
JELLY CRYSTALS
இப்போது புதிய பாக்கிங்கில்



விந்தையான பந்தயம்!

பெரிய செல்வந்தரான மகமது இறந்தபொழுது அவருடைய குமாரர்கள் இருவரும் தந்தையின் உயிலைத் தேடி எடுத்தார்கள். அவர்களின் தந்தை ஒரு விநோதமான மனிதராக வாழ்ந்து மறைந்தவர். அவரது உயிலும் அவரது விநோத வாழ்க்கைக்கு ஒரு சிகரமாகவே அமைந்திருந்தது. 'அவர் குமாரர்கள் இருவரும் தங்கள் ஒட்டகங்களில் ஏறி மெக்காவுக்குச் செல்ல வேண்டும். யாருடைய ஒட்டகம் கடைசியாக மெக்காவை அடைகிறதோ அவருக்குத்தான் சொத்துக்கள் அனைத்தும் சேரும்' என்பதே உயிலின் வாசகம். குமாரர்கள் இருவரும் அதன்படி மெக்காவுக்குப் புறப்பட்டனர். மெக்காவை நெருங்கியதும் நகரத்துக்குள் செல்லாமல் பல நாட்களாக ஒட்டகங்களின் மீதே சுற்றிச் சுற்றி வந்தார்கள். ஒருவருக்காவது முதலில் செல்ல மனமில்லை. மிகவும் களைத்துப் போய் ஒட்டகங்களை விட்டு இறங்கி இளைப்பாறும் நிலையில், அந்த வழியாக ஒரு பக்கிர் வந்தார். அவரை அணுகித் தங்கள் தந்தையின் கட்டளையைக் கூறி எவ்வாறு நிறைவேற்றுவது என்று கேட்டார்கள். அவர் உடனே ஓர் ஆலோசனை கூறினார். அவர் கூறி முடித்ததும் இருவரும் பாய்ந்து சென்று ஒட்டகங்கள் மீதேறி மெக்காவை நோக்கி விரைந்தார்கள். பக்கிர் கூறிய ஆலோசனை என்னவென்று உங்களால் கூற முடியுமா?

[பக்கிர் கூறிய ஆலோசனை: இரு குமாரர்களும் தங்கள் ஒட்டகங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ள வேண்டியது. ஒருவன் தான் அமர்ந்திருக்கும் ஒட்டகத்தை மெக்காவுக்குள் முதலில் கொண்டு சென்றால் அவனது சொந்த ஒட்டகம்—அடுத்தவனால் சவாரி செய்யப்படுவது — கடைசியாகத்தானே, — மெக்காவை அடையும்?]

தகவல்: இரா. கோமதி

"எங்கே, இவ்வளவு அவசரம்?" — கமலவாசினிதான் கேட்டாள்.

"உனக்கும் அவசரத்துக்கும் சம்பந்தமே கிடையாது. நீதான் ஜமீந்தாரிணியாயிற்றே" என்று கூறிக் கொண்டு அவள் எதிரே நின்றான் அந்த இளைஞன். முதலில் அவன் முத்தையா பிள்ளையைக் கவனிக்கவில்லை. சற்றுப் பின்னால் வந்த முத்தையாபிள்ளையைக் கண்டதும் அவன் சற்றுக் கூச்சத்துடன் ஒதுங்கினான்.

"என் அப்பா.....!" என்று அறிமுகம் செய்து வைத்தாள் கமலவாசனி.

"ஓ..... ஜமீன்தார்!" என்று வியப்புடன் புருவத்தை உயர்த்தினான் அந்த இளைஞன்.

"ஏனப்பா, ஜமீந்தார் என்றால் உனக்குப் பயமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் முத்தையாபிள்ளை.

"எனக்குச் சோம்பேறிகளைக் கண்டால்தான் பயம்."

" அவ்வளவுதானே ஜமீந்தார்களிடம் உனக்குப் பயம் கிடையாதல்லவா?"

"ஜமீந்தார்கள் என்றால், நம் நாட்டில் வேறு அர்த்தமும் உண்டா ?"

இளைஞனின் துடுக்குத்தனத்தைக் கண்டு திகைத்தார் ஜமீந்தார். முதலில் அவருக்குக் கோபம் வந்தது. ஆனால் அதே சமயம் இளைஞனுடைய துடிப்புப் பேச்சைக் கேட்டுச் சிரிப்பும் வந்தது.

"ஜமீந்தார்களைப் பற்றி நிறையத் தெரிந்திருக்கிறயோ தம்பி?" என்று கேட்டார்.

"தெரிந்து கொள்ளும்படிதானே நடந்து கொள்ளுகிறீர்கள்!" என்றான் இளைஞன்.

"அப்பா, இவர் எப்போதுமே இப்படித்தான். பணக்காரர்களைக் கண்டால் இவருக்குப் பிடிக்காது. இதில் வேடிக்கை என்னவென்றால், இவரும் பணக்காரர்தான்" என்று குறுக்கே பேசினாள் கமலவாசனி.

"ஓ...சொந்த வீட்டையே குறை கூறும் ஆசாமியா?" என்று வியப்புடன் கேட்டார் ஜமீந்தார்.

"சேற்றில் முளைத்து விட்டால் தாமரை சேற்றைப் புகழ முடியுமா?" — பளிரென்று பதில் சொன்னான் இளைஞன். அவன் பேசியதை வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார் ஜமீந்தார்.

"தம்பிக்கு ரஷ்யா போலிருக்கிறது!" என்று கூறி அட்டகாசமாகச் சிரித்தார் ஜமீந்தார் முத்தையாபிள்ளை. அதைக் கேட்டதும் இளைஞனின் முகத்தில் சிறிது கடுமை தோன்றியது. சூடாகப் பதில் கூறத் துடித்தான். ஆனால் ஒன்றும் பேசாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஒரு சிரிப்பை மட்டும் உதிர்த்துவிட்டு நின்றான்.

"அப்பா, இவர் என்னோடு படிக்கிறார். மேடைப் பேச்சில் மகாசூரர்!" என்றாள் கமலவாசனி.

"ரஷ்யக் குஞ்சுகளே பேச்சில் சூரர்கள் தான்!" என்றார் முத்தையாபிள்ளை சிரித்துக் கொண்டே.

"அது உண்மைதான். ஆனால் முதலாளி நாட்டுக் குஞ்சுகளைப் போல் சோற்றில் சூரர்களில்லை." — வெடுக்கென்று பதில் சொன்னான் இளைஞன்.

இந்தக் காலத்துப் பிள்ளைகள்தாம் எவ்வளவு துடுக்காகப் பதில் சொல்லப் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்து வியப்பிலாழ்ந்தார். "சரி, சரி! நீங்கள் இங்கேயே உங்கள் அரசியல் சண்டையை ஆரம்பித்து விடாதீர்கள். ஹாஸ்டலுக்குப் போய்ப் போட்டுக் கொள்ளலாம்" என்றாள் கமலவாசனி.

அந்த இளைஞனை முதலில் சந்தித்த போதே ஜமீந்தாருக்குப் பிடித்து விட்டது.

அவனுடைய அழகும் எதையும் துருதுருவென்று துருவிப் பார்க்கும் கண்களும், எப்போதும் உதட்டில் நடமிடும் குறுநகையும், குறும்புப் பேச்சும், அவர் மனத்தில் இடம் பெற்று விட்டன.

''ஹாஸ்டலுக்குப் போவோமே!'' என்றாள் கமலவாசகி.

''எனக்கு வேலை இருக்கிறது!'' என்றான் இளைஞன்.

''தம்பி, வாயேன். ஹாஸ்டலுக்குப் போய்ப் பேசிக் கொண்டிருக்கலாம். இவளை அங்கு விட்டு விட்டு நான் ஹோட்டலுக்குப் போய் விடுவேன். இன்று என்னோடு நீ ஹோட்டலில் தங்கலாம். எனக்கும் பொழுது போகும்'' என்றார் முத்தையாபிள்ளை.

''மன்னிக்க வேண்டும். எனக்கு வேலை இருக்கிறது. முடிந்தால் நாளை வருகிறேன்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டு போய் விட்டான் அவன்.

ஹாஸ்டலுக்குப் போய்ச் சேரும் வரை அவனைப் பற்றியேதான் பேசினாள் கமலவாசகி. அவள் பேசுவதையே முத்தையா பிள்ளை கவனமாகக் கேட்டாரே தவிர குறுக்கே பேசவே இல்லை.

அந்தப் பையனைப் பற்றிப் பேசுவதில் தான் அவளுக்கு எவ்வளவு உற்சாகம்! அவனுடைய பேச்சு, கெட்டிக்காரத்தனம், குறும்பு அனைத்தையும் பற்றி ரசனையோடு அவள் சொல்லுவதையே ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்த முத்தையாபிள்ளை, அவளிடம் தோன்றிய மாறுதலையும் கவனித்தார். ஒன்று மட்டும் அவருக்குத் தெளிவாக விளங்கி விட்டது. அந்த இளைஞனும் கமலவாசகியும் பிரியமாயிருக்கிறார்கள். இது வெறும் நட்புத்தானா? அல்லது காதலேதானா?

அவனுடைய புரட்சிக்கும் இவளுடைய உல்லாசத்துக்கும் எவ்வளவு தூரம்! தீயும் தென்றலும் இணையுமா; இவளும் இதைப் புரிந்து கொள்ளாமலா இருப்பாள்?

ஜமீந்தாரின் மனம் பலவாறு எடை போட்டுக் கொண்டிருந்தது.

''ஆமாம், இந்தப் புரட்சிக் குஞ்சு, உன்னோடு எப்படிச் சேர்ந்தது?'' என்று கேட்டு வைத்தார்.

''எப்படியோ பழகி விட்டோம். இதுவும் ஓர் அதிசயந்தான்!'' என்றாள் கமலவாசகி. அவள் முகம் குபீரென்று சிவந்தது. நாணத்தின் சாயலில் அவள் அழகு பெருகேறியது.

''இதில் என்ன அதிசயம்? காந்தத்தில் எதிர்த் துருவங்கள்தானே இணையும்; அது மாதிரி!'' என்று கூறிவிட்டு அவளைக் கூர்ந்து பார்த்தார். அவளோ காருக்கு வெளியே பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

அதற்குப் பிறகு அந்த இளைஞனைப் பல முறை ஜமீந்தார் சந்தித்திருக்கிறார். அவனோடு பேசிக் கொண்டிருப்பதில் அவருக்கு அலாதிப் பிரியம். அவனுடைய பேச்சு, தீக் கங்கு மாதிரி சுட்டாலும், அதைக் கேட்பதில் அவருக்கு ஒரு ரசனை. அவனுடைய எண்ணத்திலோ, பேச்சிலோ கொஞ்சம்கூட ஒளிவுமறைவு கிடையாது. தனிமையில் குளிக்கும் ஒரு பெண்ணைப் போல் அவனுடைய பேச்சு அப்பட்டமாக இருப்பதை எண்ணி எண்ணி ரசித்தார்.

ஒரு சமயம் செய்தித் தாளில் வந்த ஒரு செய்தியை அவன் அவரிடம் காட்டினான்.

எங்கோ ஒரு கிராமத்தில் பசிபொறுக்க ஒரு தாய், தன் குழந்தையை விற்றாளாம் — இது தான் செய்தி. அதுவும் பத்திரிகையின் ஒரு மூலையில் அச்சாகி யிருந்தது.

''ஒரு மூலையில் கிடக்கும் இந்தச் செய்தி தான் உனக்கு முக்கியமாகப் பட்டுவிட்டது'' என்றார் முத்தையாபிள்ளை.

''என்ன செய்வது? பத்திரிகை முதலாளிகள் இந்த மாதிரிச் செய்திகளை இப்படி ஒரு மூலையில்தானே அச்சடிக்கிறார்கள்!'' என்றான் வருத்தத்துடன்.

அவனுடைய பேச்சு ஜமீந்தார் முத்தையா பிள்ளைக்குச் சுருக்கென்று தைத்தது.

''பாட்டாளிகளை ஜமீந்தார்களாக்கிவிட வேண்டும் என்கிறாயா?'' என்று கேட்டார்.

''அடேயப்பா! அவ்வளவு பேராசைப்படவில்லை. ஜமீந்தார் வீட்டு நாய்க்குள்ள வசதி கிடைத்தால்கூடப் போதும்!'' என்றான்.

''நாய் நன்றியுள்ளது.''

''சோறு போட்டால் மனிதனும் நன்றியோடுதான் இருப்பான். பட்டினி போட்டால் மனிதன், பேயாகி விடுவான். அதன் பசிக்கு உலகமே இரையாகிவிடும். அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை'' என்று ஆவேசத்துடன் பதில் சொன்னான்.

அடேயப்பா! அந்தப் பிஞ்சு முகத்தில் கோபம் வரும் போது எவ்வளவு உக்கிரமாக இருக்கிறது! அதிலும் அழகு இருப்பதை உணர்ந்தார் முத்தையாபிள்ளை.

கண்டவுடன் பெண்கள் ஆசை கொள்ளும் அழகன்தான், அந்த இளைஞன். ஆனால், அந்த அழகிய உருவத்துக்குள் ஏதேதோ புரட்சிக் கொள்கைகளைப் புகுத்தி வைத்துக் கொண்டிருக்கிறானே! கமலவாசகியோடு அவன் ஒட்டிப் பழகுவது விசித்திரந்தான். அவனை எப்படியும் தன் வழிக்கு இழுத்து விடுவாள் கமலவாசகி. அவளுக்கு அந்தத் திறமை யுண்டு. அவளுடைய அழகே அவனைத் திருத்தி விடும் — அப்படித்தான் முத்தையாபிள்ளை தமக்குள்ளேயே எண்ணிக் கொண்டார்.

முதலில் அவர் மனம் குழம்பினார். ஒரு ஜமீந்தாரின் மகளுக்கு இப்படிச் சமதர்மம் பேசும் துடுக்குப் பையன் பொருத்தந்தானா? கமலவாசகியின் நாசூக்கான வாழ்க்கைக்கும் அவனுடைய கரடுமுரடான போக்குக்கும் சம்பந்தமே இல்லையே!

இருந்தாலும், இருவரும் மனம் ஒன்றிப் பழகுவதை உணர்ந்த முத்தையாபிள்ளைக்கு ஒரு நம்பிக்கையும் தோன்றியது. போகப் போக இவள் வழிக்கு அவன் வந்துவிடுவான்; வாள் வீச்சு சாதிக்காததைப் பெண்ணின் கண் வீச்சு சாதித்துவிடும் என்று நம்பினார். கமலவாசகியின் அழகிலும், சாமர்த்தியத்திலும் அவருக்கு அத்தனை நம்பிக்கை. ஆனால் விரைவிலேயே தம்முடைய கணக்குத் தப்பு என்பதை உணர்ந்து விட்டார். (தொடரும்)

அத்தியாயம் 5

சிறையில் ஒரு நண்பன்

வேலவன் தான் இருந்த அறையின் சூழ்நிலையைச் சுற்றுமுற்றும் பார்த்தான். இமைகளை நன்றாகத் துடைத்துவிட்டுக் கொண்டு பார்த்தான்.

ஆகா! எத்தகைய சூது நடந்திருக்கிறது! புன்னாட்டு விடுதியிலே இரவு படுக்கப் போகுமுன் உணவு அருந்தினானே, உடனே தலை சுற்றிக் கொண்டு வந்ததே. அது வெறும் உறக்கம் இல்லை, ஒரு வகையான மயக்கந்தான் அது!

வேலவனுக்கு இப்போது நன்றாகப் புரிந்தது. தான் உண்ட உணவிலே ஏதோ மயக்க மருந்து கலந்திருக்க வேண்டும்! அப்படியானால் எத்தனை நாழிகை உறங்கியிருக்கிறானோ? ஓர் இரவு மட்டுந்தானோ அல்லது அதற்கு மேலும் மயக்கமுற்ற நிலையிலே தூங்கிப் போயிருக்கிறானோ என்னவோ!

புன்னாட்டு விடுதியிலேயிருந்தவர்கள் தன்னை எத்தகைய அன்போடு உபசரித்தார்கள்! அதிலும் ஒரு சூழ்ச்சியா?

ஆம்; புன்னாட்டுக்குள்ளே இந்தப் பொல்லாத நன்னர்களின் கையாட்கள் இலை மறைவு காய் மறைவாக இருந்திருக்கிறார்கள் போலும்! தன்னை அந்த விடுதியிலிருந்து மயக்க நிலையில் இங்கே தூக்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள்!


சிறைக் கூடத்தின் சுவர்களை ஆராய்ந்து பார்த்தான் வேலவன்! பெரிய பெரிய சுவர்கள்! செம்பிட்டுக் கட்டிய வலுவான உயர்ந்த சுவர்கள்! இரண்டு மூன்று ஆள் உயரத்துக்கு மேலே சாளரப் பலகணிகள்! எளிதில் தப்பித்துவிட முடியாதபடி உயரத்திலே கொண்டு வைத்திருக்கிறார்கள் அந்தப் பலகணிகளை!

வாசலைப் பார்த்தான் வேலவன். உயரமான பெரிய குடுமிக் கதவுகள். இரும்புப் பட்டைகளைப் பதித்து மிக்க உறுதியோடு அமைக்கப்பட்ட சிறைக் கூடக் கதவுகள் அவை. அவற்றுக்குள்ளே சிறிய சிறிய கண்கள். அவற்றின் வழியாகக் காவலர்கள் வெளியேயிருந்து அவ்வப்போது உள்ளே பார்ப்பதற்கான செருகுகள்!

தான் படுத்திருந்த கட்டிலைப் பார்த்தான் வேலவன்! பெரிய கட்டில். படுக்கையும் கட்டில்களின் விளிம்பு அணிகளும் பெரிய அரச எழிலோடு காணப்பட்டன!

வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு






நாளுக்கு நாள்...
உங்கள் மேனியெழிலை
ஓங்கச் செய்வது
ரெக்ஸோனா
அழகுசாதனத் தைலங்கள் இணைந்த விசேஷக் கலவையாகிய 'கேடில்' அடங்கியது ரெக்ஸோனா ஒன்றுதான். பூரிக்கும் இன்ப நறுமணம் நேரமெல்லாம் உங்கள்மீது நின்று நிலவச் செய்வது ரெக்ஸோனா ஒன்றுதான். அன்றாடம் உபயோகியுங்கள் ரெக்ஸோனா.
Rexona
'கேடில்' அடங்கிய
ரெக்ஸோனா
உங்கள் மேனியெழிலுக்கு
உகந்தது
லின்டாஸ்-RX.26-14
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

சரிதான். சிறை பிடித்தாலும் தன்னை ஒரு பெரிய அரசச் சிறையாளியாகத் தான் மிகுந்த மதிப்போடு படுக்க வைத்திருக்கிறார்கள்! வஞ்சகத்திலும் இது ஓர் அரச வஞ்சகம்!

என்ன நோக்கத்தோடு, எத்தகைய அரசப் பணியிலே, எவ்வளவு ஆயமாகப் புறப்பட்டு வந்தான்! அந்தப் பணியிலே இப்படி ஒரு விபரீதம் சூழ்ந்ததா என்று எண்ணிப் பார்த்தான் வேலவன்.

சிறைக்கூடத்தின் கதவுகள் திறந்தன. இரண்டு அரசக் காவலர்கள் உள்ளே நுழைந்தார்கள், கைகளிலே மாபெரும் சூல ஈட்டி ஏந்தியவர்களாக!

உள்ளே வந்த காவலர்கள் வேலவனுக்கு அரசவணக்கம் செலுத்தினார்கள்.

''ஐயன்மீர்! நான் எங்கே இருக்கிறேன் என்று கருணைகூர்ந்து தெரிவிக்கலாமா!'' என்று அவர்களைக் கேட்டான் வேலவன்.

''சேரநாட்டுத் தானைத் தலைவரே! நீங்கள் இப்போது இருப்பது 'துளுநாட்டு மாமன்னன் நன்னர்கோனுடைய சிறைக்கூடம்! புன்னாட்டிலிருந்து இங்கே வந்திருக்கிறீர்கள் நீங்கள்!''

''நன்றி!'' என்று சொல்லி விட்டு அந்தக் காவலர்களின் வீர உடையையும் அதிலே பொறிக்கப்பட்டிருந்த அரசச் சின்னங்களையும் கூர்ந்து பார்த்தான் வேலவன். நன்னர்களுக்குரிய மாங்கனி இலச்சினை அந்தச் சின்னங்களிலே துலங்கியது.

''காவலரே, நான் இங்கே எப்போது வந்தேன் என்று கூறலாமா?''

''நேற்று வந்தீர்கள் — இரண்டு நாள் பயணம் செய்து! இதற்கு மேல் எந்தச் செய்தியைத் தெரிந்து கொள்வதானாலும், எங்கள் தலைவர் சில நாழிகையில் இங்கே வருவார்! அவரைக் கேட்கலாம்!''

இவ்வாறு சொல்லிச் சிறைக்கூடத்தின் கதவுகளையெல்லாம் நன்றாகத் திறந்தான் ஒரு காவலாளி. அடுத்தவன் சொல்லுவான்:

''தானைத் தலைவரே! கூடத்துக்கு வெளியே அரசப் பொய்கை ஒன்று இருக்கிறது. அதற்கு அருகிலே ஒரு சிறு மாஞ்சோலையும் உண்டு. மாலை நேரங்களில் நீங்கள் அங்கே காற்று வாங்கலாம். இப்போது நீங்கள் குளித்து விட்டு வந்தால் காலை உணவு ஆயத்தமாக இருக்கிறது!''

வேலவன் மனத்துக்குள்ளே சிரித்துக் கொண்டான்.

''நன்றி. எனக்கு உணவு வேண்டும் போது சொல்லுகிறேன்!'' என்று கூறி விட்டு அந்தக் கட்டிலில் இருந்து எழுந்து அறையிலே போடப்பட்டிருந்த ஒரு சாய்மானத்திலே வந்து அமர்ந்தான்.

உணவு! தனக்கு உணவு! காலை உணவு! என்ன வேடிக்கை இது! இரவு உணவைச் சாப்பிட்டதற்கு உடனே பரிசு கிடைத்தது! இப்போது காலை உணவா?

வேலவன் கோதை அந்தச் சாய்மானத்திலிருந்து அங்கே இங்கே நகரவில்லை. நண்பகல் வரை அப்படியே கன்னத்தில் கை வைத்தவாறு ஒரே துயரச் சிந்தனையிலே மூழ்கிப் போய் அமர்ந்து விட்டான்!

நண்பகல் ஆயிற்று! சிறைக்கூடத்துக்குள்ளே பாதுகாவலரின் தலைவன் நுழைந்தான். வாளை உறையிலிருந்து உருவி அரச வணக்கம் செலுத்திவிட்டு மறுபடியும் உறையிலே பூட்டினான் அந்தப் பாதுகாவலன்!

வேலவன் ஒரு பெரிய நாட்டின் தானைத் தலைவன் அல்லவா? அதற்குரிய மதிப்பை அந்தக் கயவன் தருகிறான் போலும் என்று எண்ணினான்!

இருக்கையிலிருந்து எழுந்து வணக்கம் செலுத்திவிட்டு அந்தக் காவலர் தலைவனை அருகிருந்த இன்னொரு சிறிய இருக்கையிலே அமரும்படி கூறினான் வேலவன்.

''இல்லை. நான் நிற்கிறேன். தாங்கள் உணவு அருந்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காகவே இங்கே வந்தேன்......!''

இவ்வாறு சொல்லி வெளியே நின்ற காவலர்களை அழைத்தான்.

''விடுதிக்குச் சென்று வேலவருக்குரிய உணவைக் கொண்டு வாருங்கள்!'' என்று கட்டளை இட்டு அந்த அரக்கர்கள் இருவரையும் அங்கிருந்து அனுப்பி விட்டு, ஒரு சிறிய மடக்கோலையை வேலவனிடம் நீட்டினான் அந்தக் காவலர் தலைவன்.

வேலவன் அந்த மடக்கை வாங்கித் திறந்து பார்த்தான்.

''இந்தக் காவலர் தலைவன் நமக்கு நண்பன். அவ்வப்போது வந்து பார்த்துக் கொள்ளுவான். உணவு அருந்தாமல் உடலைப் பேணாமல் துயரத்துக்கு உள்ளாக வேண்டாம். எதிர் காலத்தில் நீங்கள் செய்ய வேண்டிய அரசப் பணிகள் உங்கள் வரவை எதிர் நோக்கி நிற்கின்றன. நிலைகலங்காமல் உரிய தருணத்துக்குக் காத்திருங்கள். கொற்றவையின் மீது ஆணையாக இந்த

எழுத்தை நம்புங்கள். போகப் போக இதன் உண்மை துலங்கும்!''

இவ்வாறு அந்த மடக்கோலையிலே எழுதியிருந்தது! கையெழுத்து யார் என்று இல்லை.

''தலைவரே! எழுத்தைப் படித்துவிட்டீர்கள் என்றால் அதை என்னிடம் திருப்பிக் கொடுத்து விடுங்கள், கருணை கூர்ந்து!'' என்று பணிவோடு சொல்லி அந்த ஓலையை வாங்கிக் கொண்டான் காவலர் தலைவன்.

இப்போது காவலர்களிலே ஒருவன் திரும்பி வந்தான்.

''உணவு இன்னும் சற்று நேரத்தில் வருகிறது.''

இவ்வாறு அறிவித்தான் அந்தச் சிறைக்கூடக் காவலாளன்!

ஃ ஃ ஃ



வேலவன் கோதை எதிர்பாராது நேர்ந்த தன் துயர நாட்களை அந்தச் சிறைக்கூடத்திலே கழித்தான். எத்தனை நாட்கள் என்று அவனுக்கே தெரியாது. சேர நாட்டைப் பற்றியோ, புன்னாட்டைப் பற்றியோ, நீலவல்லியைப் பற்றியோ எத்தகைய செய்திகளும் இல்லை! காலையில் எழுந்து பொய்கையிலே குளித்துவிட்டு அந்தப் பொய்கைக் கரையிலே இறைவனை வழிபடுவான். சேரர்களின் குலதெய்வமான கொற்றவைக்கு மனத்தின் ஆழத்திலிருந்து வணக்கம் செலுத்துவான். மாலை நேரங்களில் மாந்சோலையிலே நடந்து செல்வான். அந்தச் சோலைக்கு வெளியே அதைச் சுற்றி நின்ற மாபெரும் மதில்களை இரண்டு கண்களாலும் அளந்து அளந்து நிற்பான். தன்னுடைய உள்ளத்தின் விளிம்பு வரை உயர்ந்து அகன்று நின்ற அந்த மதில்களிலே மனத்தைக் கொண்டு முட்டுவான்! எண்ணங்களைக் கொண்டு போய் மோதுவான்! வேறு என்ன செய்ய முடியும்! யாரோ ஊர் பெயர் தெரியாத ஒரு நண்பர் இந்த உடம்பைப் பற்றி இத்தனை ஆர்வத்துடன் மடக்கோலை அனுப்பினரே, அதன் பிறகு வேறு எத்தகைய செய்தியும் இல்லையே என்று ஏங்குவான். நீலவல்லியும் தன்னைப் போலவே இதேபோன்றதொரு சிறைக்கூடத்திலேதான் எங்கேயோ இருக்கிறாளோ! அல்லது புன்னாட்டிலே தன்னுடைய தந்தையார் அரண்மனையிலே தன்னைப் பற்றிய துயரச் செய்தியை அறிந்து தனது விடுதலைக்காகக் காத்திருக்கிறாளோ? புன்னாடு! அந்த நாடு முழுவதுமே நன்னர்களின் ஒற்றர்களும் உட்பகையாளர்களும் புகுந்து நிரம்பியிருந்தார்களே! இல்லையென்றால் இத்தனை ஆயமாகத் தன்னை எப்படிச் சிறைப் பிடித்து இங்கே கொண்டு வர முடிந்தது! அது போல மலர்வேணிய மன்னனையும் அவனுடைய சுற்றத்தார்களையும் சிறைப் பிடித்து வந்து விட்டார்களோ! அந்த நீலக் கல் சுரங்கம் நன்னர்களின் கைக்கே வந்து விட்டதோ!

ஒரு நாள் மாலை இவ்வாறு பற்பல எண்ணங்களிலே உள்ளம் தோய்ந்தவனாக, அந்தச் சிறைச்சாலைச் சோலையிலே உள்ள ஒரு கருங்கல் இருக்கையிலே அமர்ந்திருந்தான் வேலவன் கோதை. அப்போது அவனை நோக்கி விரைவாக நடந்து வந்தான் பாது காவலரின் தலைவன். அன்று அவனிடம் மடக்கோலை கொடுத்தானே அதே வீரன்!

வேலவனுக்கு மிகுந்த பணிவோடு அரச வணக்கம் செலுத்திவிட்டு அந்தக் காவலர் தலைவன் சொல்லுவான்:


''தானைத் தலைவரே! என்னோடு சற்று இந்தப் பொய்கைக் கரையோரமாக நடக்கலாமா?''

வேலவன் எழுந்தான். இருவரும் கரையோரமாய் நடந்தார்கள்.

''ஐயா! கடந்த பல நாட்களாக இத்தகைய ஒரு வாய்ப்புக்காகத்தான் காத்திருந்தேன். இந்தத் துளுநாட்டுத் தானைத் தலைவர் மிஞிலி இப்போது போரிலே சென்றிருக்கிறார். எங்கள் படை முழுதும் களத்திலே போர்ப் பணியிலே நிற்கிறது. அதனால் சற்று அச்சம் நீங்கித் தங்களோடு பேச வந்தேன்!'' என்று தொடங்கினான் அந்த வீரன்.

''துளுநாட்டு வீரரே, அன்றொரு நாள் நீங்கள் மடக்கோலை ஒன்று கொண்டு வந்து கொடுத்தீர்களே. அரைகுறை நம்பிக்கையோடுதான் முதலில் அதைப் படித்து அதன்படி நடந்தேன். அதிலே ஏதும் சூழ்ச்சி இருந்தால் நீங்கள் தரும் விருந்திலே ஏதாவது மருந்து கலந்திருந்தால், பட்டினி கிடந்து மடிவதைவிட அந்த உணவை அருந்தியே மடிந்து விடலாம் என்று கருதித்தான் ஒரு முடிவுக்கு வந்தேன். ஆனால் அதில் சூது ஒன்றும் இல்லை என்று கண்டு சற்று மனம் தெளிந்தேன். இப்போது சொல்லுங்கள், நீங்கள் யார் என்று!''

இவ்வாறு கேட்டான் வேலவன்-கோதை. அதற்கு மறுமொழி சொன்னான் அந்தத் துளு வீரன்.


Kleertone
நேர்த்திக்கும்
சிக்கனத்திற்கும்
கிளியர்டோன்
இஸ்திரிப் பெட்டிகள்:
''எலிகெண்ட்'' இஸ்திரிப் பெட்டி.
''இம்பீரியல்''
ஆட்டோமேடிக்
இஸ்திரிப் பெட்டிகள்.
கெட்டில்கள்:
குமிழ் மூடியும், பாதமும்
பொருந்தியது
''இம்பீரியல்''
கெட்டில்.
கெட்டிலும்
கிடைக்கிறது
டோஸ்ட்டர்:
முறுகலான பொன்னிற
டோஸ்ட்டுகள்
தயாரிக்க.
ரேடியண்ட் ஹாட் பிளேட்:
ஒரு தொல்லையில்லை, பரபரப்பு
இல்லை– உங்கள் சமையல்
வேலையே இலகு
வாகிவிடும்.
மடக்கக்கூடிய எஃகு
பர்னிச்சர்:
கனமும் சிக்கனமும்
பொருந்தியவை.
சோபிக்கும்
வர்ணங்களிலே
நாகரீக வடிவழகு
வாய்ந்தவை.
கிளியர்டோன் தயாரிப்புகள்
என்றாலே உறுதியான பாதுகாப்பும்
நியாயமான மதிப்பும் உங்களுக்குக்
கிடைப்பது நிச்சயம். செப்பம்
செய்வதிலே யாதொரு தொல்லையும்
இராது. ஏனெனில், நம் நாடெங்கும்
இவ் வசதிகள் கிடைக்கின்றன.
தவிர இத் தயாரிப்புகள்
எல்லாவற்றுக்கும் 1 வருட கால
உத்தரவாதம் தரப்படுகின்றன.
நல்வாழ்வுக்கே கிளியர்டோன் தயாரிப்புகள்
GRA
ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிட்.

''ஐயா! ஒரு பெரிய மற்கூடம் கான கத்திலே இருக்கிறது. ஆதனூர் என்ற மாபெரும் உத்தமர் ஒருவர் எங்களுக் கெல்லாம் ஆசிரியர். அறமும் சீலமும் அன்பும் வீரமும் நேர்மையும் நிரம்பியவர். அத்தகைய பேராசிரியரின் மாணவர்கள் சிலர் இந்த அரண்மனையிலே ஒளிவு மறைவாக இருக்கிறோம். தமிழ் நாட்டின் மறுமலர்ச்சி ஒன்றே எங்கள் குறிக்கோள். மிஞிலி என்ற தீவினையிலே சிக்கி எங்கள் மன்னர் ஏதேதோ கொடுமைகள் செய்கிறார். பெற்ற மகளைக் கொடுமைப்படுத்தினார். அந்த உத்தமி இந்த அரண்மனையிலிருந்தே ஓடிச் சென்று விட்டாள். இப்போது பெற்ற மகனை இளவரசனை ஒவ்வொரு நாளும் மிஞிலியின் தீய சூழ்ச்சிகளுக்கு இரையாக்கி வருகிறார். அந்த இளவரசர், நல்லவர் என்றாலும் உள்ளத் துணிவும் உறுதியும் இல்லாத நிலையில், மடிந்து மறைந்து போன தன் அன்னையையும் தப்பிச் சென்று மறைந்துவிட்ட தமது தமக்கையையும் பற்றியே எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார். இந்தக் கொடிய மிஞிலியின் பிடியிலிருந்து இந்த அரண்மனை விடுபட்டு என்றைக்கு எங்கள் இளவரசர் பட்டத்துக்கு வருவார் என்று, என்னைப் போலவே ஆவலோடு காத்திருக்கும் வீரர்கள் பலர் இந்த அரச வட்டத்திலே இருக்கிறோம். ஆனால் மிஞிலி என்றால் அனைவருக்குமே ஒரு நடுக்கந்தான். என்றாலும், இருள் விலகும் என்றும், ஒளி உதிக்கும் என்றும் எங்களுக்கு அடிக்கடி ஆறுதலும் ஊக்கமும் தருகிறவர் எங்கள் ஆசிரியர் ஆதனூர் ஒருவர்தான்! அவரையும் இப்போது அடிக்கடி சந்திக்க முடிவதில்லை. இங்குள்ள அடக்குமுறை அப்படி! இப்போது எல்லாரும் போரின் மீது சென்றிருப்பதால் எங்களுக்குச் சற்று விட்டாற்றியாக இருக்கிறது. இதுவும் எத்தனை நாளைக்கோ அல்லது நாழிகைக்கோ தெரியாது!''

இவ்வாறு சொல்லிப் பெருமூச்சு விட்டான் அந்த வீரன்.

''போர் என்று சொல்கிறீர்களே, யாரோடு போர் செய்யச் சென்றிருக்கிறான் உங்கள் தலைவன்?'' என்று கேட்டான் வேலவன் கோதை.

''மிகவும் துயரமான செய்தியை உங்களுக்குச் சொல்ல வேண்டியதிருக்கிறது. சேரலாத மன்னர் சோழனோடு போர் செய்து அந்தப் போரிலே மடிந்து விட்டார்!''

அவ்வளவுதான். வேலவன் கோதைக் குத் தலை சுற்றியது. அப்படியே செல்வந்தி அடிகளின் உருவந்தான் வேலவனின் கண் முன் நின்றது. இந்த அதிர்ச்சி தரும் செய்திக்கு அவனை ஏற்கனவே ஆயத்தம் செய்திருந்தார் அல்லவா அடிகள்! ஆனாலும் எத்தகைய துயரச் செய்தி அது! சிறைக் கூடத்திலிருந்தா அதைக் கேட்க வேண்டும்!

''தானைத் தலைவரே! போர்க்களத்தில் எதிர்பாராதவாறு சேரமன்னரும் சோழரும் இருவருமே மடிந்தார்களாம். அந்த எதிர்பாராத அதிர்ச்சிக்கு நடுவே புதிய அரசர் உங்கள் சேர அரசக் கட்டிலிலே இடரென்று முன்னேற்பாடு இல்லாத நிலையில் முடிசூட நேர்ந்தது. நார் முடி தரித்த காரணத்தால் நார் முடிச் சேரல் என்று பெயர் பெற்று முடிசூடியிருக்கிறார் அவர்!''

''வீரரே! இப்படிப்பட்ட நிகழ்ச்சியும் நடந்துவிட்டதா எங்கள் நாட்டிலே! சேரலாத மன்னருக்குப் பிறகு அவருடைய வீர இளவல் முடிசூடியது முறைமைதான். என்றாலும், இத்தனை முதுமையில் எங்கள் அரசர் உயிர் நீத்த போதிலும், அவருடைய அன்பும் வீரமும், ஆற்றலும் எண்ணி எண்ணி என் மனம் துயரம் அடைகிறது!''

இவ்வாறு சொல்லி நீண்ட நேரம் மௌனமாகவே நடந்தான் வேலவன். துளுநாட்டு வீரன் சொல்லுவான் :

இதை அறிவீர்களா?

☐ ஒரு மின்னல் ஆகாயத்தில் மின்னினால், அது மின்னிய பகுதியிலேயே மட்டும் ஒளி வீசி மறைவதில்லை. அதன் ஒளி ஆகாயம் முழுவதும் பரவுகின்றது. ஒரு செகண்டில் ஆயிரத்தில் ஒரு பகுதி நேரத்தில் மின்னிய மின்னல் ஒன்றின் ஒளி, அதைப் போல் முப்பது மடங்கு நேரம் ஆகாயத்தில் நீடித்திருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

☐ உலகத்தில் ஏறத்தாழ 5,300 வெந்நீர் ஊற்றுக்கள் உள்ளன.

☐ அயர்லாந்து, ஐஸ்லாந்து, நியூஜிலாந்து ஆகிய நாடுகளில் பாம்பே கிடையாது.

☐ மருந்துக் கடைகளில் மருந்து வாங்கும் வகையில் இந்தியாவில் சராசரியில் ஒருவர் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 செலவழிக்கிறார். பிரிட்டனிலும், ஜேர்மனியிலும் உள்ளவர்கள் ரூ. 30; அமெரிக்காவில் ரூ. 90 எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

☐ ஈ ஒரு நாளைக்கு 6.5 மைல்கள் பறந்து போக முடியும்.

-'லையன்ஸ் நியூஸ் லெட்டர்'
தகவல்: 'ரமணன்'

''ஐயா, நார் முடிச்சேரல் முடி சூடியதும் அவருடைய முதலாவது செயல் எங்கள் துளுநாட்டுப் படையெடுப்புத்தான். ஆய் எயினன் என்ற வீரனுடைய தலைமையிலே ஒரு படை எங்கள் துளுநாட்டை நோக்கி வந்திருக்கிறது!''

வேலவன் இடைமறித்தான்.

''ஆய் எயினன் தலைமையிலா? அப்படியானால் இளவரசர் செங்குட்டுவருக்கு இதில் பங்கில்லையா?'' என்று கேட்டான் வேலவன், மிகுந்த ஆவலோடு.

''இல்லை என்றுதான் நினைக்கிறேன். ஆய் எயினனுடைய இந்தப் படையெடுப்பு பற்றி முன்னதாகவே தெரிந்து கொண்டு அந்தச் சேரப் படையை, ஆய் எயினனின் தலைமையில் வருகிற அந்தத் தானையைப் பாழி என்ற இடத்திலே எதிர்த்துத் தாக்குவதற்குச் சென்றிருக்கிறது துளு நாட்டுப் படை. மிகப் பெரிய படை! எங்கள் நாட்டுப் படைத் தலைவர் மிஞிலியே சென்றிருக்கிறார்!''

வேலவன் கோதை புருவங்களை நெரித்தான். அவனுடைய நெற்றியிலே வேதனை நெளிந்தது.

''எங்கள் புதிய அரசர் சற்று விரைவு கொண்டு விட்டாரோ என்று எண்ணுகிறேன். சரி! நடந்தது நடந்து விட்டது. இப்போது இளவரசர் செங்குட்டுவருக்குத் துணையாக நிற்க வேண்டிய நானும்கூட இங்கே வந்து சிக்கிக் கொண்ட பிறகு, வேறு என்ன தான் செய்ய முடியும்! புன்னாட்டின் நிலையைப் பற்றியாவது அவர்களுக்குத் தெரியுமோ என்றால் அதுவும்—''

''ஐயா, புன்னாடு முழுவதும் எங்கள் ஒற்றர்களும் வீரர்களும் நிரம்பியிருக்கிறார்கள். வெளிப்படையாக நாங்கள் புன்னாட்டைத் தாக்கி நீலக் கல் சுரங்கத்தைக் கைப்பற்றிவிட்டால், தமிழக மன்னர்கள் பலரும் கூட்டாக அணி திரண்டு எங்களைத் தாக்குவார்கள் என்று கருதி, நீலக்கல் சுரங்கத்தைத் தாக்கவில்லை மிஞிலி! ஆனால் புன்னாடு முழுவதும் செயல் முறையிலே எங்களுடைய கட்டுப்பாட்டுக்குள்தான் சிக்கிக் கிடக்கிறது. மலர்வேணியார் எவ்வளவோ வெகுண்டு பார்த்தும் நீங்கள் இங்கே இருப்பது போல, மலர்வேணிய மன்னர் தம்முடைய அரண்மனைக்குள்ளேயே எதுவும் முழு உரிமையோடு செய்ய இயலாத நிலையில் ஒரு வகையான சிறை வாழ்க்கைதான் வாழ்ந்து வருகிறார், கூண்டுக்குள் புதிதாக அடைபட்ட புலிக் குட்டியைப் போல!''

வேலவன் கோதை ஏதும் பேசவில்லை. நெற்றியைப் பிசைந்து கொண்டே நடந்தவன், பொய்கைக் கரையிலே ஒரு சிறிய படிக்கட்டுக்கு அருகில் வந்ததும் நின்று விட்டான்.

''துளுநாட்டு வீரரே, உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். ஒளிக்காமல் மறைக்காமல் என்னிடம் உண்மையைச் சொல்லுவீர்களா?'' — என்று கேட்டான் வேலவன், மிகுந்த ஆர்வமும் ஆவலும் மேலிட்டவனாக!

''ஐயா, இத்தனை செய்திகளும் உங்களிடம் சொன்ன பிறகும்கூட—''

''இல்லை. இல்லை. உங்களை நான் சந்தேகப்படவில்லை. உங்களுக்குத் தெரிந்திருக்குமோ என்றுதான்.''

''ஐயா, வெளிநாட்டிலிருந்து இந்தத் துளு நாட்டுக்கு யார் வந்தாலும் அல்லது இங்கிருந்து யார் வெளியே போனாலும் எனக்குத் தெரியும். சிறைக் கூடங்களிலே யார் காவலில் வைக்கப்பட்டிருந்தாலும் சரி, என்னுடைய பணிமுறை இல்லாமல் அது நடவாது! தவிரவும் நகரச் சாவடிகளிலே நம்முடைய ஆதன் ஆசிரியரின் மாணவர்கள் சிலர் பணி புரிகிறார்கள்! எந்தச் செய்தியும் உடனுக்குடன் எனக்கு வந்து விடும்! சூழ்ச்சியினாலேயே வெல்ல வேண்டும் என்று சொல்லுகிறவர் எங்கள் ஆசிரியர் பெருமான்!''

இவ்வாறு களிப்போடு கூறினான் அந்த வீரன். அதன் பேரில் வேலவன் கேட்டான்:

''புன்னாட்டு இளவரசியைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?''

வேலவன் இப்படிக் கேட்டதும் அந்தத் துளு வீரன் பளிச்சென்று மறுமொழி கூறினான்.

''யார், நீலவல்லியைப் பற்றிக் கேட்கிறீர்களா? அந்தச் செய்தி தெரியாதா உங்களுக்கு?''

நீலவல்லி என்று அந்த வீரன் இத்தனை அன்போடு அவள் பெயரைச் சொன்னதும் வேலவன் கோதைக்கு உள்ளம் நெகிழ்ந்தது. 'அந்தச் செய்தி' என்று அவன் சொன்னதும் ஆவல் பன்மடங்காயிற்று.

''ஐயா, வீரரே! நீலவல்லி எங்கே இருக்கிறாள் என்று எனக்குத் தெரிந்தால் என் உள்ளத்திலே ஒரு பெரிய குழப்பம் நீங்கும். அந்தச் செய்தியைத் தெரிந்து போகத்தான் நான் புன்னாட்டுக்கு வந்தேன். வந்த இடத்தில்தான் இத்தனையும் நேர்ந்தது!'' என்றான் வேலவன்.

பேசிக் கொண்டே இருவரும் மேலே நடந்தார்கள்.

(தொடரும்)

மூங்கிலின் மீது பருத்தி விளைவிக்க முடியுமா உங்களால்?



SOBHAGYA-GR7

மூங்கிலின் மீது பருத்தி விளைவிக்க எங்களால் முடியுமென்று கூறிக்கொள்ளவில்லை நாங்கள். என்றாலும் அதற்கு அடுத்தபடியான ஒன்றை நிறைவேற்றுகிறோம். மூங்கிலையே பருத்தி போன்றதொரு பஞ்சாக மாற்றுகிறோம்.

கிராஸிம் ஸ்டேபிள் ஃபைபர் என்று நாங்கள் வழங்குகிறோமே அது இயற்கைப் பஞ்சு போலவே இருக்கும். பருத்தியோடு அதனைக் கலந்து நெசவு செய்வதனால் கிடைக்கும் துணி, மாறாத புதுமெருகோடு என்றும் பொலிவுடன் சோபிக்கும். கிராஸிம் செயற்கைப் பஞ்சுடன் பருத்தி இணைந்த துணிகள் உயரிய பண்புகள் கொண்டவை, மேனிக்கு இணக்கமானவை, அணியக் கச்சிதமானவை, நீடித்துழைப்பதோடு, சலவைக்கும் எளிதானவை. அதே சமயம் விலையும் மிகக் குறைவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே, துணி வாங்கும்போது குறிப்பிட்டுக் கேளுங்கள்:

கிராஸிம் ஸ்டேபிள் ஃபைபர் இணைந்தது.

க்வாலியர் ரேயான் ஸில்க் மானுபாக். (வீவிங்) கம்., லிட்., நாக்தா (ம.பி)

தொழில்நுட்ப விவரங்களுக்கு தயவுசெய்து எழுதுக:
டெக்ஸ்டைல் ரிஸர்ச் டிபார்ட்மெண்ட், குவாலியர் ரேயான், இண்டஸ்ட்ரீ ஹவுஸ்,
159, சர்ச்கேட் ரிக்லமேஷன், பம்பாய்-1.



திருமுருக கிருபானந்தவாரியார்

55. மூர்க்கர்தானா?

ஒரு நாடு உயர்ந்தது என்று அதனுடைய நில இயல் அமைப்பைக் கருதி உரைப்பது சாமானியம். காடாக இருப்பினும், நாடாக இருப்பினும், பள்ளமாக இருப்பினும், மேடாக இருப்பினும் எவ்விடத்தில் சான்றோர்கள் இருக்கின்றார்களோ, அவ்விடம்தான் உயர்ந்தது.

> "நாடாகொன்றோ காடா
> கொன்றோ
> அவலாகொன்றோ மிசையா
> கொன்றோ
> எவ்வழிநல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய
> நிலனே"

என்பது ஔவைப் பிராட்டியின் வாக்கு. ஏனைய நாடுகளில் சான்றோர்கள் இருப்பினும் தொண்டை நாட்டில் நிரம்பவும் இருக்கின்றனர். அதனால் தான், ஔவையார் இந்தத் தொண்டை நாட்டினைக் குறிப்பிடுகின்ற போது, 'சான்றோருடைத்து' என்று அழகாக அருளிச் செய்தார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுமே திரண்டு ஒரு திருவுரு அடைந்தார்களோ என்று நினைக்கத்தக்க தெய்வச் சேக்கிழார் திருவவதாரம் செய்தது தொண்டை நன்னாடு எனில் அதன் பெருமை அளவிடற்கெளியதோ?

சான்றோர் பலர் வாழ்கிற தொண்டைவள நாடு எந்நாட்டினுக்கும் சிறந்த நன்னாடு. அத்திருநாட்டில் பாலாற்றுக்கு வடபால் அன்னங்கள் வாழும் குளங்கள் சூழ வளமிக்க ஊர் திருவேற்காடு. இது சென்னை நகரத்துக்கு மேற்கே பதின்மூன்று கல் தொலைவிலும், பூவிருந்தவல்லியிலிருந்து இரண்டு கல் தொலைவிலும் உள்ளது.

வாய்மை குன்றாத தூய்மையுடைய வேளாண் மரபில் தலைமை பெற்ற பெரியார் ஒருவர் அந்தத் திருப்பதியில் வாழ்ந்தார். அறிவு தோன்றிய நாள் தொட்டு சிவபெருமானுடைய திருநீற்றினையே மெய்ப் பொருளாகக் கருதியவர் அவர். உம்பர்க்காக, ஆலமே அமுதாகக் கொண்டு உண்ட நம்பரடியார்கள் உண்ணுவதற்கு இனிய உணவுகளைக் கொடுத்துப் பிறகே தாம் உண்ணும் நியதியை வழுவாது மேற்கொண்டவர் அவர். தூய அன்னம், நெய், இனிய கறிகள், பால், தேன் முதலியவைகளை அமைத்துச் சிவனடியார்களை வணங்கி, இன்னுரை கூறி, அகமும் முகமும் மலர்ந்து, அன்புடன் அமுது செய்விப்பார்.

தானத்திலேயே அப்பெரியாருடைய பொருள்கள் யாவும் செலவழிந்தன. வீடு, நிலம், மாடு, கன்று முதலிய அனைத்தையும் விற்றாயிற்று. வறுமை எய்தி வாடியபோதும் தமது குறிக்கோளினின்றும் நாயனார் பிறழவில்லை. தாம் முன்பு கற்ற சூது ஆட்டத்தால் பொருளீட்டித் தமது கொள்கையை நிறைவேற்றத் திட்டமிட்டார். சூதாடுவோர் யாரும் திருவேற்காட்டில் இல்லாததால் அங்கிருந்து புறப்பட்டார். சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் சென்று, உருகிய உள்ளத்துடன் தொழுது, ஆங்காங்கு சூதாடி அதனால் வரும் பொருளைக் கொண்டு அடியார்களுக்கு அன்னம் படைத்து மகிழ்வார்.

சூது ஐம்பெரும் பாவங்களில் ஒன்று ஆயிற்றே? சூது, ஆன்றோரால் தள்ளப்பட்டதேயன்றிக் கொள்ளப்படவில்லையே? அத்தகைய சூதினை அடியார் ஒருவர் ஆடலாமோ?

ஒரு செயல் பாவம் புண்ணியம் என்பது வெறும் செயலாலே மட்டும் அமையாது. அதன் பயனாலேயே அது அமையும்.

ஒருவனை மற்றொருவன் கொல்ல வருகிறான். கொலைக்குப் பயந்து அவன் ஒளிந்து கொள்கிறான். இடையில் நின்றான் ஒருவனை நோக்கி, 'அவன் எங்கே?' என்று கொல்ல வந்தவன் கேட்கிறான். 'இதோ இங்குதான்

ஒளிந்திருக்கிறான்' என்று அவன் கூறினால் அது உண்மைதான். ஆனால் அந்த உண்மையினால் விளைவது ஒரு கொலை. இந்தச் சந்தர்ப்பத்தில் 'இங்கு இல்லை' என்று கூறினால் அது பொய்யாயினும் ஓர் உயிர் காப்பாற்றப்படுகிறது. எனவே, பொய் மெய் என்பது அதனதன் பயனால் பெறப்படுகிறது.

தான் வாழ வேண்டும், தன்னைச் சார்ந்தார் வாழ வேண்டும் என்று சூதாடினால் அது பிழையேயாகும்.

தாம் செய்யும் ஒப்பற்ற சிவ புண்ணியச் செயலுக்குப் பழுது நேராதபடி இவர் ஆடியதனால் அது பாவமன்று; புண்ணியமே ஆகும் என்பதை உணர வேண்டும். திருமங்கையாழ்வார் வழிப்பறி செய்து அடியார்க்கு அமுதளித்தார் என்ற வரலாற்றையும் இத்துடன் வைத்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

"கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்"

என்பது திருக்குறள்.

அவர் திருக்குடந்தைத் தலத்தையடைந்து அங்கு எழுந்தருளியுள்ள இறைவரை ஆராக் காதலுடன் அஞ்சலி செய்து, அங்கு தங்கி, பொது இடத்தில் நாடோறும் சூதாடுவார். முதல் ஆட்டத்தில் தோல்வி அடைவார். முதலில் வைக்கும் பணயத்தை ஆடுகின்றவர்கள் கொள்ளத் தருவார். பின்னே பல முறையும் வென்று பெரும் பொருளீட்டுவார். ஆனால் சூதினால் வரும் பொருளைத் தாம் தீண்ட மாட்டார். அடியார்க்கு அமுது அமைக்கும் பணியாளர்கள் அப்பொருளை எடுத்து உணவுக்குரிய வகைகளை வாங்கி, அமுது அமைத்து அடியார்க்குப் படைப்பார்கள். எல்லா அடியார்களும் அமுது செய்தபின் கடைப் பந்தியிலேயே இவர் உணவு கொள்வார். சூதாடியதால் அவர், 'நற்சூதர்', 'மூர்க்கர்' என்ற பெயர்களைப் பெற்றார். இவர் குணத்தினால் மூர்க்கரல்லர். தூய சிந்தையும், இன்சொல்லும், உயர்ந்த செயலும் படைத்தவர். மூர்க்க நாயனார் உறுதியாக அடியார்க்கு அமுது செய்விக்கும் திருத்தொண்டைப் புரிந்து முடிவில் சிவபதம் எய்தி இன்புற்றார்.

56. சித்தந்தெளிந்த சிவயோகி

இறைவன் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறைகிறான். அங்ஙனமாயின், ஏன், அப்பரமபதி கண்ணுக்குத் தோன்றுவதில்லை என்ற ஐயம் ஏற்படலாம். கலங்கிய தண்ணீரில் சந்திர சூரிய பிம்பம் தோன்றுவதில்லை. அது போல் அறியாமையாகிய அழுக்கினால் கலங்கிய மாசுடைய அகத்தில் இறைவன் தோன்ற மாட்டான். தேற்றாங்கொட்டையிட்டுத் தண்ணீரைத் தெளிய வைத்து, அதனுள் தோன்றும் சந்திரனைக் காண்பது போல், பஞ்சாட்சரமாகிய தேற்றாங்கொட்டையிட்டு ஆணவ அழுக்கை அகற்றிச் சித்தத்தைத் தெளிய வைப்போர் சிவத்தைக் காண்பர்.



சிவனடியாரை ஆதரித்தல், சிவ வேள்வி செய்தல், திரு ஐந்தெழுத்து ஓதுதல் ஆகியவற்றை நியதியாக மேற்கொண்ட சோமாசிமாற நாயனார், சித்தத்தைத் தெளிய வைக்கும் முறையை நன்கு அறிந்து பயின்று வந்தார்.

"சித்தந் தெளிய சிவன் அஞ்
செழுத்தோதும் வாய்மை
நித்தம் நியமம் எனப்போற்
றும் நெறியில் நின்றார்"

என்னும் திருவாக்கால் இதனை அறியலாம்.

அம்பர் என்ற அரிய தலம் சோழ வள நாட்டிலே உண்டு. சிறந்த மாஞ்சோலை சூழ்ந்த அத்தலத்திலே



வேதங்களை நன்கு பயிலும் மறையவர் குலத்திலே சோமாசி மாற நாயனார் அவதரித்திருந்தார். சோம யாகம் செய்வோரை 'சோம யாஜி' என்பர். அதுவே 'சோமவாசி' என மருவிற்று.

பயன், புகழ் முதலியவற்றைக் கருதாமல் உலக நன்மை ஒன்றையே கருதி, சிவமந்திரங்களைக் கூறி சிவாக்கினி வளர்த்துச் செம்மையுடன் செய்யும் வேள்வியால் உலகம் உய்யும். அவ்வேள்வியினால் மழை பொழியும். பயிரும் உயிரும் தழைக்கும். சிவஞானத் தீ ஆன்ம போதத்தை அழித்து சிவபோதத்தை வளர்க்கும். சோமாசி மாற நாயனார் புகழும், பயனும் கருதாது சிவபெருமானுக்குரிய வேள்விகளை விதிமுறைப்படி நியதியாகப் புரிந்து வந்தார்.

"எத்தன்மைய ராயினும் ஈசனுக் கன்பரென்றால்
அத்தன்மையர் தாம்நமை யாள்பவர் என்று
கொள்வார்
சித்தந் தெளியச் சிவன் அஞ்செழுத்தோதும் வாய்மை
நித்தம் நியமம் எனப் போற்றும் நெறியில் நின்றார்"

எக்குலத்தினராயினும், எக்குணத்தினராயினும், வேறு எத்தன்மையராயினும் சிவபிரானுடைய அடியார்கள் என்றால் அவர்களே நம்மையாளும் பெருந்தகையாளர் என்னும் மெய்யறிவினை உடையவர் அவர்.

அடியார் உள்ளத்தில் சிவன் எப்போதும் நீங்காது உறைகிறான். நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன் அவன். ஆதலின், அடியாரை அரனாகவே கொண்டு வணங்குதல் வேண்டும். அவ்வாறு வணங்குவோர், அடியார்கள் இன்ன குலத்தினர், இன்ன தகுதியினர் என்ற வேற்றுமையைக் கருதக் கூடாது. கோத்திரமும் குலமும் உடம்பைக் குறித்தவை; உயிரைக் குறித்தவையன்று.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே"

இது அப்பர் பெருமானின் அமுத வாக்கு. ஆவுரித்துத் தின்பது அன்பிலாமை; இறைவனை நினைப்பது அன்புடைமை. அன்பும் அன்பிலாமையும் ஒரே சமயத்தில் ஒருவரிடம் நிகழா. இரவும் பகலும் ஒரே சமயத்தில் தோன்றுவதில்லை. ஆகவே, சிவனுக்கு அன்பு செய்து கொண்டே ஆவுரித்துத் தின்று உழலுதல் இயலாது. அவ்வாறு செய்வாராயின், அது அன்புடைமை ஆகாது. நேற்று வரை ஆவுரித்துத் தின்றுழன்ற ஒருவன், இன்று அதனின்றும் நீங்கி எங்கும் சிவனைக் கண்டு சிவபக்தி புரிவானாயின் அவன் எமது கடவுள். முன்னைய நிலையை நோக்காமல் வணங்குதல் வேண்டும். இந்த உண்மையை ஆதரவாகக் கொண்டே, சோமாசி மாற நாயனார் செய்த யாகத்தில் இறைவன் சண்டாள ரூபத்தில் வர இவர் வழிபட்டார் என்ற ஒரு வரலாறு எழுந்துள்ளது.

இறைவனை எப்போதும் நினைந்து நினைந்து உருகுகிற அவர், தம்பிரான் தோழராகிய நம்பியாரூரருடைய பெருமையைக் கேட்டு அவர் மீது அளவற்ற அன்பு கொண்டார். சீரும் செல்வமும் சிறந்த திருவாரூரை அடைந்து, மலர்மாலை தரித்து இறைவனுக்கு அணுக்கராக விளங்கும் வன்றொண்டரைப் பன்முறை தொழுதார். அவருக்கு இனிய நண்பராகி, அவருடைய திருவடியைச் சிந்தித்துக்கொண்டிருந்தார். திருவருளும் குருவருளும் பெற்று மன்றுளார் மலரடி நிழலில் எய்திப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

57. கல்லெறிந்த காதல்

இறைவனை மறவாதிருப்பதே பிறவாமைக்குரிய வழியாகும். "மீண்டும் பிறப்புண்டேல் உம்மை என்றும் மறவாமை வேண்டும்" என்று காரைக்கால் அம்மையாரும், "மறவாதிரு மனமே இது காண் நல்ல மருந்து" என்று பட்டினத்தடிகளும், "இனைத் துணைப் பொழுதும் மறந்துய்வனோ" என்று அப்பரடிகளும், "எத்தான் மறவாதே நினைக்கின்றேன்" என்று சுந்தரரும், "கமலமலரடி கனவிலு நனவிலு மறவேனே" என்று அருணகிரிநாதரும், "இணையடிகள் மறவாத மனமொன்று மாத்திரம் ஏழையேற் கருளு கண்டாய்" என்று இராமலிங்க அடிகளும் அருளியிருக்கின்றனர். இத்தனை பெரியோர்களும் கொண்ட இச் சிறப்பியல்பாகிய இறைவனை மறவாமையை உறுதியாகக் கொண்டு ஒழுகியவர் சாக்கிய நாயனார்.

எந்நிலையில் நின்றாலும்
எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள்
மறவாமை பொருளென்றே
துன்னியவே டந்தன்னைத்
துறவாத தூயசிவம்
தன்னைமிகும் அன்பினால்
மறவாமை தலைநிற்பார்

சாக்கிய நாயனார் சரித்திரம் சிந்தனைக்குரியது; வந்தனைக்குரியது. நம் நினைவுக்கு நெடுந்தொலைவில் நிற்பது.

தளர்ச்சியறியாத வளர்ச்சியுடைய நன்மக்கள் வாழ்கின்ற ஊர் சங்கமங்கை. அவ்வூரிலே வேளாளர் குலத்திலே ஒருவர் தோன்றினார். அவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். எல்லா உயிர்க்கும் அருளுடையவராகி ஒழுகி வந்தார். ஒழியாமல் மாறி மாறி வரும் இறப்பு, பிறப்பு என்னும் நோயைத் தவிர்க்க வேண்டும் என்னும் கருத்துடையவராய் வாழ்ந்து வந்தார்.

மதில் சூழ்ந்த காஞ்சி நகரை அடைந்த அவர், நல்ல ஞானம் பெறுவதற்குப் பல வழிகளையும் நாடுவராயினார். உய்வு நெறி கருதிச் சாக்கிய மதஞ் சார்ந்து, அம்மத நூல்களையெல்லாம் ஓதி உணர்ந்தார். பின்னர், ஈசன் அருள்கூட்ட சிவநெறியே தவ நெறியெனக் கருதினார். ஏனைய சமயங்கள், வினை ஒன்று உண்டு, அவ்வினை செய்தானைத் தானே வந்து சாரும் என்றும், வினைப் பயனைக் கூட்டுவிக்க ஒரு முதற் பொருள் வேண்டாம் என்றும் கூறுகின்றன.

சைவம் சொல்வதென்ன? வினை என்பது சடம்; ஆதலின் செய்தவனைத் தானே வந்து சாராது. ஆன்மா சித்தாயினும், சிற்றறிவும் சிறு தொழிலும் உடையது. ஆதலினால் ஆன்மாவும் தான் செய்த வினையைத் தானே ஏற்றுக் கொள்ளாது; சிறு குழந்தை தானே பாலை எடுத்துப் பருகாது; பாலும் தானே போய்க் குழந்தை வாயிற் புகாது; குழந்தைக்கும் பாலுக்கும் இடையே தாய் காலமறிந்து, இடமறிந்து புகட்டுவது போல், கருணை நிறைந்த இறைவன் ஆன்மாக்களுக்கு அவரவர் செய்த வினையைப் பக்குவமறிந்து ஊட்டுவான்; நோய்வாய்ப் பட்ட குழந்தைக்கு வேப்பங்கொழுந்து அரைத்து ஊட்டுவதுபோல் தீவினை செய்த ஆன்மாக்களுக்கு இறைவன் துன்பத்தை ஊட்டுவான் — என்கிறது சைவ நெறி.

"ஊட்டுவிப்பானும் உறங்குவிப்பானும்
இங் கொன்றோடொன்றை
மூட்டுவிப்பானும் முயங்குவிப்பானும்
முயன்ற வினை
காட்டுவிப்பானும் இருவினைப்
பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப்பானும் ஒருவனுண்டே
தில்லை யம்பலத்தே"

என்பது பட்டினத்தடிகளின் வாக்கு.

எனவே, வினை, வினை செய்தவன், வினைப் பயன், வினையைக் காலம் இடம் அறிந்து ஊட்டுபவன் என்ற இந்த நான்கும் இருந்தே தீர வேண்டும். இவற்றைத் தெளிவாக எடுத்து விரித்து விளம்புவது சைவ சித்தாந்தம். இதனை உணர்ந்த சாக்கிய நாயனார் சிவமே பரம்பொருள் என்று கொள்ளலானார். எந்த நிலையிலே நின்றாலும், எந்த வடிவம் கொண்டாலும், நிலைபெற்ற சிவபிரானுடைய திருவடியை மறவாமையே பொருள் என்று கருதிய அவர் சாக்கிய மதக் கோலத்தை மாற்றாமல், சிவபெருமானை மிகுந்த அன்பினால் இடையறாது சிந்தித்துக் கொண்டிருந்தார். இவர் சிவபக்தி மேற்கொண்டவராயினும், புறக்கோலம் புனையவில்லை என்பதால், புறக்கோலம் வேண்டியதில்லை என்பது பொருளல்ல. சிவபக்திக்குப் புறக்கோலமும் இன்றியமையாததுவே. அரசாங்கச் சேவகர் சில அடையாளங்களை அணிவது போலச் சிவனடியார்கள் திருநீறும் உருத்திராக்கமும் அணிதல் வேண்டும். எனினும், இவர் சாக்கிய சமயத்தில் நின்றார் ஆதலின் அவ்வேடத்தில் இருந்தபடியே சிவனை மறவாது ஒழுகினார். (தொடரும்)

‘பலனைப் பொறுத்தவரையில் எல்லா தலைவலி மாத்திரைகளும் ஒன்றுதான்’ என்பது உங்கள் எண்ணமானால்



உபயோகித்துப் பாருங்கள்



ஸ்க்விப் அளிக்கும்

அவேதன்®




அற்புத ‘எபெப்’ அடங்கிய டேப்லெட்டுகள்! இவை துரிதமான, பத்திரமான, நிச்சயமான நிவாரணத்தை அளிக்கின்றன!

‘எபெப்’ அடங்கிய அவேதன் டேப்லெட்டுகள் நிமிடக்கணக்கில் செயல்புரிந்து மணிக்கணக்காகப் பயனளிக்கின்றன.

தலைவலி, பல்வலி, முதுகுவலி, தசைகளர் பிடிப்பு, ஜலதோஷம்.ப்ளு, பெண்களின் அசௌகரியமான நாட்கள் மற்றும் இதர வலிகள், உபாதைகள் முதலியவற்றிற்கு—அவேதன்.

TTT® SQUIBB® ஸாராபாய் கெமிகல்ஸ்

® இ. ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்ப்பொரேடெட்டின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்காகும். காரம்சந்த் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமைபெற்றவர்கள்.



பிரான்சில் உள்ள அல்சேஷியன் ரெஜிமெண்டைச் சேர்ந்த ஒரு கர்னலின் மகனும், இளவரசருமான ஒட்டிக் என்ற பிறந்த குழந்தைக்கு ஒரு விநோதமான மெத்தை தயாரிக்கப் பட்டது. எப்படித் தெரியுமா?

நூறு வீரர்களின் மீசையை எடுத்து அந்த மெத்தைக்குப் பஞ்சாக அடைத்தார்கள்! 1786ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25ந் தேதி இது நடந்தது!

ஆதாரம்: பொது அறிவு

தகவல்: பி. வி. கிரி

பெண்ணின் பெருமை



பெண் டாக்டர் இல்லாமல், பெண் கு
மாஸ்தாக்கள் இல்லாமல், பெண் வக்கீல்
இல்லாமல், பெண் விஞ்ஞானிகள் இல்லாம
பெண் எழுத்தாளர்கள் இல்லாமல், நம்மால் வ
முடியும். ஆனால் தாய்மார்கள் இல்லாமல், உட
பிறந்த சகோதரிகள் இல்லாமல், சிநேகிதிகள்
லாமல், -- அதாவது ஆண்களிடத்தில் உள்
உயர்வையே கண்ணெனக் கொண்டு அன்பு செலு
நாம் அறியாதவாறு ஒவ்வொரு விநாடி
ஆக்குவித்து, ஊக்குவித்து, நம்மைக் காப்பாற்
அவர்கள் இல்லாமல் போனால் அப்
வாழ்க்கையே துக்ககரமாகிவிடும். -- டால்ஸ்ட

தகவல்: விஜய

நேரத்தைக் காட்டும் 'ட்யூன்'



பியானோ மேதையான விக்டர் போர்ஜ் நண்பர்களிடம் சொல்வதுண்டாம்: ''என்னுடைய பியானோ பாட்டாலேயே இப்போது என்ன நேரம் என்று சொல்ல முடியும்! கடிகாரமே எனக்குத் தேவையில்லை!'' நண்பர்களுக்கு ஒரு வியப்பு: பியானோவுக்கும் கடிகாரத்துக்கும் என்ன தொடர்பு? நிரூபித்துக் காட்ட விக்டர், 'டுடைங், டுடைங்' என்று பியானோவை அழுக்
ஒரு 'ட்யூனை'ச் சுரு
கூட்டினார்.

உடனே வீட்டுக்
எஜமானி அங்கு வந்து ''எந்த முட்டாள் பக
1-30 மணிக்குப் பியானோ
வாசிக்கிறான்? கூச்சலை நிறுத்துங்கள்!'' என்று கத்த ஆரம்பித்து விட்டாள்.

மேதை சிரித்துக் கொண்டே நண்
பர்களைப் பார்த்துக் கண் சிமிட்டின
ராம்!

தகவல்: எஸ். வத்ஸல

கடுகு சிறுத்தாலும்



உலகத்திலேயே மிகச் சிறிய புத்தகம் ஒன்றை யூகோஸ்லேவியாவில் ஒருவர் வெளியிட்டிருக்கிறார். அப்புத்தகத்தில் ஒரே ஒரு வார்த்தை தான் உள்ளது. அப்புத்தகத்தின் பெயர் 'உலகத்தை ஆள்வது யார்?' என்பது. புத்தகம் இக் கேள்விக்கு ஒரே வார்த்தையில் பதில் கொடுத்து விட்டது. அது தான்: 'பணம்'. இப்புத்தகம் அட்டையைச் சேர்த்து ஆறு பக்கம் இருக்கிறது. இதுவரை நான்கு பதிப்புக்கள் வெளிவந்து விட்டன!

ஆதாரம்: பொது அறிவு. தகவல்: பி. வி. கிரி

மரியாதை மொழி



சீன மொழிதான் உலகத்திலேயே
அதிக மரியாதைத் தன்மை வாய்ந்த
தாம். திருடர்களைக்கூட ''கூரைமேல்
நடந்து செல்லும் 'கனவான்கள்''
என்று அங்கு சொல்வது வழக்கம்.

ஜப்பானிய மொழியில் இரண்டு
வகையான எழுத்துக்கள் இருக்கின்
றன. ஒரு வகை எழுத்துக்களை ஆண்
களும், ஒரு வகை எழுத்துக்களைப் பெண்
களும் உபயோகிக்கிறார்கள்.

ஆதாரம்: எம். இ. வீரபாகும் பிள்ளை எழுதிய
பொது அறிவு. தகவல்: பொ. மைதூமல



ஏன் தாமதம்?

கவிஞர் இக்பாலுக்குப் பன்னிரண்டு வயது. அவர் ஒரு நாள் பள்ளிக்கூடத்துக்குத் தாமதித்து வந்தார். அதைக் கண்ட வகுப்பாசிரியர், இக்பாலை நோக்கி ''ஏன் தாமதம்?'' என்று கேட்டார்.

அதற்குக் கவிஞர் இக்பால், ''இக்பால் (கீர்த்தி) எப்பொழுதும் தாமதித்தே வரும்'' என்று சட்டெனப் பதிலுரைத்தார்.

தகவல்: பொற்குணன்


'சும்மா'க்கள் பலவிதம்

நாம் ஒரு நாளில் சும்மாப் பயன்படுத்தும் ஒரு சொல்தான் 'சும்மா'. சராசரியாகத் தொண்ணூறு முறை ஒரு நாளில் நாம் அதைப் பயன்படுத்துகிறோம். தனிப்பட்ட 'சும்மா'வுக்கு எந்த அர்த்தமும் இல்லாவிட்டாலும் பல அர்த்தங்களில் அதைப் பயன்படுத்துகிறோம்--- சும்மா! சிலவற்றைப் பாருங்கள்:



☐ 1. ''ஏண்டா, டூத் பேஸ்ட் வாங்கிக்கிட்டு வரச் சொன்னா பிரஷும் வாங்கிக்கிட்டு வந்திருக்கே?''

''இல்லே அண்ணா, பெரிய சைஸ் பேஸ்ட் வாங்கினா ஒரு பிரஷ் சும்மா கொடுக்கிறான்.''



☐ 2. ''ஏன் தம்பி, பி. ஏ. முடிச்சுட்டியே, இப்போ என்ன பண்ணறே?''

''சும்மாத்தான் சார், இருக்கேன்.''



☐ 3. ''ஏண்டா ரமேஷ், சும்மா அழறே?''

''அண்ணன் சும்மா அடிக்கிறாம்மா!''

☐ 4. ''நேற்று குத்துச் சண்டை பார்க்கப் போனாயாமே!''


''ஆகா! அஜித் சிங் சும்மா ஒரு கும் விட்டான் பாரு......!''



☐ 5. ''சும்மாச் சொல்லப்படாது. திருமூர்த்தி அவர்கள் ஆர்வமிக்க இளைஞர்.''

☐ 6. ''ஏன் சார்! உங்க கடையிலே அரிசி கிடைக்கும்னு செல்லப்பா சொன்னானே!''

''ஊ....ஹூ...... சும்மாச் சொல்லியிருப்பான்.''



☐ 7. ''டேய் பயல்களா! சத்தம் போடாமல் கொஞ்ச நேரம் சும்மா இருங்க.....!''

- என். ஆர். மோகன்


ஆஸ்திகன் ஒருவன் ஒரு குளத்தில் தவளைகள் கத்திக் கொண்டிருப்பதைக் கேட்டான். ''ஆகா! இந்தத் தவளைகளுக்குத்தான் எத்தனை கடவுள் பக்தி! 'ஹரா ஹரா' என்று சப்திக்கின்றனவே!'' என்றான்.

நாஸ்திகன் ஒருவன் கடவுளை வழிபட்டுக் கொண்டிருப்பவர் உச்சரிக்கும் வார்த்தைகளைக் கேட்டான். ''என்னப்பா இது! மடத் தவளை கத்துகிறது போல் கர்ணகடூரமாக இருக்கிறதே!'' என்றான்.

இதுதான் ஆஸ்திகனுக்கும் நாஸ்திகனுக்கும் உள்ள வித்தியாசம்!

— ஸ்ரீபெஸ்னன்





TVS

டி. வி. எஸ். பஸ் பாடிகளின் புதிய கவர்ச்சியான முன் தோற்றம்

டி.வி.எஸ். தேவைக்கு உகந்த பஸ் பாடிகளை எந்தவித சேஸிஸ் மீதும்—அசோக் லேலண்டு கோமெட், பெட்போர்டு, டாட்ஜ், பார்கோ டாடா மெர்சிடீஸ் பென்ஸ், வில்லிஸ் ஜீப், ஸ்டாண்டர்டு 20—தயாரிக்கிறார்கள். அவை மிகவும் உறுதியானவை—ஆனால் லேசானவை; எடை குறைவுள்ளவை. அதனால் எண்ணெய் செலவும், டயர் தேய்வும் குறைவு; சிக்கனமானது; காடு முரடான சாலைகளைச் சமாளிக்கும். பிரயாணிகளுக்கு மிக்க வசதி.

ஒவ்வொரு நாளும் சராசரி மூன்று பஸ் பாடிகள் கட்டுகிறோம். தேவைக்கு உகந்த கம்போசிட் முழு ஸ்டீல் பாடி, சிறிய பஸ், உல்லாஸ பஸ், எக்ஸ்பிரஸ் வான், டெலிவரி வான், பிக்-அப் வான், அம்புலன்ஸ், மூடிய அல்லது திறந்த லாரி, ஸ்டீல் டிரைவர் காபின், டிப்பர் பாடி முதலியன தயாரிக்கிறோம்.

TVS

மற்ற விபரங்களுக்கு:

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட், மதுரை
(டி.வி.எஸ். ஸ்தாபனம்)

31-3499A



வீடும் வெளியும்

அட்டைப் படக் கதை

எஸ். லட்சுமிசுப்பிரமணியம்

'ஜீப்'பிலிருந்து இறங்கியதும் ஜயம் அந்த வீட்டை ஒரு முறை நிமிர்ந்து பார்த்தாள். அசைவற்று நின்றவளின் தோளில் விரல் அழுத்த ராமு ஒரு முறை அவளை இலேசாகக் குலுக்கினான்.

"என்ன? இதுதான் நம் வீடு. பிடித்திருக்கிறதா உனக்கு?"

சாமான்கள் உள்ளே போகத் தொடங்கி விட்டன. ராமுவின் குரல் உள்ளிருந்து கேட்டது. அவள் இன்னும் உள்ளே நுழைய வில்லை. சற்று நேரம் அதிர்ந்தாற் போல் நின்றாள். நெஞ்சை அழுத்தும் ஏமாற்றம் அவளுள் எழுந்து குமுறிற்று.

காரை பூசாத சிவப்புக் கட்டடம். சுற்றிலும் அக்கறையில்லாமல் வளர விட்ட புதர்களின் செறிவு. சுற்றுப்புறத்தில் அருகில் வீடுகள் எதுவும் இல்லை. 'ஹோ' என்ற தூரத்து மலையருவியின் ஒலி அல்லாது அங்கே விரவிய கனத்த அமைதி. மெருகின்றிக் கடும் பார்வையாக, அவள் மேல் அது குனிந்து பார்த்தபடி நிற்கும் விதமாக, அவள் மனத்தில் ஒரு இலேசம் உறுத்திற்று. சற்றுத் தளர்ந்த நடையுடன் படியேறினாள்.

'ஜீப்'பை அனுப்பிவிட்டு உள்ளே வந்த ராமு அவளைப் பின்புறமாக நின்று அணைத்துக் கொண்டான். அந்த நெருக்கத்தில் தெரிந்த ஆதரவில், அவள் மனம் சற்று இலேசானது போல இருந்தது.

"உனக்குப் பிடிக்கவில்லை. அப்படித்தானே? என்ன செய்வது? இங்கே வாடகைக்கு வீடுகளே கிடைப்பதில்லை. இது ஒன்றுதான்— அதுவும் எனக்கு வேலைக்குப் போகப் பக்கமாக இருப்பதால் — எனக்கு ஏற்றதாகத் தோன்றியது."

அவன் சொல்வதை அவள் கவனிக்கவில்லை. தான் எழுப்பும் பழைய நினைவுகளுள் புகுந்து கொண்டிருந்தாள். சற்று நேரம் மௌனமாய்ச் சிந்திப்பதைப் பார்த்து விட்டு, ராமு சாமான்களைப் பிரிக்கும் பாவனையாக அப்பால் போய் விட்டான். அவள் ஜன்னல் மாடத்தில் உட்கார்ந்து கம்பிகளைப் பிடித்தபடியே வெளியே நோக்கினாள்.

அங்கிருந்து பாம்பு படுத்தாற்போல, வளைந்து வளைந்து இறங்கும் மலைப் பாதை தெரிந்தது. அது கோயமுத்தூருக்குப் போகும் சாலை. வழியில் அதிகம் காத்து நிற்காமல், வரும் பஸ்ஸில் இடமும் கிடைத்தால் இரண்டு மணி நேரப் பிரயாணம். ராமு அப்படித் தான் வந்து கொண்டிருந்தான். வாரத்துக்கு இரண்டு நாட்கள்.

வெள்ளிக்கிழமை மாலையிலிருந்தே அவள் மனத்தில் அந்தப் பரபரப்பு சூழ்ந்து கொண்டு விடும். வெட்கம் மேலிட, தன்னுள் ஊறித் தெழும் ஆவலை மறைத்துக் கொள்ளக் கையில் ஒரு புத்தகத்தோடு உட்கார்ந்திருப்பாள். அப்படியும் மாமாவின் குறும்புப் பேச்சுகளுக்குக் குறைவிராது.

இரவு எட்டு மணிக்கு வந்து சேருவான் ராமு. சாப்பிட்டானதும் மாமாவுடன் உட்கார்ந்து வேலையைப் பற்றிப் பத்து மணி வரையில் பேசுவான். அறையினுள் அவள் தனியாக அவனுக்காகக் காத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். சில சமயம் தூக்கம்கூட வந்துவிடும். ஆனால் அந்த உறக்கமும் கண்ணயர்வும், அவன் அருகே வந்து கன்னத்தில் நிமிண்டியபடி ஒரு கேள்வி கேட்கும் வரையில் தான். அப்புறம் அவனுக்குக் கிடைக்கும் நேரம் போதாது.



இரண்டு நாட்களையும் குழந்தைகள் விருந்து சாப்பிடுவதைப் போல் அனுபவித்து விடுவார்கள். எல்லாவற்றுக்கும் ஆசை மாத்திரம் இருக்கும். பொழுதுதான் இருக்காது. திங்கட்கிழமை விடியற்காலையில் அவன் பஸ்ஸுக்குக் கிளம்பியானதும், வீட்டில் மட்டுமின்றி, அவள் மனத்திலும் வெறுமை சூழ்ந்து கவ்விக் கொள்ளும். "மற்றவை அடுத்த வாரம். என்ன?" என்று அவன் ஆறுதல் சொல்வது போல, விடைபெற்றுக் கொள்ளும்போது, விரல்கள் அவளையறியாமல் ஐந்தை எண்ணும். ஐந்து விரல்களிடையே கிண்ணமாகக் குழியும் அங்கையைப் போல, மனம் கூம்பி நிற்கும்.

கண்ணெதிரே அவன் இல்லாவிடினும், அவன் நினைவுகள் அவளை வளைய வந்தபடி இருக்கும். சில சமயங்களில் அவன் அவளைத் தொடுவது போன்ற உணர்ச்சிகூட உண்டாகும். மனம் அந்தப் பிரமையில் இழைந்து நிற்கும் போது அது உண்மையாக உருவாகும் விடுமுறை நாட்களுக்காக ஏங்குவாள். அவன் அவளைத் தனியே சந்தித்ததும், கழுத்தை அணைத்தபடி குழந்தையாகத் தொங்குவாள்.

"நீங்கள் இருக்கும் இடத்துக்கு — காடாக இருந்தாலும் பரவாயில்லை — என்னையும் அழைத்துக் கொண்டு போய் விடுங்களேன். என்றால் இந்தப் பிரிவின் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை."

புன்னகை புரிந்தவாறு அவன் அவள் முதுகைத் தட்டிக் கொடுப்பான். "ஆகட்டும், பார்க்கிறேன். ஆறு மாதங்களுக்குத்தானே இந்த மலை வாசம் என்று பார்த்தேன்."

அவள் பிடிவாதமாகத் தலையை அசைத்தபடி கன்னத்தின் ஈரத்தை அவன் மார்பில் ஒற்றிக் கொள்வாள்.

அது அவர்களுடைய முதல் குடித்தனம். தனியாக அமைக்கும் வாழ்க்கை. அது அந்த வீட்டில் ஆரம்பமாக வேண்டும் என்று இருந்தது.

"தனியாக இருக்க வேண்டுமே என்ற பயமா?" என்று கேட்டான் ராமு.

"இல்லை. நீங்கள் இருக்கும்போது எனக்கு என்ன பயம்?"

"நாளையோடு நமக்குக் கலியாணமாகி மூன்று மாதங்கள் ஆகிறது. உனக்கு நினைவிருக்கிறதா ?"

"நானே உங்களிடம் சொல்ல வேண்டும் என்று இருந்தேன்."

"சௌகரியம் இல்லாத வீடானாலும் நான் எப்பொழுதும் உன் கைக்கெட்டியவனாக இருக்

கிறேன். வாரம் முழுதும் என்னைத் தேட வேண்டியதில்லை. அதை நினைக்கும்போது உனக்குத் திருப்தியாக இல்லை?"

அவள் அவன் கன்னங்களை விரல்களில் எடுத்துக் கொண்டாள். அவன் பேச்சின் இதத்தில் அவள் மனம் குழைந்தது. அவளையே துருவும் பார்வையாக நோக்கும் கண்களைச் சற்று நேரம் நோக்கிவிட்டுத் தன்னை அவன் அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டாள்.

"ஆமாம்."

வாரத்துக்கு ஐந்து நாட்களிலிருந்து, அவள் தனிமை நாளுக்கு எட்டு மணி நேரமாகச் சுருங்கி விட்டது. சில சமயம் அந்த இடைவேளை பத்து மணி நேரமாகவும் பெருகி விடும். "இன்று கான்கிரீட் போட வேண்டி இருந்தது. நடுவில் நிறுத்த முடியவில்லை...." என்று உடைகளைக் களைந்தபடி அலுப்போடு சொல்லுவான்.

ஊரில் வீடு நிறைய மனிதர்கள் இருந்தார்கள். மாமாவின் உரத்த குரலும், சளைக்காத குறும்புகளுமாக வீடு எப்போதும் கலகலவென்று இருக்கும். அவள் மனத்தில் ராமு அருகே இல்லாத ஏக்கம் விரவிக் கொண்டு நின்றாலும், அவள் கவனத்தை இழுப்பதற்கு, அவளை வலிய ஈடுபடுத்துவதற்கு, குழந்தைகளின் விளையாட்டுக்களிலிருந்து பெரியோர்கள் இடும் வேலைகள்வரை, நிறைய வாய்ப்பு இருந்தது.

இங்கே அவள் தனிமைக்கு மாற்றே இல்லை. பகல் முழுவதும் அவள் மட்டும் தனியே மணிப் பாம்பைப் போல் கவலிப்பாரின்றி வளைய வந்து கொண்டிருந்தாள். பக்கத்தில் வீடுகள் இல்லை. சற்றுத் தள்ளி இருந்த வீடுகளில் கணவன் மனைவி இருவரும் வேலைக்குப் போய் விடுவார்கள். சாலை வழியே நடந்து வரும்போது இருபுறமும் பூட்டிய கதவுகள்தாம் காட்சி அளிக்கும்.

அந்தப் பெரிய வீட்டின் விசாலமான அறைகள் அவள் மனத்தில் இனம் புரியாத ஒரு திகிலை எழுப்பும். பழுப்பேறிய பழைய சுவர்களை நிமிர்ந்து பார்த்தபடி கைகளை மடிமேல் கோத்தபடி உட்கார்ந்திருப்பாள். வயதுப் பொருத்தமில்லாத பெரியவர்களின் துணையில் விடப்பட்ட குழந்தையைப் போல அவள் உள்ளம் ஏங்கும். வீட்டின் அறைகளை அலங்கரிக்க, விரிப்புகளும் திரைகளும் தயார் செய்ய, பீரோவையும் உட்காரும் சோபாக்களையும் அழகு செய்ய, அவள் திட்டங்கள் போட்டதுண்டு. கற்பனையில் அவற்றின் நடுவே, ராமுவின் அருகே தானும் அமர்ந்து அவன் பேச்சை ரசிக்கும் காட்சியை நினைவில் வடித்துக் கொண்ட நாட்கள் உண்டு. ஆனால் அந்த வீட்டில் அவை எதுவும் உருவெடுக்கும் விதமாக அவளுக்குத் தோன்றவே இல்லை.

"பொழுது போக்க வழியா இல்லை? உனக்குச் சித்திரம் வரைவதுகூடப் பிடிக்குமே? ஜன்னலுக்கு ஜன்னல் உட்கார்ந்தால் எத்தனையோ படங்கள் எழுதலாமே! பூக்களைப் பறித்து விதம் விதமாக அழகு செய்து பார்க்கலாமே?" என்று அவளைத் தூண்டித் தூண்டிப் பார்ப்பான்.

"இங்கே அப்படி என்ன பூக்கள் பூத்துத் தொங்குகிறதாம்?" என்று கேலியாகத் திருப்புவாள் ஜயம்.

"உண்மைதான். நீ நல்ல பூந்தோட்டம் கூடப் போடலாம். இரண்டு ஆட்களை அனுப்பட்டுமா?"

அவள் நேர்முகம் கொடுக்காமல் தலையைக் குனிந்து கொள்வாள். அவன் முகத்தை நிமிர்த்தி அவன் கேட்பான்.

"ஜயம்! இங்கே உனக்கு என்ன பிடிக்கவில்லை?"

அவள் முகம் மரப் பாவையாக, உணர்ச்சிகளின் பொலிவின்றி நிற்கும். "நான் என்ன என்னவோ நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் நான் நினைத்தபடி இல்லை."

"நீ என்ன நினைத்துக் கொண்டு வந்தாய்? என்ன நீ நினைத்தபடி நடக்கவில்லை?"

"எனக்குச் சொல்லத் தெரியவில்லை" என்று விரல்களைச் சொடுக்கிக் கொள்வாள்.

மார்பு உயரம் வெள்ளை வெளேரென்று பசுவை ஓட்டிக் கொண்டு வந்து நின்றான் ஒரு பால்காரன். அவள் வெளியே கிளம்பிக் கொண்டிருந்த சமயம்.

"ஸ்டோரில்தான் வாங்குகிறீர்களா அம்மா?"

"ஆமாம்."

"அதே விலைக்கு நான் கொடுக்கிறேனே? இங்கேயே மாட்டைக் கொண்டு வந்து கட்டிக் கறக்கிறேன்."

அவள் சம்மதத்தின் பேரில், வாசலில் பால் கறக்க ஏற்பாடாயிற்று. வேலி ஓரம் நின்றபடி, கம்பத்தில் கட்டாவிட்டாலும் சாதுவாய் நின்ற பசுவைப் பார்த்துக் கொண்டிருப்பாள். குவளையுள் 'ஸர் ஸர்' என்று அடிக்கும் பால் பீறல். முட்டுப் புற்கோலை வைத்த தலை அசையாமல் நின்றும் பசு. அதன் பங்கு வரும்வரை ஒதுங்கி நின்ற மொழு மொழு வென்ற செப்புக் கன்று.

"உனக்கு எப்படித் தெரியும் நான் வந்தது?"

"நீங்க வந்தது தெரியாது. முன்னே இங்கே இருந்தவங்க என்கிட்டேதான் பால் வாங்கிக்கிட்டிருந்தாங்க."

"யார் அது?"

"ஒரு வருசம் இருக்கும். பெரிய அம்மா சீக்காளி. சுத்தமான பசும் பால்தான் செரிக்கும்."

"ம்."

"ஆனால் பாவம்.... உடம்பு தேறவே இல்லை. இங்கனயே உசிரு பூட்டுது."

அவளுக்குத் 'திக்'கென்றிருந்தது. வீட்டில் பாலுடன் நுழையும்போதே மனத்தில் ஒரு இலேசம் அடிவண்டலாய்ப் படிந்தது. இறவி எங்கே படுத்துக் கொண்டிருந்தாள்?

எழுந்து பல் தேய்த்துக் கொண்டிருந்த ராமு அவளைக் கண்டு திகைத்துப் போனான்.

"என்ன ஜயம் உனக்கு? முகம் வெளிறிப் போய் —"

"ஒன்றுமில்லை. இராத்திரி சரியாகத் தூங்கவில்லை" என்று மழுப்பினாள்.

"நான் தூங்க வரும்போதே நீ தூங்கிக் கொண்டிருந்தாயே?"

"அப்புறம் விழித்துக் கொண்டேன். சாப்பிடப் பிடிக்காமல் படுத்துக் கொண்டு விட்டேன்."



கோகோ மால்டீன்

புத்துணர்ச்சியும் வலிவும் அளிக்கும் லட்சிய உணவு பானம்

ஒரே ஸ்பூன் அளவு உட்கொள்வதில் உங்களுக்கு வேண்டிய எல்லாச் சக்தியும் கிடைக்கிறது...

முழு ஆடைப் பாலும், கோகோவும், சிறந்த தரமான பார்லி மால்ட்டும், குளுகோஸும் நிரம்பக் கலக்கப்பட்ட கோகோ மால்டீனில் வலுவான தசைகளும், திடமான எலும்புகளும் அடையவும், வலுவும் உரமும் பெறவும் வேண்டிய புரதங்கள், கார்போ-ஹைட்ரேட்டுகள், தாது உப்புக்கள் எல்லாம் உள்ளன. நீங்கள் சுறுசுறுப்புடன் செயல் புரிவதற்கு வேண்டிய மதிப்புயர்ந்த A, B, B-2 மற்றும் D வைட்டமின்கள் கோகோ மால்டீனில் இருக்கின்றன. ஆரோக்கிய நிலையிலும் நோயுற்ற நிலையிலும் இளையவர்களும் முதியவர்களும் அருந்தக்கூடிய லட்சிய ஊட்டப்பொருள் இது. கோகோ மால்டீனை அருந்தினால் அது ஓய்ந்துபோன நரம்புகளுக்கு இதமளிக்கிறது. படுக்கும்போது சூடாக அருந்தினால், ஆழ்ந்த உறக்கத்துக்கு வகை செய்கிறது.

கோகோ மால்டீன் லாபரடரீஸ்

உரிமையாளர்கள்: டிரேட் லிங்க்ஸ் பிரைவேட் லிட்., 46, புசா ரோடு, புது டில்லி-5. போன்: 52835

பிராந்திய விற்பனை ஆபீஸ்:

43, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை - 2. போன்: 85982 தந்தி: SOUTHLAND

TL-NP-30

ராமு அவள் அருகே வந்து கை இரண்டையும் தோள் மேல் மாலையாகப் போட்டு அவளை இழுத்துக் கொண்டான்.

"உண்மையைச் சொல்லு. உனக்கு என்ன உடம்பு?"

அவன் நெருங்கிய முகத்தையும் ஆவல் ததும்பும் கண்களையும் கண்டதும் திகைத்துப் பின்னடைந்தாள்.

"இல்லே. நீங்கள் நினைப்பதுபோல இல்லே."

அவள் கை அவன் கையுள் உயிரற்றுக் கிடந்தது. கன்னங்களில் அருவிகள் பளபளத்தன. எண்ணங்களில் மூழ்கி மூச்சுத் திணறிய அவள் தவிப்பு பார்வையில் தெரிந்தது.

"வேண்டாம். நம்முடைய முதல் குழந்தை. இங்கே வேண்டாம்."

தன்னை விடுவித்துக் கொண்டு அவள் உள்ளே போய் விட்டாள். இன்னதெனப் புரிபடாத ஒரு பரபரப்பு அவனை விழுங்கிக் கொண்டிருந்தது. அவன் அவ்வளவு தூரம் மனம் வெறுத்துப் போகும்படியாக எதுவும் நிகழவில்லை. ஆனால் புது மண வாசமாக இருக்க வேண்டிய அந்த வாழ்க்கை, ஏனோ ருசியற்று நகர்ந்து கொண்டிருந்தது? உலகமே சோபையற்றுக் காட்சியளித்தது.

குளித்துவிட்டு அறைக்கு வெளியே வந்து கொண்டிருந்தவள் ஒரு கணம் பனி தொங்கும் மலைச் சிகரங்களின் காட்சியைப் பார்த்தபடி நின்றாள். பிடரி போலக் கனத்து முரண்டு விழுந்த கூந்தல் விசிறிக் கொண்டு முதுகில் எழுந்தது. தோளில் நீர்த் துளிகளின் ஸ்படிகம் மினுமினுத்தது. அவசரமாகச் சுற்றிய ஆடையின் போர்வையில் அடங்காது சோப்பின் மணம் 'கம்'மென்று அவளிடமிருந்து எழுந்தது.

"உள்ளே போங்கம்மா.... காலே நேரத்துலே காத்துலே நிக்காதிங்க!"

திரும்பினாள். கைநிறைய சமையற் பாத்திரங்களை அடுக்கிக் கொண்டு வெளியே வந்து கொண்டிருந்தாள் தாயி. உள்ளே போகத் தொடங்கினாள்.

"இதுக்கு முன்னாலே இந்த வூட்டிலே நான் வேலே செஞ்சப்போ, ஒன்னைப் போலவே ஒரு பொண்ணு—"

ஜயத்தின் முகம் அவள் பக்கம் திரும்பிற்று. ஆவல் கலந்த வியப்பில் புருவங்கள் நெறித்தன.

"என்னவாம் அவளுக்கு?"

"ஒன்னுமில்லே. ரொம்ப நல்ல மாதிரி. யாருகிட்டேயும் பேசாது. பயந்த மாதிரி ஒக்காந்துக்கினே இருக்கும். ஒடம்புக்கு என்ன வலியோ தெரியலே. அழுதுக்கிட்டே இருக்கும்."


ஜயத்துக்கு உடல் முழுதும் ஒரு முறை சிலிர்த்தது. புடவையைக் கழுத்தைச் சுற்றி இழுத்துப் போர்த்திக் கொண்டாள். கால்கள் விட்டுக் கொண்டதுபோல நடுங்கின.

"உள்ளே போங்கம்மா. குளிரு அடிக்குது."

படுக்கை அறையில் அப்படியே கட்டிலில் படுத்துக் கொண்டாள். கட்டிலின் விழுகையில் தன்னோடு கண்ணாடியில் இன்னோர் உருவம் விழுவதைக் கண்டாள். அவளைப் போலவே ஒரு பெண். பயந்த சுபாவம். நசித்துப் போன உள்ளம். குழையும் முகம்.

"ஜயம். காப்பிக்கு நேரமாகிறது."

ஒரு காலி சோடா பாட்டிலை ஃப்ரிட்ஜில் வைத்துக் குளிரச் செய்யுங்கள். குளிர்ந்துபோன பாட்டிலை ஒரு மேஜையின் மேல் வைத்துப் பாட்டிலின் வாயைச் சற்று ஈரமாக்குங்கள். பின்னர் ஒரு ஐம்பது பைசா நாணயத்தைப் பாட்டிலின் வாயின் மேல் வைக்கவும். பாட்டிலை இரண்டு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். சில விநாடிகளில் காசின் ஒரு ஓரம் மெல்ல மேலே கிளம்பி 'டங்' என்ற ஓசையுடன் உட்காரும். இம்மாதிரி பலமுறை நடைபெறும். இது எதனால்?



பாட்டிலினுள் உள்ள குளிர்ந்த காற்று உங்கள் கைகளின் வெப்பத்தினால் சூடாகி விரிந்து காசை மேலே தூக்குகிறது. காற்றின் இத்தகைய சக்தியே மோட்டார் மற்றும் ஜெட் விமானங்களையும் ஓட வைக்கிறது.

- மங்களா சக்கரபாணி

கணவன் குரல் கேட்டதும் புடவையைச் சுற்றிக் கொண்டு எழுந்தாள். கதவுக்கு அப்பால் மறுபடியும் அவன் குரல் கேட்டது. மளமளவென்று உடை அணிந்துகொண்டாள்.

ஒரு மாதத்துக்கு மேல் ஆகிவிட்டது. கோயமுத்தூரிலிருந்து வந்து. மாறுதலுக்கு ஒரு நாள் அங்கே போய் வர ஆசை. ராமுவால் வரமுடியவில்லை. அவள் மட்டும் போய் விட்டு வந்தாள்.

மறுபடியும் கலகலப்பான தெருக்களும், கடை வீதிகளின் அமளியும், வீடு நிறையக் குழந்தைகளும் பெரியவர்களுமாக, பழகிய உலகம் அவளைக் கவர்ந்தது. மாமாவின் சிறு பெண்ணிலிருந்து மாமி வரை, ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாய் அந்தரங்கமாய் விளையாட்டாய், எத்தனையோ கேள்விகள். வாய்க்கு வந்தபடியே பரிகாச வார்த்தைகள். அதுவும் ஓர் இன்பமாகத்தானே இருந்தது. இரண்டு நாட்கள் நழுவியவிதம் தெரியவில்லை.

மாமா மறுபடியும் பஸ்ஸில் கொண்டு வந்து ஏற்றிவிட்டுப் போய் விட்டார். உள் எழுச்சியில், ஏக்கத்தின் வேகத்தில், ஒரு வலி நெற்றிப் பொட்டைத் துளைத்தது. எதிரே கடைகள், வழி நெடுகிலும் தெரிந்த ஜனங்கள் எல்லா உருவங்களும் எழுதி அழித்துவிட்டாற்போல, மங்கி ஒன்றோடொன்று இழைந்து உருண்டன.

"உங்களை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன்."

அவள் கண்ணைத் திறந்து பார்த்தாள். பேசிய அந்தப் பெண்ணுக்கு அவளைவிட இரண்டொரு வயதுதான் கூட இருக்கலாம். அவள் இருக்கும் பகுதியில், கடைத் தெருவிலோ, வீதியிலோ, பார்த்த ஞாபகம்.

"நீங்கள் அந்த மலை ஓர வீட்டில் இருக்கிறீர்கள், இல்லையா?"

"ஆமாம். உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள் ஜயம்.

"என் வீடும் பக்கத்தில்தான். அரை மைல் இருக்கலாம். கடைத் தெரு மூலையில் இருக்கிறோம்."

"நானும்கூட உங்களைப் பார்த்த ஞாபகம்."

"ஆமாம். உங்களுக்கு அதிகமாக வெளியே வரச் சந்தர்ப்பம் இல்லை. உங்களுடைய வீடும் நாங்கள் இருப்பதைப் போன்றதுதான். ஆனால் காற்று வசதியும், வெளிச்சமும் அதிகம். ஜன்னல் வழியே பார்த்தால் இயற்கையான, அழகான சூழ்நிலை—"

ஜயம் நிமிர்ந்து உட்கார்ந்தாள். முதல் தடவையாக அந்த வீட்டைப் பற்றிப் பாராட்டிக் கூறும் சொற்கள் அவள் காதில் விழுகின்றன. அதுவும் அவளுடனேயே வசிக்கும், அவளைப் போன்ற ஒரு பெண்ணிடமிருந்து.

"நீங்கள் அங்கே வந்திருக்கிறீர்களா?"

"ஓ! உங்களுக்கு முன்னால் இருந்த பெண் என்னுடைய பள்ளித் தோழி. அவளிடம் நான் சொல்வதுண்டு. உங்கள் வீட்டு மண்ணில் பூஞ்செடிகளும், கறிகாய் செடிகளும் நன்றாக வருமென்று. அவளுக்குத்தான் சிரத்தை இல்லை. அவள் கொஞ்சம் 'இன்ட்ரெஸ்ட்' எடுத்துக் கொண்டிருந்தால் உங்களுக்கு எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்."

"அந்தப் பெண்ணுக்கு ஏதாவது உடம்பா?"

"உடம்பு ஒன்றுமில்லை. அதற்குமுன் ஒரு குழந்தை பிரசவமாகுமுன்பே தவறிவிட்டது. அங்கே இருந்த போது அவளுக்கு மறுபடியும் தாய்மை அடைந்த நிலை. கொஞ்சம் பயமும் தயக்கமுமாய், வீட்டுக்குள்ளேயே ஒடுங்கிக் கொண்டிருந்தாள்."

"அப்புறம்—"!

"இப்போது சென்னையில் இருக்கிறாள். போன வாரம்கூடக் கடிதம் வந்தது. குழந்தை புஷ்டியாக 'ஜம்'மென்று இருக்கிறதாம்."

தன்னையறியாமல் ஏதோ தெளிந்தாற் போல, ஜயம் ஒரு முறை பெருமூச்சு விட்டாள். மனத்தில் மேகங்கள் கலைந்தாற்போல் ஒளிக் கதிர்கள் சிந்தின. சுற்றிலும் தெரிந்த காட்சிகளில் ஒரு ரம்மியம், நுகர்ந்த காற்றில் ஒரு மணம் தெரிந்தது. அப்பா! எவ்வளவு நிம்மதி!

உமா வரும் வழியில் அவளைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்க் காட்டினாள். அவளுடையதைப் போன்ற வீடுதான். அவள் காட்டிய அக்கறையில் தோட்டமும் வீட்டின் அறைகளும் அழகு கொண்டு விளங்கின. பார்த்த ஒவ்வொன்றிலும் உற்சாகமும் தெம்பும் தெரிந்தன. ஆதரவாய் வெகு நாட்கள் பழகியது போல, உமா முதுகைத் தடவிக் கொடுத்தபோது உடல் சிலிர்த்தது.

ராமு மாலையில் திரும்பி வந்தபோது நான்கு ஆட்களை வைத்துக் கொண்டு தோட்டத்தில் வேலை வாங்கிக் கொண்டிருந்தாள் ஜயம். இடுப்பில் வர்ணத் துண்டும் தலைக்கு மேல் கைக்குட்டையுமாக, சேலையை வரிந்து கட்டிக் கொண்டு, சிலை உயிர் பெற்றது போல வடிவமாக நின்றவளை, ஒரு கணம் வைத்த கண் வாங்காமல் பார்த்தான் ராமு. மூக்கின் மேல் விரலை வைத்துக் கொண்டான்.

"இப்போது நான் பார்க்கிறது புது ஜயம்தானே?"

"பழைய ஜயம்தான். வீடுதான் புதுசாகப் போகிறது."

"நீ என்ன சொல்கிறாய்?"

"தோட்டம் போடப் போகிறேன். பூஞ்செடிகள் வைக்கப் போகிறேன். கறிகாய் களும்கூடத்தான்."

"கொஞ்சம் உள்ளே வாயேன்" என்று அவன் உள்ளே அவளை இழுத்துப் போனான். அந்த ஒரு நாள் பிரிவும்கூடப் பொறுதவனைப் போல அவளை இறுக அணைத்துக்கொண்டான்.

"இப்போதுதான் நீ முன் மாதிரி உற்சாகமாய் இருக்கிறாய் ஜயம். கொஞ்ச நாட்களாய் நீ களையிழந்து இருந்ததைப் பார்த்தபோது, உன்னைப் பிரித்து என்னோடு அழைத்துக் கொண்டு வந்ததும்கூடத் தப்போ என்று நான் நினைத்ததுண்டு."

"அப்படி எல்லாம் சொல்லாதீர்கள். இன்னும் ஒரு வாரத்தில் பாருங்கள். இந்த வீடு எப்படி ஆகிவிடுகிறதென்று!"

அந்த மனமாறுதல் அவள் தோற்றத்துக்கே ஒரு முறுக்கேற்றி இருந்தது. காற்றில் கலந்த தாய்மையும் மணமும் அவள் வடிவில் மூழ்க வைப்பது போல், சூழ்ந்தன. கைகளில் குலுங்கிய வளையல்கள் சுடர் மூச்சு விட்டன. அவளிடமே ஒரு வெற்றியுணர்வு. புது ஒளி கொண்டு ஒளிர்ந்த தன்னம்பிக்கை அழகிட்டு நின்றது.

அவர்கள் வீட்டை விட்டுப் போவதற்கு முதல் நாள்.

அந்த ஐந்து மாதங்களில் வீடே எவ்வளவு மாறி விட்டது? ராமு வாசலில் ஒரு கூடை நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அருகே படிக்கட்டில் ஜயம். அவள் மடியில் வண்ண மலர்கள் குவிந்து கிடந்தன. ஒவ்வொன்றாய்ப் பொறுக்கித் தொடுத்துக் கொண்டிருந்தாள்.

"ஆசை தீர இன்றைக்கே பறித்து வைத்துக் கொள்" என்றான் ராமு.

அவள் கண்ணில் நீர் துளித்தது. அவளே தேர்ந்தெடுத்து வைத்து வளர்த்த செடிகளின் மேல் அவளையறியாமல் விளைந்திருந்த பற்றை நினைவுபடுத்துவது போல் இருந்தது அவன் கூறியது. ஏதோ பதில் சொல்ல வாய் எடுத்தாள். அப்போது வாசலில் கேட்டைத் திறந்து கொண்டு இளந் தம்பதிகள் உள்ளே வருவது தெரிந்தது.

"அவர்தான் பட்டே. நாளைக்கு இங்கே குடி வரப்போகிறவர். இங்கே டாக்டராக வேலை ஒப்புக் கொண்டிருக்கிறார். கூட வருவது மிஸஸ் பட்டே."

கைகளைக் குவித்தபடி இருவரும் உள்ளே வந்தனர். பட்டேயின் மனைவி சிறிது நேரம் அங்கேயே நின்றாள்; வியப்பில் கண்ணகல.

"எனக்கு இந்த வீடு ரொம்பப் பிடித்திருக்கிறது. எத்தனை விதமான பூக்கள். நீங்கள் வைத்ததா? யாரோ ஒருவருடைய வீட்டில் எவ்வளவு அக்கறை காட்டி யிருக்கிறீர்கள்?" என்றாள் ஜயத்தைப் பார்த்து.

"அப்படி ஒன்றுமில்லை. எனக்கு அது ஒரு சுவாரசியமான பொழுது போக்காக இருந்தது. அவ்வளவுதான். உள்ளே வாருங்கள்."

அவர்கள் உள்ளே வந்தார்கள். சாமான்கள் கட்டப்பட்டு கூடத்தில்


நரங்களிகளும், பக்குவப்படுத்தப்பட்ட பாலும் பழச்சாறும் கலந்து இனிய சுவையூட்டும்
புஹாரியின் பீச்மெல்பா, சிலோன்டிலைட், ஸ்பெஷல் டுட்டி ப்ருட்டி, ஹனிமூன் ஸ்பெஷல் மற்றும் வேறு எங்கும் கிடைக்காத நவீன விதவிதமான ஐஸ்கிரீம் வகைகள். திருமணம், விருந்து, உபசார விழா போன்ற விசேஷ வைபவங்களுக்கு புஹாரியை அணுகுங்கள்.
ஆராம்
புஹாரி ஹோட்டல்ஸ்
சென்னை


ARYAN
ஆரியன்
டி-லக்ஸ் மற்றும்
ஸ்டாண்டார்ட்
இவையிரண்டும்
தம்ப் க்ரிப்புடன்
கிடைக்கின்றன.
ARYAN TOOTH BRUSH
மிகவும் சிறப்பாகக் கழுவலாம்
நீண்ட காலம் உழைக்கும்
இந்தியாவின்
தலைசிறந்த
பிரஷ்கள்
Aryan
ஆரியன்
ஷேவிங் பிரஷ்
திறமைக்கும் கீர்த்திக்கும் சின்னம்!


கோபால் பல்பொடி
பல் வலி, பல் அரணை, வாய் நாற்றம்
பல்லில் இரத்தம் வடிதல், முதலிய
பல் வியாதிகளை குணப்படுத்தி
பல்களுக்கு வெண்மையும்
பலத்தையும் தருகிறது.
GOPAL TOOTHPOWDER
கோபால் பல்பொடி
தயாரிப்பாளர்கள்:— எஸ்.பி.எஸ். ஜெயம் அண் கோ.,
25, கீழ நாப்பாளையத் தெரு....... மதுரை.

தங்கத்தின் குறை





"ஆண்டவனே, என்னை ஏன் படைத்தாய்? மானிடர்களால் ஏற்படும் தொல்லை எனக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது......" என்று இறைவனிடம் தங்கம் முறையிட்டதாம்.

அதற்கு இறைவன், "ஏன், உன்னைத் தீயில் போட்டு வாட்டி எடுக்கிறார்களே, அதனால் இந்த வேதனையா?" என்று கேட்டார்.

"இல்லை, அங்ஙனம் செய்யாவிட்டால் நான் எப்படி என் மேனியெல்லாம் ஜொலிக்கப் பிரகாசிப்பேன்?"

"பின் எதனால்? உன்னைப் போகக்கூடிய குழம்பாக்கி எடுக்கிறார்களே அதனாலா?"

"இல்லை, இல்லை, அங்ஙனம் செய்யாவிட்டால் நான் எப்படி உன்னைப் போன்றும் கவசமாவேன்?"

"பின் என்ன, உன்னை உருக்கிக் கம்பி போல் இழுக்கிறார்களே அதனாலா?"

"அதுவும் இல்லை. அங்ஙனம் கம்பி போல் ஆக்காவிட்டால், நான் எப்படிப் பற்பல ஆபரணங்களாக மாறுவேன்?"

"பின் என்னதான் உன் குறையோ?"

"இவ்வளவுக்கு நல்ல முறையில் எல்லாரும் போற்றும் வகையில் என்னைப் பயன்படுத்தும் மனித குலம், என்னையும் ஒரு தராசிலிட்டு, எனக்குச் சமமாகக் கேவலம் குன்றிமணியையும் இன்னொரு தராசில் வைத்து எடை போடுகிறார்களே, அதை நினைக்கும் பொழுதுதான் என் மனம் மிகுந்த வேதனையடைகிறது!"

(திருச்சி தமிழ்ச் சங்கத்தில் தமிழ்ப் பெரியார் உ. வே. சாமிநாதய்யர் நினைவு விழாவில் தலைமை தாங்கிய திரு கி. வா. ஜகந்நாதன் சொன்னது.)

— தகவல்: அன்பன்

அறைகள் இன்னும் விசாலமாகத் தெரிந்தன. ஆனால் சுத்தமான தோற்றத்தில் ஓர் அழகு தெரிந்தது. ஜன்னல் வழியே புலனாகும் காட்சியை ஒரு வர்ணச் சித்திரமாக எழுதி இருந்தாள் ஜயம்.

"யார் எழுதியது இது?" என்று கேட்டார் பட்லே. ஜயம் தலையைக் குனிந்து கொண்டாள். பாராட்டுதலாக பட்லே ஒரு முறை கையைத் தட்டினார். அவர் மனைவியின் குறும்பு தெறிக்கும் கண்களில் விளையாட்டான பொறாமையும்கூடத் தெரிந்தது.

"நான் என் மனைவியிடம் சொல்வதுண்டு. வீட்டின் அழகும் நிறைவும் அதன் தோற்றத்தில் இல்லை. அதை வைத்துக் கொள்ளும் இல்லத்தரசியின் மன விசாலத்தில்தான் இருக்கிறது என்று. என்ன ஜூடா?"

"மிஸ்டர் ராம் அதிர்ஷ்டசாலி" என்றாள் அவள்.

அவர்கள் போனபிறகு ஜயம் ஒரு முறை வீட்டைச் சுற்றி வந்தாள். அவள் மனத்தில் ஓர் இனம் தெரியாத பெருமை துளிர்விட்டது. மற்றவரிடமிருந்து அவளுக்குக் கிடைக்காத ஓர் ஊக்கத்தை, மனத் திருப்தியை, அவள் இப்போது கொடுக்க முடிந்தது. மிஸஸ் பட்லே அங்கே நிம்மதியாக மனத் திருப்தியோடு வாழ்க்கை நடத்துவாள். வேலைக்காரியும் பால்காரனும் அவளிடம் தன்னைப் பற்றி மனத்துக்கினிய கதைகளையே சொல்வார்கள். வீட்டைச் சூழ்ந்த அந்தத் தோட்டமும், அவள் கருத்துடன் அலங்கரித்த அறைகளும் அவளை நினைவுபடுத்தும். ஏதோ ஒரு வெற்றி உணர்வு அவள் மனத்தை நிறைத்தது.

லாரி வந்தாயிற்று. கட்டிய சாமான்களை ஏற்றிக் கொண்டிருந்தார்கள். ஜயம் வாசற்படியில் நின்று கொண்டிருந்தாள். உள்ளே ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு வரப்போன ராமு, கையில் அந்தப் படத்தை எடுத்துக் கொண்டு வந்தான்.

"இதை விட்டு விட்டாயே, ஜயம்!"

"ஆமாம். வேண்டுமென்றுதான் விட்டு விட்டு வந்தேன். அதை அங்கேயே மாட்டி விடுங்கள்."

"என்னது? நீ எவ்வளவோ ஆசைப்பட்டு எழுதி வைத்திருந்தாயே?"

ஜயம் அவனைப் பார்த்தபடி நின்றாள். மேகங்கள் கலைந்து வழி விட்டிருந்தன. பனிச் சென்ற கதிரொளி அவள் மேல் மெருகிட்டது.

"இங்கே நாம் விட்டு விட்டுப் போகும் எல்லாமே நாம் ஆசையோடு சேர்த்தவை, வளர்த்தவைதாம். ஆனால் அதைப் பிறருக்காக என்று போற்றி வைத்து, அவர்கள் அநுபவிக்க விட்டு விட்டுப் போகும்போதுதான், அந்த முயற்சிக்கு ஓர் அழகும் பண்பும் உண்டாகிறது. இல்லையா சொல்லுங்கள்."

ராமு அவள் தோள் மேல் கையை வைத்தான். இலேசாக நடுங்கிய குரலில் அவளுடைய உணர்ச்சிப் பெருக்கு அவனுக்குப் புரிந்தது.

"நாம் ஓர் இடத்தை விட்டுப் போகும்போது, நம் உணர்ச்சிகளை, நம்மில் ஒரு பகுதியையே பின்னால் விட்டுவிட்டுப் போகிறோம் ஜயம். அதனால்தான் இந்த வீட்டைப் போன்ற ஓர் உயிரற்ற பொருளுக்கும் கூட ஒரு 'பர்ஸனாலிடி' வந்து விடுகிறது" என்றான்.

உண்மைதான். அவர்கள் இருவருக்கும் தாம்பத்திய வாழ்க்கை அப்போதுதான் உதயமாகி இருக்கிறது. வரும் வருஷங்களில் அவர்கள் பல ஊர்களுக்குப் போக வேண்டியிருக்கும். பல வீடுகளில் குடி இருக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சி ததும்புபவை: அமைதி நிறைந்தவை: சோகம் சூழ்ந்தவை. ஆனால் அவள் அவற்றைத் திறந்த மனத்துடன் ஏற்று அநுபவிப்பாள். அவளும் அவன் குழந்தைகளும் அவற்றுக்கும் ஒரு 'பர்ஸனாலிடி' ஏற்படுத்தி விட்டுத்தான் போவார்கள்; ராமு சொல்வதைப் போல.

ஒரு மன நிறைவுடன் அவன் விரல்களைப் பின்னிக் கொண்டாள் ஜயம். இருவரும் படி இறங்கி நடக்கத் தொடங்கினார்கள்.



(பாஷ்யம் தேகம் பயிற்சி செய்த படியே பேசுகிறார்)

பாஷ்யம்: பல்லே உடைத்து விடுவேன், படவா ராஸ்கல்! உனக்கு உடம்பிலே அத்தனை கொழுப்பா? பாஷ்யத்தை என்ன அசமஞ்சன்னு நெனச்சியோ? நான் முழிச்ச பேர் வழிடா. பார்ப்பதற்குத்தான் உடம்பு பூஞ்சையாயிருக்கிறதே தவிர, அத்தனையும் பீம பலம்டா, பீம பலம்! இப்படி யொரு குத்து, அப்படி ஓர் உதை விட்டேன்னு உன் தலை பம்பரமாக வல்லவா சுழலும்? கடைசியாகச் சொல்கிறேன்... சமர்த்துப் பிள்ளையா, லட்சணமா இந்த வம்பை எல்லாம் இன்றே இப்பொழுதே விட்டு விடு. இல்லா விட்டால்....

(சுவருக்கு நேராகப் பாய்கிறார்.)


(ஆண்டாள் பிரவேசம்)

ஆண்டாள்: அட, ராமா! இதென்ன கூத்து? ஒரு நாளும் இல்லாத திருநாளா தேகப் பயிற்சி செய்கிறேன்? யாரையோ வாயில் வந்தபடி யெல்லாம் திட்டுறேள்; ஆமா, அந்தக் குட்டிச்சுவர் என்ன பாபம் பண்ணித்து? அதை எதற்காக இப்படிப் போட்டு உதைக்கிறேள்?

பாஷ்யம்: பூசை கொடுப்பதற்கு ஒத்திகை நடத்தறேண்டி, ஒத்திகை. இந்தக் குட்டிச் சுவரை அந்த அயோக்கியப் பயலாக நினைச்சுண்டு தாக்கிப் பழகினால், நாளைக்கு அவனை நேருக்கு நேர் சந்திக்கும்போது சக்கைப் போடு போடலாமல்லவா?

ஆண்டாள்: ஐயையோ! இதென்ன வம்பு? வாய்ச் சண்டை போட்டால் போதாதா? கை ஏன் நீளணும்?

பாஷ்யம்: அவன் கை ஏன் எழுதணும்னு கேக்கறேன்?



கதையாவது உதை!

ஆண்டாள்: எவன் கையோ, என்ன எழுவோ, ஒன்றும் புரியவில்லையே! எக்கச்சக்கமாக எதிலேயாவது மாட்டிண்டு கம்பி எண்ணுவீர்களோ என்று பயமாக இருக்கு.

பாஷ்யம்: இந்த பாஷ்யமாடி கம்பி எண்ணுவான்?" அடி அசடே! நான் கொடுக்கிற குத்திலே அவன் உடம்பு 'டகுர் முகுர் டகுர் தாளம்' போடுமா, போலீஸைப் போய்த் தேடுமா? அதெல்லாம் ஒன்றும் பயப்படாதே! வெற்றி அடியேனுக்குத்தான்!

(பின்னே சின்னமணி எதையோ அவரிடம் தருகிறான். அதை இரகசியமாக வாங்கி வாயில் அடைத்துக் கொள்கிறார். தொடர்ந்து தேகம் பயிற்சி செய்கிறார்.)

ஆண்டாள்: நன்னாயிருக்கு நாடகம்! பொழுது விடிந்ததும் விடியாததுமாக இப்படியா என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கிறது? (கண்களைத் துடைத்துக்கொண்டு) ஏண்டா சின்னமணி! கடையிலிருந்து என்னடா வாங்கி வந்தாய்?" அவர் அதை வாயில் போட்டுக் கொண்டாரே!

சின்னமணி: அது ஒண்ணும் இல்லே அம்மா.... வெறும் பிரங்கி.

ஆண்டாள்: பிரங்கியா?

பாஷ்யம்: பயந்து சாகாதேடி! டபிள் பிரங்கி மாத்திரை, அவ்வளவுதான். தினசரி நாலு சாப்பிட்டால் உடம்பில் அசுர பலம் வருமாம்! ஹக்கீம் மஸ்தான் சாகிப் எனக்காக 'ஸ்பெஷ'லாகத் தயாரித்தது. பிடே பிடே பயில்வான்களான 'செப்பு ஒநாய்', 'ஷைத்தான் சிங்' முதலியவர்கள் இதை வாயில் அடக்கிக் கொண்டபின்தான் 'கோதா'வில் இறங்குவார்களாம்.

ஆண்டாள்: இந்தக் கண்ணராவியையெல்லாம் என் கிட்டே ஏன் சொல்கிறேள்? ஆமாம், யாரைப் பழி வாங்குவதற்காக இந்த ஏற்பாடு?

பாஷ்யம்: இதை உங்கிட்டே வேறே சொல்லி நீ சிரிக்கணுமா? ஆபீஸ் முழுக்கச் சிரித்தது போதாதா?


ஆண்டாள்: ஆபீஸ் முழுக்கச் சிரிச்சுதா? புரியறது!.... புரியறது.... மானேஜர் மறுபடியும் உங்களைத் திட்டியிருப்பாராக்கும்! அதுக்காக அவரை இப்படியா வஞ்சம் தீர்க்க நினைப்பார்கள்?

பாஷ்யம்: ஆபீஸ் மானேஜரை எவன் உதைக்கப் போறான்? இது வேறு விஷயமடி. வேறு விஷயம்.

(தபால்காரன் பிரவேசம். ஒரு பெரிய 'பார்சலை'ப் பாஷ்யத்திடம் தந்து விட்டுப் போகிறான். ஆண்டாள் அதைப் பார்த்து கைப்பற்றுகிறாள்.)

ஆண்டாள்: அத்தனையும் புத்தகங்களா? 'ஜப்பானிய ஜுஜுட்ஸ்' முறை', 'கும்கும் குத்து விடுவதெப்படி?', 'குஸ்திச் சண்டை — கண்ணீரின்றி', 'கழுத்தை முறித்தல் — முதல் பாடம்', 'மென்னியைத் திருகல் — மூன்றே வாரத்தில்'. உதைத்துப் பார்!''

பாஷ்யம்: எல்லாம் அருமையான குஸ்திப் புஸ்தகங்கள் கரைத்துக் குடித்தபின்தான் குருக்ஷேத்திரம்!





ஜி.எஸ்.பாலகிருஷ்ணன்

ஆண்டாள்: எனக்கு உடம்பெல்லாம் நடுங்கறது. நேற்று வரையில் தானுண்டு, தன் வேலையுண்டு என்று இருந்த நீங்கள் திடீர்னு ஏன் இப்படி மாறிவிட்டீர்கள்?

பாஷ்யம்: இதுதாண்டி என் விசுவரூபம்! சந்தர்ப்பம் வரும் போதுதானே அதை வெளிக் காட்ட வேண்டும்? நாளைக்கு அந்தப் பயலோட சண்டை என் கையில் என்ன பாடுபடப் போகிறது தெரியுமா? ஒரு பாட்டில் 'டிங்சர்' இருந்தால்கூடப் போறாது நான் பிறாண்டப் போகும் பிறாண்டலுக்கு. ஒரு மாதமாக அதற்குத் தானே நகம் வளர்க்கிறேன்? சொந்த நகத்துடன் நரிக் குறத்தியிடமிருந்து புலி நகம் வேறு வாங்கி யிருக்கிறேன். (பல்லை நறநற வென்று கடிக்கிறான்.)

(ஒரு பெரிய கூடையைப் பாஷ்யத்திடம் தந்துவிட்டு வெளியேறுகிறான், ஒரு காக்கிச் சட்டை.)

ஆண்டாள்: அவன் யாரு தடியன்? ஏதோ கூடையில் தந்து விட்டுப் போகிறானே? இந்தாங்கோ, உங்களைத்தானே. அவன் என்ன 'சப்ளை' பண்ணிவிட்டுப் போகிறான்? கத்தியா? கோடாலியா?

சென்னமணி (கூடையைத் திறந்து பார்த்து விட்டு): அம்மா, கத்தியுமில்லே கோடாலியுமில்லே. இதெல்லாம் கோழிமுட்டை!

பாஷ்யம்: கோழி முட்டை இல்லேடா என் சமர்த்தே. யானை முட்டை! என்ன ஆண்டாள், என்ன விழிக்கிறாய்? நேற்று வரையில் 'மடியாக' நீ தயாரித்த தளிகையைச் சுவைத்து வந்த எனக்குத் திடீரென்று முட்டை மேலே ஏன் ஆசை விழுந்ததுன்னு தானே? எல்லாம் அந்த அயோக்கியப் பயலை உதைக்கத்தான்.

ஆண்டாள்: யார் அவன், என்ன விஷயம்?

பாஷ்யம்: ஊரும் பேருமா முக்கியம்? அவன் நம் குடும்ப மானத்தைப் பறக்க விட்டிருப்பதல்லவா முக்கியம்?

ஆண்டாள்: குடும்ப மானமா? அப்படியென்ன அந்தக் கட்டேலே போறவன் என்னையும் குழந்தைகளையும் கூடவா அவமானப் படுத்தியிருக்கிறான்?

பாஷ்யம்: இப்பொழுதாவது உடம்பில் கொஞ்சம் சூடு பிறந்ததே! அந்த மடையன் கண்ணுக்கு நான் வெறும் கோமாளியாகத் தெரியறேன் போலிருக்கு. நான் காய்கறி பேரம் பண்ணுவதிலிருந்து குடும்பக் கட்டுப்பாட்டில் நம்பானியிருப்பது வரையில் எத்தனை விஷயங்களை 'நக்கல்' பண்ணியிருக்கிறான் தெரியுமா?

ஆண்டாள்: புரியும் படியாகத்தான் சொல்லுங்களேன். என்னையுமா இந்த வம்பிலே இழுத்திருக்கிறான்?

பாஷ்யம்: நீயும்தான் 'வாராஞ்சலி' பத்திரிகை படிக்கிறாயே! வாரா வாரம் நம் குடும்பத்தைக் கேலி செய்து அவன் எழுதுவது உன் கண்ணில் ஏன் படலே?

ஆண்டாள்: யார் அந்த அதிகப்பிரசங்கி எழுத்தாளன்?

பாஷ்யம்: அவன் பெயர் மட்டும் தெரிந்திருந்தால் இத் நேரம் மண்டையைப் பிளந்திருப்பேனே! புனை பெயருக்குள் மறைந்து

கொண்டல்லவா தாக்குகிறான், மடையன்? 'பருத்திக் கொட்டை' என்ற பெயர் எப்பொழுதாவது காதில் விழுந்திருக்கிறதா?

ஆண்டாள்: இருங்கோ, ஒரு நிமிஷம். இந்த 'வாராந்தரி'யைப் பார்த்து விட்டுச் சொல்கிறேன்....

பாஷ்யம்: நீ பார்க்க வேண்டாம்... நான் எல்லாம் நன்றாகப் பார்த்தாகி விட்டது. அட்டையைப் பார்த்தே சொல்கிறேன். அவன் உள்ளே என்ன எழுதியிருக்கிறான் என்று? இந்த இதழில் 'சிங்காரி ஒய்யாரி' என்ற ஒரு பெத்தல் நாடகம் எழுதியிருக்கிறான், உன்னை மையமாக வைத்து. உன் பெயரைக்கூட மாற்றவில்லை என்றால் எத்தனை திமிர் இருக்க வேண்டும்?

ஆண்டாள்: 'சிங்காரி... ஒய்யாரியா? ஏதோ பழைய காலத்துப் பாட்டு மாதிரின்னா இருக்கு?

பாஷ்யம்: பழைய காலத்துப் பாட்டே தான்! பயலுக்கு நிச்சயம் நாற்பது வயதுக்கு மேலே இருக்கும். இல்லாவிட்டால் இந்தப் பாட்டுத் தெரிந்திருக்க நியாயமில்லை.

ஆண்டாள்: ஆனால் 'சிங்காரி ஒய்யாரி'ங்கற சிருங்காரமான தலைப்பைப் பார்த்தால் யாரோ காலேஜ் பிள்ளை எழுதினது போலல்லவா இருக்கிறது?

பாஷ்யம்: போடி போ! உனக்கு எழுத்துலகத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது! காதல் கீதல்னு பிதற்றி ரொம்பப் பச்சையாக எழுதறதுகள் எல்லாம் கிழக் கோட்டான்கள்தான்! இதற்கு முதல் வாரமும் உன்னை நையாண்டி பண்ணியிருக்கிறான் ராஸ்கல். அதிலே என் தலையையும் உருட்டியிருக்கிறான். நீயும் நானும் சினிமாக் கொட்டகையில் 'ராஜாத்தி... நீ என் கண்ணுக்குட்டி' பார்த்தபோது உட்கார்ந்து பேசின பேச்சைப் பின்னால் உட்கார்ந்து குறிப்பு எடுத்திருக்கான் போலிருக்கு, மடையன், அதானடி 'ஆடி வரும் தேனே'ங்கற அபத்தக் கதையில்.

ஆண்டாள்: அந்தக் கதையா? நான்கூடப் படிச்சேனே! நம் சம்பாஷணை மாதிரியே இருக்கேன்னு நெனச்சேன். ஆனால் பத்திரிகையிலேதான் கதாபாத்திரங்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனைன்னு முதல் பக்கத்திலேயே போட்டு விடுகிறார்களே.

பாஷ்யம்: போட்டால் ஆச்சா? அது வெறும் 'ஹம்பக்!' என் பெயரைக்கூட மாற்றாமல் என்னைத் 'திருவாழத்தானாகச் சித்திரித்தால் சும்மா விடுவேனா நான்? நம் குடும்பத்தைப் போய் 'கௌரவர்கள் குடும்பம்'னு எழுத எத்தனை நெஞ்சழுத்தம் வேண்டும்? அது மட்டுமா? ஜானு, பானு, சின்ன மணி, கலா, கோண்டு, கப்புன்னு நம் குழந்தைகள் பெயரையே போட்டு மானத்தை வாங்கறானே மடையன்,

ஆண்டாள்: இப்பொழுது நினைவு வருகிறது! 'உன் குறுநகை போதுமடி' என்று கூட ஒரு கதை எழுதியிருந்தான் 'பருத்திக் கொட்டை'. அதைப் பத்திரிகாசிரியர் ரொம்பப் புகழ்ந்திருந்ததுடன், அவன் படத்தையும் பிரசுரித்திருந்தார்.

பாஷ்யம்: அப்படியா சங்கதி? கொண்டு வா, அந்தப் படத்தை! ஆசாமி யார் என்று தெரிந்து விட்டால் அரை மணி நேரத்தில் அவன் மென்னியைத் திருகி விடுகிறேன்.

(ஆண்டாள் உள்ளே சென்று ஒரு கிழிந்த பத்திரிகையுடன் திரும்புகிறாள்)

ஆண்டாள்: நல்ல வேளை! கதையைக் கிழித்த கோண்டு, அந்தக் கடன்காரன் படத்தைக் கிழிக்கலே. பார்த்தேளா அவன் கொம்பு மீசையையும், விழியையும்?

பாஷ்யம் (படத்தை வாங்கிப் பார்த்து): அசல் 'சாண்டோ' கணக்கான்னு இருக்கான். அகராதி புடிச்ச பயல்? எழுத்தாளன்னு ஏதோ மூக்குக் கண்ணாடி போட்டுண்டு சோனியா இருப்பான் என்றல்லவா நினைத்திருந்தேன்?

ஆண்டாள்: போச்சா தைரியமெல்லாம்? உங்க பெண்டாட்டியையும் பிள்ளைகளையும் எவனோ ஒருவன் கிண்டல் பண்ணறான். நீங்கள் பயந்து சாகிறீர்களே! பயப்படாமல் போங்கள் போர்க்களத்துக்கு.

பாஷ்யம்: ஆண்டாள்! நீயா இப்படிப் பேசுகிறாய்? அவன் கைகால்கள் 'கிண்'ணு என்னமா முறுக்கு முறுக்கா இருக்கு?

ஆண்டாள்: பேடித்தனமாக ஏதாவது பிதற்றுகிறீர்கள். புறப்படுங்கள் சீக்கிரம்.

பாஷ்யம்: அஹிம்ஸாவாதியான என்னை ஏன் அரக்கனாக மாறச் சொல்கிறாய்? போனால் போகிறான், அற்பப் பயல். அவன் எழுத்து நம் மீது ஒட்டிக் கொள்ளவா போகிறது?

ஆண்டாள்: நீங்கள் இவ்வளவு பயந்தாங்கொள்ளியா? எனக்கு வெட்கமாக இருக்கிறது!

(தபால்காரன் பிரவேசம்.)

பாஷ்யம்: தபால்காரன் மீண்டும் வருகிறானே! 'உதையும் குத்தும்' என்ற புத்தகம் தான் வந்திருக்கும். அதைத் திருப்பி அனுப்பி விடு, ஆண்டாள். திருப்பி அனுப்பி விடு.


தபால்காரன்: அம்மாளுக்கு மணியார்டர் வந்திருக்கிறது...

பாஷ்யம் (வாங்கிப் பார்த்து): அப்படியா சங்கதி? நீதானா ஆனைப்பட்ட 'பருத்திக் கொட்டை'? உனக்குக் கதைகூட எழுத வருமா? உன் கண்ணுக்கு நான் திருவாழத்தானாகவா தெரிகிறேன். இந்தா கையெழுத்துப் போடு... உன் கதைக்கு நூறு ரூபாய் வந்திருக்கிறது.

ஆண்டாள்: இதோ பாருங்கோ, இப்பொழுதே சொல்லிவிட்டேன். இதை இளிச்சவாயன் கணக்கா ஆபீஸிலே போய் நாலு பேர்கிட்டே உளறாதேயுங்கோ. நான் பெரிய எழுத்தாளராக மாறி 'நோபல் பரிசு' வாங்கணும்னு நினைத்துக் கதை இதை எழுதலே. மாதா மாதம் 'பட்ஜெட்'டில் துண்டு விழுகிறதே, அதைத் தவிர்ப்பதற்காகத்தான் 'பருத்திக் கொட்டை'யாக மாறினேன். பிறத்தியார் குடும்பத்தைப் பரிகசித்து வீண் பொல்லாப்புக்கு ஆளாக வேண்டாம் என்று எண்ணித்தான்....

பாஷ்யம்: என்னைத் திருவாழத்தானாகச் சித்திரித்தாயாக்கும். உன் கண்ணுக்கு நான் அவ்வளவு பெரிய அசடாகவா தெரிகிறேன்?

ஆண்டாள்: எப்பொழுதுமில்லே. எவனோ யோகாசன நிபுணனின் படத்தை நான் காட்ட, அதைப் 'பருத்திக் கொட்டை' என்று எண்ணி நடுங்கினீர்களே, அது போன்ற அரிய சந்தர்ப்பங்களில்தான்!



பிக்ஸட் டெபாசிட்கள்

கவர்ச்சிகரமான வட்டியில் ரூ 50,000/- வரை
இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

ஒரு வருடமும், அதற்கு மேலும் ஆனால் 2 வருடங்களுக்குள்ளாக	— 6¼ %
2 வருடங்களும், அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்குள்ளாக	— 6½ %
3 வருடங்களும், அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்களுக்குள்ளாக	— 6¾ %
5 வருடங்களும், அதற்கு மேலும் ஆனால் 7 வருடங்களுக்குள்ளாக	— 7¼ %
7 வருடங்களும், அதற்கு மேலும்	— 7½ %

மதராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் லிமிடெட்

எம். எல். ஏ. பில்டிங்ஸ் 150-A மவுண்ட் ரோடு, மதராஸ்-2
போன்: 82026 கிளை: 1231, தெற்கு மெயின் தெரு, தஞ்சாவூர்
டி. வி. நரஸிம்மன் எம்.ஏ., ஸி.ஏ.ஐ.ஐ.பி (செக்ரட்டரி)

Criterion-MII-929-TL

"உங்கள் குழந்தைக்கும் பிரத்தியேகமான பவுடர் தேவைப்படுகிறது— கால்கேட்டே அந்த நேர்த்தியான பவுடர்!"



கால்கேட் பேபிபவுடர் மிகவும் மென்மையானது. அதிகமாக வேர்வையை உறிஞ்சக்கூடியது. பட்டுப்போல் மிருதுவானது. அது குழந்தையின் இளம் சருமம் எரிச்சலடையாமல், நமைச்சலடையாமல் பாதுகாத்து குழந்தையை குளுமையுடன், சுகமாகவும், ஆனந்தத்துடனும் வைத்திருக்கும். உங்கள் குழந்தைக்கு இன்றே கால்கேட் பேபி பவுடரை வாங்குங்கள்!



1.7 TAM

- அதிசய ஏலத்தில் அதிசயமில்லை!
- தீர்க்கதரிசனம்
- தமிழ்க் கோயிலுக்குக் காணிக்கை
- புகழ் ஓங்குக!

பல்சுவைப் பக்கத்தில் 'அதிசய ஏலம்' பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. டச்சு நாட்டில் நடக்கும் அவ்வகை ஏலம் மற்ற நாட்டினருக்கு வேண்டுமானால் அதிசயமாக இருக்கலாம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் அவ்வகை ஏலம் அதிசயமல்ல! ஆண்டுக்கு ஒரு முறை தைப்பூசத்தன்று வடலூரில் ஒரு சந்தை கூடும். அச்சந்தையிலே அதிகமாக விற்கப்படுவது வாழைப்பழங்களே! பழக் கடைக்காரர் சீப்புச் சீப்பாகப் பழத்தைக் கையிலே உயர்த்திப் பிடித்துக் கொண்டு விலையை முதலில் அறிவிப்பார். வாங்குபவர்கள் தயங்கினால் முதலில் நிர்ணயித்த விலையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டே வருவார். விற்பனையும் நடக்கும். நானே மேற்கண்ட முறையில் பழம் வாங்கினேன்.

வீரப்பெருமாநல்லூர்
5—4—67 — தொ. அ. சுப்பிரமணியம்

நண்பர் ஜெயராமன் 2—4—67 இதழில் பல்சுவைப் பக்கத்தில் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள டச்சு நாட்டில் நடக்கும் அதிசய ஏலத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர் ஊரின் பக்கத்திலுள்ள நெய்வேலி சந்தையில் வாராவாரம் வாழைப் பழ ஏலம் தலை கீழாகத்தான் நடக்கிறது.

பெரிய அதிசயம் ஒன்றும் இல்லை.

நெய்வேலி
31-3-67 — சகுந்தலா

1962ம் ஆண்டு தேர்தல். தி. மு. க.வுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையே நடந்த கூட்டு முயற்சி முறிந்து விட்டது. இது குறித்து 1962ம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி ராஜாஜி கூறிய வாசகம்:

'இந்தக் கூட்டு முயற்சியின் முறிவையே திரு காமராஜுக்கு எனது புத்தாண்டு வாழ்த்தாக வைக்கிறேன்' என்பதாகும்.

1967ம் ஆண்டு ஏற்பட்ட தேர்தல் உடன்பாடு பலனளித்து விட்டதையும் காண்கிறோம். இதே போல் 1962ல் ஒன்று பட்ட முயற்சி இருந்திருந்தால் நிச்சயம் காங்கிரஸ் இதே போல் மண்ணைக் கவ்வியிருக்கும்.

இதை வைத்துப் பார்க்கும்போது 1962ம் ஆண்டின் ராஜாஜியின் சத்தியச் சுருக்கமான புத்தாண்டு வாழ்த்து எவ்வளவு அர்த்த புஷ்டியும், தீர்க்கதரிசனமும் வாய்ந்தது என்பதை எண்ணி எண்ணி இன்றும் நான் இன்புறுகிறேன்.

சென்னை—7
11—4—67. — வி. ச. வாசுதேவன்

"**க**ல்கி" இதழ் வாயிலாக டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலையம் திருவான்மியூரில் திறக்கப்படவிருக்கும் செய்தி கண்டு மிக்க மகிழ்ந்தேன். அரசாங்க அளவில் முன்னின்று செய்ய வேண்டிய பெரிய பணியை இவர்கள் சாதித்துக் காட்டியுள்ளார்கள். தமிழ் மேல் கொண்ட தணியாத பற்றுத்தான் இத்தகைய இமாலயச் சாதனையைச் செய்ய உதவியுள்ளது.

அவர் பெயரில் நிறுவப்படும் நூல் நிலையத்துக்குத் தமிழக மக்கள் ஒவ்வொருவரும் தம் சக்திக்கியன்ற காணிக்கையைச் செலுத்துதல் கடனாகும்.

பொருளுதவி செய்பவர்கள், எங்கே பணத்தை அனுப்ப வேண்டும் என்று தெரிவித்தால் என்போன்ற ஏழை எழுத்தாளர்கள் கூட எங்கள் காணிக்கையை அனுப்பி வைத்து மன நிறைவு பெறுவோம்.

சென்னை—2
30—3—67 — மு. இராமதாசு

பொருளுதவி செய்ய விரும்புவோர், டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை - 41 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

— ஆசிரியர்

"**நோ**யும் சேயும்" என்ற கட்டுரையைப் படித்தேன். டாக்டர் ஸ்ரீமதி இராஜம்மா சந்தானம் தெரிவிப்பது போல் நம் நாட்டு வைத்தியம், மேல்நாட்டு வைத்தியம் இரண்டிலும் அத்தியாவசிய அளவுக்குப் பயிற்சியளித்து வந்தது இந்திய வைத்தியக் கல்லூரி. சந்தர்ப்பச் சூழ்நிலையை அனுசரித்து நம் நாட்டு வைத்தியத்தையோ அல்லது மேல்நாட்டு வைத்தியத்தையோ அல்லது இரண்டினையுமேயோ தக்க முறையில் கடைப் பிடித்துத் தொழில் நடத்தி வந்தவர் பலர். நல்லவிதமாகச் செயல் புரிந்துவந்த இந்திய வைத்தியக் கல்லூரியை மூடிவிட்டதே ஓர் அரசாங்கம்......!

அந்த ஆட்சிதான் அஸ்தமனமாயிற்றே! புதியதொரு ஆட்சியும் உதயமாயிற்றே! இப் புதிய ஆட்சியில் இவ் அநீதி நீக்கப்பெற்று மூடப்பட்ட கல்லூரியும், மருத்துவமனையும் திறக்கப்படுமா?

சென்னை—5
28—3—67 — என். எஸ். ராஜகோபாலன்

திரு கே. பாலசந்தரின் படத்தை அட்டையில் போட்டு, அவரையும் வாசகர்களாகிய எங்களையும் கௌரவப்படுத்தி விட்டீர்கள். இந்த இனிய பாரதத்தினரின் புகழ் மேன் மேலும் ஓங்குக! தங்கள் கலைச் சேவையும், கலைஞர்களின் தகுதியையும், திறமையையும் சரியாக மதிப்பிடும் ஆற்றலும், பாங்கும் மேன்மேலும் வளர்க!


திருச்சி,
28—4—67 — ஜே. பி. பி. எஸ். மணி.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

உங்கள் குழந்தையை ஆரோக்கியமுடன் குதூகலமாக வைத்திருக்க உறுதுணை

உட்வர்ட்ஸ்

குடல் வலி, புளிப்பு, உப்புசம், பல்முளைப்புப் பருவக் கோளாறுகள் ஆகியவற்றிலிருந்து உடனடி நிவாரணம் தருவது உட்வர்ட்ஸ். எப்போதும் உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் உங்கள் வசம் இருக்கட்டும்.



100 ஆண்டுகளுக்கு மேலாக புத்திசாலித் தாய்மார்களால் உபயோகிக்கப் பட்டுவருகிறது.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி